# 50 வருடகால பாரம்பரியம்...

1964 முதல்

கடந்த காலத்தினையிட்டு
பெருமிதம் அடையும் நாம்
**எதிர்காலத்திற்கான**
**முயற்சிகளிலும்**
**ஈடுபட்டுள்ளோம்**

**கமத்தொழில் அமைச்சு**

80/5, "கொவிஜன மந்திரய",
ரஜமல்வத்த அவனியூ,
பத்தரமுல்ல,
இலங்கை.

தொலை.பேசி.: 011 - 2869553
தொலைநகல்: 011 - 2868910
மின்னஞ்சல்: ituagrimin@gmail.com
இணையம்: www.agrimin.lk

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

# வருடாந்த அறிக்கை

2014


**வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி**
லக்பொஹொர: சுவர்ணஜயந்தி மாவத்தை,
ஹுனுப்பிட்டிய, வத்தளை,
இலங்கை.

தொ.பேசி : 011 – 2930298 / 99
தொலை நகல் : 011 - 2947763
மின்னஞ்சல் : lakpohora@sltnet.lk
இணையம் : www.lakpohora.lk

வருடாந்த அறிக்கை தயாரிப்பு இணக்கத்திற்கான விருது 2013

தேசிய உற்பத்தி திறன் விருது - 2012/13




சிறந்த தேசிய வியாபாரத்திற்கான சிறப்பு விருது- 2013

தேசிய தரத்திற்கான சிறப்பு விருது - 2013

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கம்பனி ஒரே பார்வையில் | 06 |
| கூட்டிணைந்த தகவல்கள் | 07 |
| முன்நோக்கு மற்றும் பணி | 08 |
| நிதி சம்பந்தமான முக்கிய கட்டங்கள் | 11 |
| மைல்க்கல் 1964 இருந்து 2014 வரை | 12 |
| பொன்விழா ஆண்டு | 14 |
| கடந்த பத்து வருடங்களில் நிதி சம்பந்தமான முக்கிய கட்டங்கள் | 16 |
| தலைவரின் செய்தி | 18 |
| பொதுமுகாமையாளரின் கூற்று | 20 |
| பணிப்பாளர்கள் சபை | 22 |
| முகாமைக்குழு | 28 |
| முகாமைத் தீர்மானம் மற்றும் பகுப்பாய்வு | 30 |
| லக்பொஹொர குடும்பம் | 36 |
| எமது சமூகம் | 41 |
| கூட்டிணைந்த ஆட்சி | 46 |
| எமது புவியியல் ரீதியிலான பரவல் | 51 |
| ஆபத்து முகாமை | 52 |
| கணக்காய்வு மற்றும் ஆபத்து முகாமைக்குழு அறிக்கை | 54 |
| நிதிக்கூற்றுகள் | 57 |
| பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று | 59 |
| தலைவரினதும் மற்றும் நிதி முகாமையாளர்களினதும் பொறுப்புகள் பற்றிய கூற்று | 60 |
| சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை | 61 |
| விரிவான வருமானம் பற்றிய கூற்று | 62 |
| நிதி நிலைமை பற்றிய கூற்று | 63 |
| உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று | 64 |
| காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் | 65 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 66 |
| பிரதிநிதி பத்திரம் | 90 |



## நெல்லுக்கான நேரடி உரம்

நாம் நேரடி உர வகைகளாக யூரியா, மியூரியேட் ஒப் பொட்டேஸ், டிரிப்பில் சுப்பர் பொஸ்பேட். சல்பேட் ஒப் அமோனியா, கெசரய்ட், சின்க் சல்பேட் போன்றவற்றை வழங்குகிறோம்.



# ஒரே பார்வையில் கம்பனி




பொதுக்கூட்டுத்தானங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபாரங்களை பொதுக்கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்திற்கு ஏற்ப இந்தக் கூட்டுத்தாபனம் 1992 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் விதத்தில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி என மீள ஸ்தாபிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி விவசாய அமைச்சின் கீழ் வரும் முற்றாக அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு கம்பனியாகும் இந்த கம்பனி ஜேர்மன் குடியரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் 1964 ஆம் ஆண்டு ,1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி இரசாயன உரங்களை கொள்வனவு செய்தல், தரம் வாய்ந்த கலவை உரங்களை உற்பத்தி செய்தல், நாடு பூராகவும் உள்ள பிராந்திய களஞ்சியங்கள் , வினியோகத்தர்கள் மற்றும் வியாபார வலையமைப்பின் ஊடாக சந்தைப் படுத்தல். வினியோக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதன் மூலம் இலங்கை வாழ் விவசாய சமூகத்தின் உரத்திற்கான தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

பொதுக்கூட்டுத்தானங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபாரங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்திற்கு ஏற்ப இந்த கூட்டுத்தாபனம் 1992 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் விதத்தில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி என மீள ஸ்தாபிக்கப்பட்டது.

தற்பொழுது இந்தக் கம்பனி 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. தம்மன்கடுவ “எக்ரோ பேட்டிலைசர் கம்பனி” 2008 ஆம் ஆண்டு இந்தக் கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இது தற்பொழுது வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் பொலன்னறுவை களஞ்சியத் தொகுதியாக செயற்படுகிநது.

# கூட்டிணைந்த தகவல்கள்

**கம்பனியின் பெயர்**
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

**சட்டத்தின்தன்மை**
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி இலங்கையில் நிறுவப்பட்டுள்ள பூரணமாக திறைசேரியின் செயலாளருக்கு சொந்தமான கம்பனியாகும்

**கம்பனியின் பதிவிலக்கம்**
PB 499

**பதிவுக் காரியாலயமும் முகவரியும்**
லக்பொஹொர சுவர்ண ஜயந்தி மாவத்தை
ஹுனுப்பிட்டிய வத்தளை.
தொ.பேசி: 0112947764
தொலைநகல்: 0112947763
மின்னஞ்சல்: chairman@lakpohora.lk
இணையம்: www.lakpohora.lk

## பணிப்பாளர்கள்

**திரு. புத்திக்க மடிஹஹேவா**
தலைவர்
*18.02.2008 – 31.03.2014*

**திரு. சுதர்ஷ கனேகொட**
செயற்பாட்டு பணிப்பாளர்
*12.05.2010 – 31.03.2014*

**திரு. பிரேமசிரி அபேனாயக்க**
செயற்பாட்டு பணிப்பாளர்
*07.06.2010 – 31.03.2014*

**திரு. எச்.எம். அஜித் சந்திர**
மேலதிக செயற்பாட்டு பணிப்பாளர்
திறைசேரி நடவடிக்கை திணைக்களம்
பணிப்பாளர்
*20.05.2011 – 31.03.2014*

**திரு. என்.ஜி. ரத்னாயக்கா**
பணிப்பளர் (திட்டமிடல்)
விவசாய அமைச்சு
பணிப்பாளர்
*10.04.2013 – 27.10.2013*

**திரு. ஏ.எல்.ஏ. அசோக்கா சிரிவர்தன**
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
விவசாய அமைச்சு
பணிப்பாளர்
*28.10.2013 – 31.03.2014*

**திரு. நெவில் அபேரத்ன**
(சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்)
பணிப்பாளர்
*07.06.2010 – 31.03.2014*

**திரு. தம்மிக்க தகநாயக்க யாப்பா**
(சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்)
பணிப்பாளர்
*03.05.2013 – 31.03.2014*

**திரு. எஸ்.பி. மொரவக்க**
(சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ்)
கம்பனி செயலாளர்
*29.04.2005– 31.03.2014*

## முகாமைக் குழு

| | |
|---|---|
| திரு. பிரதீப் யசரத்ன | பொது முகாமையாளர் |
| திரு. பி.டி.எல். குமாரசிரி | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| திரு. பிரியங்க சமரவீர | முகாமையாளர் (நிதி) |
| திருமதி எச்.எம்.டீ.பீ. ஹேரத் | முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) |
| திரு. பீ.எஸ்.கே. ஜயகொடி | முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் இறக்குமதி) |
| திருமதி ஆர.பீ. சுரங்கனி போதிபால | முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை) |
| திரு. ஆர்.ஏ.பீ. பெரேரா | முகாமையாளர் (வினியோகம்) |
| திரு. டி.எம். என்.ஏ. திசானாயக்கா | முகாமையாளர் (தொழில் நுட்பம்) |



# முன்நோக்கு

பல்வகைப்பட்ட விவசாய சேவைகளை வழங்குனர் என்ற வகையில் உன்னத நிலையில் இருத்தல் மற்றும் அரசதுறை நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரி நிறுவனமாக இருத்தல்.




## பணி

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக “லக்பொஹொர” குடும்பத்தின் உச்ச பங்களிப்புடன் இலங்கையின் விவசாய மற்றும் கமநல சேவைத்துறையில் உற்பத்தி, வருமானம் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றினை அதிகரிப்பதற்காக பல்வகை சந்தைக் கேள்விகளுக்கும் ஏற்ற விதத்தில் உர உற்பத்தி மற்றும் விற்பனையின் ஊடாக கம்பனி இலாபகரமாக நிலைத்து நிற்பதனை உறுதி செய்தல்.



## ஏனைய பயிர்களுக்காக

மரக்கறி வகைகள் ,பழவகைகள், கிழங்கு, மிளகாய், கௌபி, நிலக்கடலை, பச்சைப்பயறு மற்றும் கரும்பு ஆகியவற்றுக்கான விசேட கலவை உரங்களை நாம் வழங்குகின்றோம்.



# நிதி ரீதியிலான முக்கிய கட்டங்கள்




| வருமானத்தின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள் | | 2014 | 2013 | மாற்றம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | % |
| வருமானம் | ரூபா | 2,563,549,727 | 2,450,132,816 | 5% |
| வரிக்கு முன் இலாபம் | ரூபா | 241,328,764 | 199,894,318 | 21% |
| வருமான வரி செலவுகள் | ரூபா | 62,869,313 | 73,037,738 | -14% |
| ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | ரூபா | 178,459,452 | 126,856,581 | 41% |
| பங்கிலாபங்கள் | ரூபா | 52,930,556 | 38,056,974 | 39% |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் | ரூபா | 3.55 | 2.52 | 41% |
| சொத்துக்கள் மீதான திரும்பல்கள் | % | 0.49% | 0.48% | 2.2% |
| உரிமையாண்மை மீதான திரும்பல்கள் | % | 4.6% | 3.4% | 36% |
| **நிதி நிலைமையின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள்** | | | | |
| மொத்த சொத்துகள் | ரூபா | 36,266,731,183 | 26,451,828,626 | 37% |
| மொத்த உரிமையாண்மை | ரூபா | 3,838,543,092 | 3,736,071,170 | 3% |
| வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்க | இல. | *50,245,608* | *50,245,608* | - |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து | ரூபா | 76.38 | 74.36 | 3% |

# மைல்கற்கள்

## 1964 இருந்து 2014 வரை

**1964**



உர ஏற்றுமதி உற்பத்தி மற்றும் வினியோக நடவடிக்கைகளுக்காக அரசாங்க கூட்டுத் தாபனம் என்ற வகையில் ஸ்தாபிக்கப்பட்டது

**1966**

ஒரு மணித்தியாளயத்திற்கு 35 மெற்றிக் டொன் என்ற செயற்திறன் கொண்ட இயந்திரம் ஹுனுப்பிட்டிய மத்திய களஞ்சியத்தில் தொழிற்பாட்டினை ஆரம்பித்தது.



**1969**



உரத்தினை ஏனைய பயிர்களுக்கும் அதாவது தேயிலை, தென்னை, இறப்பர் ஆகிய பயிர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

**1970**

“லங்காபொஹொர” என்ற வியாபாரப் பெயர் முதலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.



**1978**



மஹவ, வெலிகம,பொலன்னறுவை மற்றும் அநுராதபுரப் பிரதேசங்களில் பிராந்திய களஞ்சியங்கள் நிறுவப்பட்டன.

**1980**

சந்தைப்படுத்தல் மற்றும் விசேட வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.



**1992**



வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் கொண்ட கம்பனியாக மாற்றப்பட்டது. மற்றும் சுதந்திரமாக செயல்பாடுகளை ஆரம்பித்தல்.

**1994**

மானிய விலையில் உரத்தினை வழங்கி தேசிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல்



**2005**




மகிந்த சிந்தனை கொள்கைத்திட்டத்தின்படி நாடுபூராகவும் உள்ள நெல் விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கல்.

**2008**

ஒரு புதிய அத்தியாயம் எழுதப்பட்டது



**2010**
**2011**



- வீட்டு தோட்ட பயிர்ச் செய்கைக்காக 500 கிராம் கொண்ட சிறிய உரப்பக்கட்டுக்களை (Mini Pack) அறிமுகம் செய்தல்.
- பொதுத் திறைசேறியின் மூலம் "C" தரத்தில் இருந்து "B" தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டது.
- வரிக்கு பின் 73 மி. ரூபா வருமானம் ஈட்டியது.
- ISO 9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றது.
- பாரிய அளவிலான உற்பத்தி பிரிவில் தேசிய உற்பத்தி திறன் விருது கிடைக்கப் பெற்றது.

**2012**
**2013**

- கம்பனியின் ஆய்வுகூடத்திற்கு ISO/IEC/17025:2005 சான்றிதழ் கிடைத்தல்
- செயல் ரீதியிலான இணக்க மதிப்பீடுகளுக்கான இலங்கை தரநிர்ணய சபையினால் அங்கீகாரப் பத்திரம் வழங்கல்.
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2012/13 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கைக்கான செயற்பாட்டு இணக்கத்திற்கான விருது வழங்கல்.
- பரிய உற்பத்தி பிரிவில் சிறப்பு விருது அரச துறைப்பிரிவில் தேசிய வியாபார சிறப்பு விருது. 2013. தேசிய வணிகக் குழுவினால் வழங்கப்பட்டது.
- 2013 தேசிய தர விருது வங்களில் பாரிய அளவிலான உற்பத்தி பிரிவில் சிறப்பு விருது.

# பொன் விழா ஆண்டு





கம்பனியின் பொன்விழா ஞாபகர்த்தமாக முத்திரை மற்றும் முதல்நாள் கடித உறை வெளியீடு அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ரஜபக்ஷ அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.



சிறந்த உபகரணங்களுடன் மையப்படுத்தப்பட்ட கம்பனியின் புதிய ஆய்வுகூடம் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபகஷ அவர்களினால் கௌரவ விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன மற்றும் விவசாயத்துறை பிரதி அமைச்சர் வை.ஜி. பத்மசிரி ஆகியோரின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.









கம்பனியின் வளவுக்கு முன்னால் பயனிகளின் நன்மை கருதி ஒரு பஸ் தரிப்பிடம் கம்பனியினால் நிர்மானிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் முன்னால் உள்ள பாதைக்கு லக்பொஹர சுவர்ண ஜயந்தி மாவத்தை என பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.



பிரதேச ரீதியாக சிறந்த உரவிற்பனை நிலையங்கள் ஐந்தினை தெரிவு செய்யும் திட்டம்.






லக்பொஹொர ஸ்டார் தெரிவு செய்யும் திட்டம்

# கடந்த பத்து வருடங்களின் நிதி சம்பந்தமான முக்கிய கட்டங்கள்

| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SLAS | SLAS | SLAS | SLAS | SLAS | SLAS | SLFRS | SLFRS | SLFRS | SLFRS |
| | | | | (For 7 months) | (For 8 months) | | | | | |
| **விரிவான வருமானக்கூற்று** | | | | | | | | | | |
| வருமானம் | 2,008,121,747 | 1,738,890,120 | 1,597,921,714 | 900,461,713 | 1,370,080,315 | 1,904,299,851 | 2,246,402,738 | 2,496,268,383 | 2,450,132,816 | 2,563,549,727 |
| மொத்த இலாபம் | 225,039,530 | 123,581,353 | 236,228,785 | 204,414,682 | 221,286,371 | 322,826,103 | 414,124,001 | 310,189,751 | 621,684,097 | 575,467,461 |
| ஏனைய வருமானம் | 110,500,407 | 166,406,012 | 146,931,059 | 76,899,044 | 130,892,642 | 132,287,779 | 157,164,017 | 197,912,757 | 108,809,998 | 93,172,755 |
| வரிக்கு முன் இலாபம் | 46,977,085 | 20,738,590 | 3,599,741 | 26,957,610 | 35,088,271 | 42,411,705 | 73,979,009 | 159,544,495 | 199,894,319 | 241,328,764 |
| வரி விதிப்பு | (28,131,616) | (10,762,878) | (13,771,790) | (19,766,392) | (25,092,763) | (35,000,000) | (43,666,668) | (52,315,944) | (73,037,738) | (62,869,313) |
| ஆண்டுக்கான வரி | 18,845,469 | 9,975,712 | (10,172,049) | 7,191,217 | 9,995,508 | 7,411,705 | 30,312,341 | 107,228,551 | 126,856,581 | 178,459,452 |
| **நிதி நிலைமை பற்றிய கூற்று** | | | | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 444,456,080 | 444,456,080 | 444,456,080 | 444,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 76,939,154 | 1,616,307,519 | 1,616,307,519 | 1,616,307,519 | 1,616,307,519 | 1,986,087,280 | 1,986,087,280 | 1,836,179,780 | 1,835,723,580 | 1,835,723,580 |
| வருமான ஒதுக்கங்கள் | 184,394,619 | 194,370,332 | 184,198,282 | 191,389,499 | 201,385,007 | 208,796,713 | 224,109,054 | 1,285,578,730 | 1,397,891,510 | 1,500,363,432 |
| மொத்த உரிமையாண்மை | 705,789,853 | 2,255,133,931 | 2,244,961,881 | 2,252,153,098 | 2,320,148,607 | 2,697,340,072 | 2,712,652,414 | 3,624,214,590 | 3,736,071,170 | 3,838,543,092 |
| ஆதனம்,பொறிமற்றும் உபகரணம் | 98,704,757 | 1,638,495,136 | 1,647,477,060 | 1,642,814,214 | 1,686,442,553 | 1,902,075,430 | 1,895,412,152 | 1,908,557,760 | 1,882,887,059 | 1,879,174,306 |
| மூலதன தெரிற்பாட்டு வளர்ச்சி | 17,895,434 | 17,895,434 | 17,895,434 | 17,895,434 | 20,024,735 | 15,934,103 | 542,901 | - | - | - |
| தாமதப்படுத்தப்பட்ட வரிச் செலவுகள் | - | - | - | - | - | - | - | 4,862,949 | 73,037,738 | 5,561,375 |
| திறைசேரி உண்டியலகளில் முதலீடு | 94,059,906 | 113,633,853 | 132,782,037 | 146,109,366 | 172,614,796 | 332,205,456 | 434,767,955 | 471,025,753 | 338,620,163 | 369,088,140 |
| தொட்டு உணர முடியாத சொத்துக்கள் | - | - | - | - | - | - | - | - | 669,017 | 344,717 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - | - | - | - | - | 76,814,523 | 71,951,574 | - | - |
| தேறிய நடைமுறைச் சொத்து | 600,326,344 | 600,912,136 | 582,772,763 | 592,829,041 | 610,949,150 | 12,476,640,540 | 6,975,143,544 | 1,706,541,296 | 1,915,693,141 | 2,025,842,182 |
| தாமதப்படுத்தப்பட்ட வரி பொறுப்புகள் | - | - | - | - | - | - | - | - | 1,086,164 | 6,647,539 |
| குறுகிய/நீண்டகால கடன்கள் | - | - | - | - | - | 11,837,929,928 | 5,369,929,928 | - | - | 20,646,483,768 |
| **காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்** | | | | | | | | | | |
| தொழி. நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | (1,409,015,721) | (4,487,339,145) | (5,537,840,553) | (9,812,750,171) | (23,925,719) | (12,169,047,254) | (16,012,155,140) | 12,695,227,509 | (9,517,159,808) | (5,094,105,859) |
| முதலீ. நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | 1,584,272,550 | 4,509,295,472 | 5,347,791,109 | 9,796,712,574 | (85,865,511) | 12,216,587,459 | (36,565,665) | (8,458,411) | 83,232,936 | (498,105,232) |
| நிதி சம. நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | (6,287,476) | (30,008,448) | (40,493,187) | (19,176,247) | 46,739,763 | (159,725,222) | 16,168,483,382 | (13,079,312,780) | 9,575,483,282 | 5,654,013,585 |
| **ஏனைய தகவல்கள்** | | | | | | | | | | |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் ரூபா | 1.06 | 0.22 | (0.23) | 0.16 | 0.22 | 0.17 | 0.60 | 2.13 | 2.52 | 3.55 |
| ஒரு பங்கிற்கான பங்கிலாபம் ரூபா | - | - | - | - | 0.06 | 0.06 | 0.18 | 0.18 | 0.76 | 1.05 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து ரூபா | 16 | 51 | 51 | 51 | 46 | 54 | 54 | 72 | 74 | 76 |
| நடை மறை விகிதம் (நேரங்களின் எண்ணிக்கை) | 1.30 | 1.17 | 1.10 | 1.07 | 1.04 | 2.09 | 1.29 | 1.08 | 1.08 | 1.06 |



## தென்னைக்காக

தென்னைக்காக நாம் விசேட உரங்களை அதாவது YPM (ERP)(W), YPM(TSP) (D) , APM(ERP) (W) , APM (TSP) (D) , TODDY TAPPING (W) , TODDY TAPPING (D) போன்றவற்றை வழங்குகிறோம்.





# தலைவரின் செய்தி

2013/14 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் வரலாற்றில் ஒரு ஞாபக சின்னமாக அமைந்து காணப்படுகிறது. பயனளிக்கக் கூடிய வியாபார மாதிரிகளை பின்னணியாகக் கொண்டு கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரு உறுதியான புரட்சியின் ஊடாக வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி ஒரு இலாபகரமான கம்பனி என்ற நிலையினை அடைந்துள்ளது. என்பதனை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஐம்பது வருடங்களாக நாட்டிலுள்ள விவசாய சமூகத்தினருக்கு சேவைகளை வழங்கி நிலையான வளர்ச்சிப் பாதையில் சாதனை படைத்துவரும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி இவ்வேளையில் தனது பொன்விழாவினை கொண்டாடுகிறது. 2013/2014 வருடமானது செயற்பாட்டு ரீதியிலும் மற்றும் நிதி ரீதியிலும் வளர்ச்சியில் மிகச் சிறந்த ஒரு ஆண்டாக காணப்படுகிறது.

பண்டைக் காலம் தொட்டு இலங்கை ஒரு விவசாய நாடு என்பது நன்கறிந்த விடயமாகும். 1948 ல் இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து இன்றுவரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் விவசாய சம்பந்தமான பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளன இந்த வகையில் இந்த நோக்கத்தினை அடைந்து கொள்ளும் முகமாக 1964 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள விவசாய சமூகத்தினருக்கு தேவையான உரவகைகளின் மொத்த இறக்குமதியாளர், தயாரிப்பாளர், சந்தைப்படுத்துனர் மற்றும் வினியோகத்தர் என்றவகையில் இலங்கை உரக்கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது. அன்று தொடக்கம் நாட்டிலுள்ள விவசாய சமூகத்தினருக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி உதவிகளை வழங்கி வருகிறது. கம்பனிக்கு தலைமை தாங்கிய முன்நோக்குள்ள தலைவர்களின் வழிகாட்டல்கள், சக்திவாய்ந்த முகாமைக்குழு மற்றும் விசுவாசமுள்ள ஊழியர்கள் போன்றவர்களின் சேவை, கடந்த ஐம்பது வருடங்களாக தேசிய அபிவிருத்தியின் ஒரு முக்கிய தூனாக விளங்கும் இந்நிறுவனத்தினை தொடர்ச்சியாக கொண்டு நடாத்துவதற்கு எமது வசதியாக அமைந்தது.

2007/2008 ஆம் ஆண்டு ஆகும் பொழுது வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி இலாபமற்ற நிலையினை அடைந்துள்ளது. அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2008 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் தலைவராக நான் நியமனம் பெற்றதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இன்றியமையாத பல மாற்றங்கள் மற்றும் அர்ப்பணிப்புள்ள ஒத்துழைப்புடன்கூடிய கூட்டான வேலை மற்றும் தந்திரோபாய திட்டமிடல் என்பவற்றின் ஊடாக பாரிய உச்ச நிலையினை நோக்கி பயணிக்கக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது

2008/2009 ஆம் ஆண்டினுள் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் தேறிய சொத்துக்கள் 2,320 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட அதேவேளை 2013/2014 ஆம் ஆண்டு காலத்தினுள் இத்தொகை 3839 மி. ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

நீண்டகால தந்திரோபாயங்களை ஒழுங்கான முறையில் பிரயோகித்ததன் ஊடாக கம்பனி 2008/2009 ஆம் ஆண்டில் வரிக்கு முன் இலாபமாக காணப்பட்ட 35 மி. ரூபாவினை 2013/2014 ஆம் ஆண்டாகும் பொழுது 241 மி.ரூபாவாக அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

**இன்று வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனிக்கு 36 பில்லியன் ரூபா பெறுமதியான உறுதியான ஒரு ஐந்தொகை காணப்படுகிறது. எமது ஒரே பங்குதாரராகிய அரச திறைசேரிக்காக நாம் உருவாக்கியிருக்கும் குறிப்பிடத்தக்க பெறுமதியினையிட்டு நான் பெருமையடைகிறேன். 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நாம் வளர்ச்சியான பங்கிலாப கொள்கையினை மேற்கொண்டு வருகிறோம். இந்த வருடம் பணிப்பாளர் சபை 53 மி.ரூபாவை இறுதியான பங்கிலாபமாக வழங்க பிரேரணை செய்துள்ளது. இது இவ்வாறிருக்க கடநத 2012/2013 ஆம் ஆண்டில் நாம் 38 மி.ரூபாவை பங்கிலாபமாக வழங்கியிருக்கிறோம்.**

இது இந்தக் கம்பனியின் வரலாற்றில் அதிகூடிய இலாபமாக காணப்படுகிறது. இதற்கு மன்னைய சாதனையாக 212/2013 ம் ஆண்டில் காணப்பட்ட வரிக்கு முன் உள்ள இலாபமாக 199 மி. ரூபா பதிவு செய்யப்படுகிறது.

ஏக காலத்தில் 63 மி.ரூபா தொகையினை அரசாங்கத்திற்கான வரியாக 2013/2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி அதன் செயற்பாடுகளுக்காக ஒன்றுதிரட்டப்பட்ட அரசாங்க நிதியிலிருந்து எதுவித நிதி உதவிகளையும் பெறுவதில்லை. லக் பொஹொர உரம் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தி உயர்ந்த மற்றும் கீழ் மட்ட அளவில் அதனது வளர்ச்சியை நிலையாக பேணுவதே முகாமையின் முதல் முக்கியத்துவமாக காணப்படுகிறது. வியாபாரத்தின் சகல பகுதிகளும் மதிப்பீடு செய்யப்படுகிறது. மற்றும் செயற்பாடுகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க விரிவான மாற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

2011-2015 ஆண்டுக்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் 2013-2015 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு திட்டம் அமுல் செய்யப்பட்டு வருவதுடன் பின் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நாட்டில் வேரூண்டிக் காணப்படும் சில சமுக மற்றும் சூழல் ரீதியிலான சவால்களுக்கு தீர்வு காணக்கூடியதாகவும் மற்றும் சமூகத்தினருக்கு பரந்தளவிலான சேவையை வழங்கக்கூடியதாவும் வியாபார தந்திரோபாயங்களை துரிதப்படுத்தும் விதத்தில் எமக்கு புதிய தர நியமங்களை அமுல் செய்ய முடிந்துள்ளது எனவும் நான் நம்புகிறேன்.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் இந்த சகாப்தத்தின் வெற்றிக்கு சான்றாக எமக்கு பல விருதுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதாவது சர்வதேச தர நியமங்களுக்கான ISO:9001:2008 தரச் சான்றிதழ், இலங்கை உரக்கம்பனியின் ஆய்வுகூட இரசாயன பரிசோதனைக்கான ISO/IEC 17025-2005 சான்றிதழ், இலங்கை தேசிய தரத்திற்கான சிறப்பு விருது, தேசிய உற்பத்தி திறனுக்கான விருது, தேசிய வியாபார விசேட திறனுக்கான விசேட விருது, வருடாந்த அறிக்கை தயாறிப்பு இணக்கத்திற்கான விருது. போன்றவற்றை குறிப்பிடலாம்.

லக்பொஹொர குடும்பத்தின் சகல அங்கத்தவர்களும் திறமை உள்ளவர்களாகவும் அதிக ஈடுபாடு உடையவர்களாகவும் மற்றும் நிறுவனத்தின் மரபுரிமை தொடர்பில் பெருமிதம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் எதிர்காலம் தொடர்பில் அதிக ஆர்வமாகவும் காணப்படுகின்றனர்.

கம்பனியின் எதிர்கால வளர்ச்சிக்கு தடையாக அமையக்கூடிய மற்றும் செலவுகளை ஏற்படுத்தும் விதத்தில் கம்பனியின் திறமையை கட்டியெழுப்புவதற்கான சிறந்த கிரய அமைப்பினை நாம் பேணிவரவில்லை. அண்மைக்கால வருடங்களில் கம்பனி இளைஞர்களை பயிற்றுவிக்கவும் மற்றும் எமது அனுபவம் வாய்ந்த ஊழியர்களுக்கு மீள திறமை அளிக்கவும் கம்பனி முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. எமது விசுவாசமுள்ள ஊழியர்களின் நன்மை கருதி இந்த பொறுப்பினை தொடர்ந்து நடாத்தி செல்வதற்கு நாம் அவதானம் செலுத்தியுள்ளோம்.

லக்பொஹொர குடும்பம் தனது வியாபாரம் தொடர்பாக எப்பொழுதும் பெருமனதுடன் ஒத்தாசை வழங்குகிறது. எமது கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிகால வெற்றி அவர்களிடமே முழுமையாக காணப்படுகிறது. லக்பொஹெர குடும்பத்தின் அர்ப்பணிப்புள்ள சேவைக்காக நான் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஐந்து வருடத்தினுள் பயனளிக்கக்கூடிய வியாபார மாதிரிகளை அபிவிருத்திசெய்து நடைமுறைப்படுத்தியதன் காரணமாக எமது வியாபாரத்தின் சகல பகுதிகளிலும் நிலையான வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை நாம் காண்கிறோம். ஐந்து வருடத்துக்கு அப்பால், இந்த பயனளிக்கக்கூடிய வியாபார மாதிரிகள் தொடர்ந்துவரும் ஐம்பது வருடகால சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் எமக்கு ஒரு சரியான திட்டவரைபை தயாரிப்பதற்கு உதவும் என நம்புகிறோம்.

எனது மனமார்ந்த பாராட்டுகளை அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் விவசாயத்துறை அமைச்சருக்கும் மற்றும் தொடர்புடைய அமைச்சின் முன்னையநாள் அமைச்சர்களுக்கும் , ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரியின் செயலாளர் சம்பந்தப்பட்ட அமைச்சின் முனனைய நாள் செயலாளர்களுக்கும் மற்றும் இந்த வெற்றிக்காக உதவிய ஏனைய அரச ஊழியர்களுக்கும் 2013/2014 வெற்றிகரமான ஆண்டிலே எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கும் மற்றும் எமது முகாமைக்குழு அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எமது சகல பங்காளிகளுக்கும் நிலையான இலாபத்தினை உருவாக்குவதில் எமது தந்திரோபாயம் தொடரும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.



**புத்திக்க மடிஹஹேவா**

தலைவர்



# பொது முகாமையாளரின் கூற்று

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான வழிகாட்டி விவசாயத் துறையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரேரணைகள் பற்றி குறிப்பிட்டுள்ளது. அத்துடன் எமது சொந்த தந்திரோபாயங்களை எற்படுத்துவதிலும் முடிவான செயற்பாட்டில் நாம் ஈடுபட்ள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் நீண்டகால தந்திரோபாயங்களுடன் ஒன்றுபடுதலை உறுதி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை நாம் மதிப்பீடு செய்யவுளோம்.

உலகில் உள்ள ஏனைய நாடுகளில் காணப்படும் பல்வேறுவிதமான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி கவனம் செலுத்துகையில், இலங்கை விவசாயத்துறையின் துரித வளர்ச்சி அண்மைக்கால இலங்கையின் பொருளாதாரத்தின் ஒப்பீட்டளவிலான சாதாகமான முன்னேற்றத்துக்கு பாரிய பங்கு வகித்துள்ளது. சமாதான சூழ் நிலை நாட்டில் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் முடியுமான ஒவ்வொரு காணியிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 30 வருட காலம் நீடித்த கொடூரமான உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின்படி மானிய விலையில் உரங்கள் வழங்கப்பட்டது ஒரு உந்து சக்தியாக அமைந்துள்ளது. இது விவசாய அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க விடயமாகும். இச்சந்தர்ப்பத்தில் மொத்த விவசாய சமூகத்தின் அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான தேவைப்படும் பின்னணியினை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினால் பங்களிப்பு செய்ய முடிந்துள்ளது.

## வினியோக கட்டமைப்பு

2009 ஆம் ஆண்டிற்கு பிறகு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக பிராந்திய களஞ்சிய சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சமாதானத்தின் பின்னர் மேற்படி மாகாணங்களில் புதிதாக கைப்பற்றிய சந்தைக்காக உர வினியோகத்தினை மேற்கொள்ளும் நோக்கில் புதிதாக இருப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி தனது களஞ்சிய சாலைகளின் இயலளவினை படிப்படியாக 367 விவசாய சேவைகள் நிலையங்களுக்கு வினியோகிக்கக்கூடிய விதத்தில் விஸ்தரித்துள்ளது. மற்றும் நெல் உற்பத்தி விவசாயிகளுக்கும் மற்றும் ஏனைய பயிர்ச் செயகையில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் தேவையான உரத்தினை வினியோகிப்பதற்காக நாடு பூராகவும் 1000 ற்கு மேற்பட்ட அனுமதிபெற்ற விற்பனையாளர்களை நியமித்துள்ளது. நாடு பூரகவும் வினியோக வலையமைப்பில் 52 பிராந்திய உர விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. புதிய சந்தைக்கு அடையாளம் காணப்பட்ட மற்றும் புதிய பொருட்களை உருவாக்கி சந்தைப் படுத்துவதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களை கவர்வதுடன் தற்பொழுது காணப்படும் வாடிக்கையாளர் மீதான உறவு விரிவுபடுத்தப்படுகிறது..

## சந்தைப்படுத்தல்

சந்தையில் பெறும் பங்கினை கைப்பற்றுவதற்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு தேவையான திறமையான தந்திரோபாயங்களை பிரயோகிக்க முடிந்துள்ளது. இதன் பிரதிபலனாக நிறுவனத்தின் விற்பனை பரிமாணத்தின் பங்கு சந்தையில் படிப்படியாக விரிவடைந்துள்ளது. இந்த போட்டி காரணமாக விற்பனை அதிகரிப்பின் மூலம் நிறுவனத்தின் வருமானம் மற்றும் இலாபம் என்பன அதிகரித்துள்ளன.

லக்பொஹொர என்ற உறுதியான வியாபார நாமத்தின் மூலம் பொருட்களை கடந்த காலங்களில் விற்பனை செய்ததன் மூலம் போட்டியாளர்களிடையே ஒரு கீர்த்தியினையும் புகழினையும் பெற்றுக் கொண்டுள்ளது.

எனவே நாடு பூராகவும் உள்ள விவசாயிகளின் மனதில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் உரமே மிகச் சிறந்த உரமாகும் என ஆழமாக பதிந்துள்ளது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் இந்த வியாபார நாமத்தின் புகழ் உள்ளூர் சந்தையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்நிறுவனம் விசேடமாக நகர்புறங்களில் வீட்டுத் தோட்ட செய்கைக்காக சிறு உரப் பக்கட்டுகளை (Mini packet) விற்பனை செய்யும் புதிய சந்தை தந்திரோபாயங்களையும் செயற்படுத்தி வருகிறது.

வாடிக்கையாளர்களின் திருப்தி பற்றி கண்டறிவதற்கான ஆய்வுகள் தொடராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. போட்டியாளர்களின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்ட அதே வேளை கடந்த காலத்திற்கான ஒப்பீட்டு ரீதியிலான சந்தையின் தரவுகள் பற்றியும் கவனம் செலுத்தி அடையாளம் காணப்பட்டது. சந்தையின் பாரிய பங்கினை அடைந்து கொள்வதற்கு தேவையான தந்திரோபாய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு முடிந்துள்ளது.

## மனிதவள அபிவிருத்தி

மனிதர்களை மையமாகக் கொண்ட உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக தொடர்ச்சியாக மன ஆற்றலை விருத்தி செய்வதற்கான நடவடிக்கையில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி விசேட கவனம் செலுத்தியுள்ளது. இதுவே இந்த வருடத்தில் எமது பிரதான செயற்பாடாக காணப்பட்டது.



**தற்பொழுது மகிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்திற்கு ஏற்ப தேசிய திட்டத்திற்காக மானிய விலையில் உரங்களை வழங்கும் முன்னணி நிறுவனமாக வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி காணப்படுகிறது. ஏனைய தனியார் துறை நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி சந்தையின் பெரும் பகுதியினை பிடித்திருக்கிறது.**

மனிதவளத்தினை திட்டமிடலானது வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் குறைந்த மற்றும் நீண்டகால நோக்கங்களை நிறைவேற்றுவதில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஊழியர்களின் உள்ளூர காணப்படும் முரண்பாடுகளுக்கு செயற்பாட்டு திட்டம் தீர்வு காண்கிறது. அத்துடன் ஊழியர் குழுவின் இயலுமை மற்றும் மனஆற்றல் என்பவற்றை அதிகரிக்க செய்வதற்கான மாற்றங்கள் இன்றியமையாததாகும்.

ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுத் திட்டத்திற்காக முகாமை சேவைகள் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. திறமையை கவனத்திற் கொண்டு சகல ஊழியர்களுக்கும் பதவி உயர்வுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கம்பனிக்காக வழங்கப்பட்டுளள சேவை மற்றும் தகுதி காண் பரீட்சையின் ஊடாகவும் பதவி உயர்வுகள் வழங்கப்படுகிறன. பயிற்சித் திட்டங்களின் மூலம் அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு எப்பொழுதும் ஊழியர்களுக்கு ஆர்வமூட்டப்படுகிறது. ஊழியர்களின் புதுவிதமான எண்ணங்கள் எப்பொழுதும் கருத்தில் கொள்ளப்படுவதுடன் திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகிறது. தனிப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாக கொண்ட விருது வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

அனுபவம் வாய்ந்த முகாமை தரத்தில் உள்ள ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் கல்வி பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு பட்டதாரி மாணவர்கள் பயிலுனர்களாக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். வெற்றிடம் காணப்படும் வேளையில் இவர்களில் பெரும்பாலானவர்கள் தகைமைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் நிரந்தர ஊழியர் குழுவிற்கு இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த எண்ணக் கருவின் மூலம் இளைஞர்களின் கல்விசார் பயிற்சிகளை பூர்த்திசெய்து கொள்ள உதவுவதுடன் நிறுவனத்திற்கு இளைஞர்களின் அறிவினைப் பெற்றுக் கொள்ளவும் ஏதுவாக அமைகிறது.

## QMS சான்றிதழ் வழங்கல்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி ISO:9001:2008 சர்வதேச தரச் சான்றிதழை தரம் வாய்ந்த சேவைக்காகவும் மற்றும் நிருவாக தொழிற்பாட்டுக்காகவும் பெற்றுக் கொண்டுள்ளது. இது அரச தொழில் முயற்சி ஒன்று பெற்றுக் கொண்டுள்ள முக்கியமான சாதனையாகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு சொந்தமாக தற்பொழுது காணப்படும் உரப்பகுப்பாய்வு ஆய்வு கூடம் அண்மையில் சர்வதேச தரத்திற்கு ஏற்ப அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வு கூடம் SLAB நிறுவனத்தினால் ISO17025:2005 சான்றிதழுக்காக அங்கீகாரம் அளித்துள்ளது. எமது நிறுவனம் நவீன உபகரணங்களை ஆய்வு கூடத்திற்காக பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில ஈடு பட்டுள்ளது. இதன் மூலம் தமது உரத்தின் மாதிரிகளை பரிசோதனை செய்து கொள்ள விரும்பும் உள்ளக மற்றும் வெளியக வாடிக்கையாளர்களுக்கு நன்மையளிக்கும் விதத்தில் காணப்படுகிறது.

சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு இலங்கை உரக்கம்பனி இந்தவருடம் ISO 14000:2004 தரச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு தயாராகி வருகிறது. அத்துடன் சூழல் சார்ந்த பல திட்டங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தகவல் தொழில் நுட்பம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி உயர் செயற்பாடு கொண்ட கனணிகளை உபயோகித்து புதிய மென்பொருள்களை உட்புகுத்தியும் மற்றும் பாவணையாளர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சிகளையும வழங்கி மென் பொருள் மற்றும் வன் பொருள் பாவனையாளர்களை சிநேக பூர்வமாக நடாத்துகிறது.

பாவனையாளர்கள் நிறுவனம் சம்பந்தமான தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இணையதளம் WWW.lakpohora.lk மீள வெளியிடப்பட்டிருக்கிறது.

## கூட்டிணைந்த சமூக பொறுப்புகள்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி எப்பொழுதும் சமூகத்திற்காக உதவிகளை செய்து வருகிறது. அத்துடன் இதனை ஒரு சமூக ரீதியிலான ஒரு பொறுப்பாக கருதுகிறது. கூட்டிணைந்த சமூக பொறுப்புகளை திட்டமிடவும் முகாமை செய்யவும் மற்றும் செயற்படுத்தவும் ஒரு செயற்பாட்டு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்திற்காக அவசியமான திட்டமிடுவதற்கும் மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்கும் நீண்ட காலத்தில் நிறுவன ரீதியில் நிலைத்து நிற்பது அவசியமாகும். குறுகியகால மற்றும் நீண்டகால தந்திரோபாய நோக்கங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி தந்திரோபாய திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் விவசாய சமூகத்தின் விவசாய வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களுடன் 2015 ஆண்டு ஒரு சவால் நிறைந்த வருடமாக அமையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். வளர்ச்சிக்கான புதிய சந்தர்ப்பங்களை அடைந்து கொள்வதற்கான பொறுப்புகளை செயற்படுத்துவதற்கு பிரசித்தமான மற்றும் பலம்வாய்ந்த ஒரு குழு இயங்குகிறது.

தரம் மற்றும் உற்பத்தி திறன் என்பவற்றை உயர்த்துவதன் ஊடாக ஒரு புதிய சகாப்தத்திற்கு எம்மை இட்டுச் செல்வதில் கடந்தகாலம் பூராகவும் தலைமைத்துவம், முன்னோக்கு மற்றும் தந்திரோபாய வழிகாட்டல்களை வழங்கியமைக்காக தலைவருக்கும் மற்றும் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் "லக்பொஹொர" குடும்பத்தின் சகல அங்கத்தவர்களுக்கும் இந்த நோக்கினை அடைந்து கொள்வதற்காக அவர்கள் காட்டிய தொடர்ச்சியான அக்கரைக்கும் நான் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமது வளர்ச்சியில் நம்பிக்கையான பங்காளர்களாக எம்மைக் கருதும் மற்றும் எமது சக்தியாகவும் வெற்றியின் பின்னணியாகவும் விளங்கும் நாடு பூராகவுமுள்ள எமது பிரதான வாடிக்கையாளர்களாகிய விவசாயிகளுக்கு, நாம் ஒன்றாக வளர்வது போன்று அவர்களது தேவைகளுக்கும் நாம் பொறுப்பாக இருப்போம் என மீண்டும் உத்தரவாதமளிக்கிறோம்.

**பிரதீப் யசரத்ன**
பொது முகாமையாளர்

# BOD பணிப்பாளர் சபை

திரு. சுதர்ஷ கனேகொட
செயற்பாட்டு பணிப்பாளர்





திரு புத்திக்க மடிஹறேவா
தலைவர்



திரு. பிரேமசிரி அபேனாயக்க
செயற்பாட்டு பணிப்பாளர்

திரு. தம்மிக்க தஹனாயக்க யாப்பா
பணிப்பாளர்





திரு. எச்.எம். அஜித் சந்திர
பணிப்பாளர்



திரு. நெவில் அபேரத்ன
பணிப்பாளர்



திரு. ஏ.எல்.ஏ. அசோக்கா சிரிவர்தன
பணிப்பாளர்

“**லக்பொஹெர** தொடர் பரம்பரையினரின் ஒரு பகுதியினர் என்பதில் நாம் பெறுமையடைகிறோம்.”

# பணிப்பாளர் சபை





### திரு புத்திக்க மடிஹஹேவா
தலைவர்

திரு புத்திக்க மடிஹஹேவா அவர்கள் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்க கம்பனியின் தலைவராக 2008 பெப்ரவரியில் நியமனம் பெற்றார். இவரது சேவை இன்றுவரை தொடர்கிறது. தற்பொழுது சுவர்ண கழும் கம்பனி குழுமத்தின் முகாமைப் பணிப்பாளராகவும்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் செயற்படுகிறார்.

திரு மடிஹஹேவா அவர்கள் வரையறுக்கப் பட்ட இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் என்ற வகையில் தலைமைத்துவம், கொள்கை உருவாக்கம் என்பவற்றில் 6 வருடங்களுக்கு மேலாக தமது சேவையை வழங்கி வருகிறார். அத்துடன் மக்கள் சார்ந்த தலைமைத்துவம் மற்றும் மாறுதல்களை ஏற்படுத்துவதிலும் பொறுப்பாக இருந்துள்ளார்.

திரு புத்திக்க மடிஹஹேவா தனியார் வியாபார நவடிக்கைகளில் 22 வருடகால அனுபவம் கொண்டவராக காணப்படுகிறார். தனியார்துறை வியாபாரங்களை வெற்றிகரமாக முகாமை செய்த அனுபவத்தினை பயன்படுத்தி, வரையறுக்கப்பட்ட இலங்கையின் உரக்கம்பனியின் ஊழியர்களுக்கு இடையிலான உறவுமுறை, தொழில்நுட்பம், செயலாக்கம், தொழில்முறை என்பவற்றுக்கு ஏற்ப இலங்கை உரக்கம்பனியின் சகல மட்டத்திலும் உள்ள ஊழியர்களுக்கும் வேலை செய்வதற்கான ஒரு விருப்பமான இடமாக கம்பனியினை உருவாக்குவதற்கு தனது வழிகாட்டல்களை வழங்கினார். திரு. மடிஹஹேவா அவர்கள் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றவர். தற்பொது அவுஸ்திரேலியா வியாபாரம் சம்பந்தமான நிறுவனம் ஒன்றில் கல்வி கற்று வருகிறார்.

### திரு. சுதர்ஷ கனேகொட
செயற்பாட்டு பணிப்பாளர்

திரு. சுதர்ஷ கனேகொட மேற்கு அவுஸ்தி ரேலியாவின் எடிக்கோவின் பல்கலைக் கழகத்தின் ஒரு விஞ்ஞான மானி பட்டதாரியாவார் (மென்பொருள் பொறியியலாளர்) இவர் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் செயற்பாட்டு பணிப்பாளராக 2010 மே மாதம் நியமனம் பெற்றார்.





## திரு. பிரேமசிரி அபேனாயக்க

செயற்பாட்டு பணிப்பாளர்

திரு.பிரேமசிரி அபேனாயக்க அவர்கள் 2010 ஆம் ஆண்டில் இலங்கை வரையறுக்கப்பட்ட உரக் கம்பனியில் செயற்பாட்டு பணிப்பாளராக நியமனம் பெற்றார். ஒரு வியாபார முயற்சியாளர் என்றவகையில் கிராமிய சமூகத்தினருக்கு விசேடமாக தென் மாகாணத்தில் விவசாயத் துறைக்கு பல்வேறு திட்டங்களின் ஊடாகவும் நன்மைகளை வழங்கியுள்ளார்.

## திரு. எச்.எம். அஜித் சந்திர

பணிப்பாளர்

திரு. எச்.எம். அஜித்சந்திர அவர்கள் இலங்கை கணக்காளர் சேவையில் 30 வருடகால அனுபவம் கொண்டவராவார். இவரது சேவைக் காலத்தில் கணக்காளர் என்ற வகையில் அரசாங்கத்தின் தேறிய திட்டமிடல் மற்றும் உயர் பயிற்சி நிறுவனம், SLIDA, திட்ட முகாமையாளர் எனற வகையில் அரச நிதி முகாமைத் துறையில் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளார். இவர் உலக வங்கியின் நிதி முகாமையாளர் மற்றும் கணக்காளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின நிதி வழங்கல் திட்டங்கள், அரச வியாபார முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் நிதிமற்றும் நிருவாக பணிப்பாளர், பிரதான அமைச்சுகளின் பிரதான கணக்காளர், வருமான பணிப்பாளர், வெளிநாட்டு உதவி முகாமைப் பணிப்பாளர் மற்றும் வெளிநாட்டு உதவி முகாமையின் மேலதிக பணிப்பாளர், திறைசேரியின் அரச கடன், மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் திறைசேரி நவடிக்கைகள் திணைக்களத்தின் நிதி மற்றும் நிருவாக பணிப்பாளர், போன்ற பதவிகளையும் வகித்துள்ளார்.

திணைக்ள சேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப் படாமல் கடல்சார் பல்கலைக்கழகம். அரச மருந்தக கூட்டுத்தாபனம் போன்றவற்றிலும் பணிப்பாளர் பதவிகளை வகித்துள்ளார்.

இவர் 2012 ஆம் ஆண்டு இலங்கை உரக்கம்பனியின பணிப்பாளராக நியமனம் பெற்றார் அத்துடன் கம்பனியின் வெற்றிக்காகவும் உழைத்து வருகிறார். கடந்த சில வருடங்களாக கம்பனியின் கணக்குகளில் நிலுவையாக காணப்பட்ட பிரச்சினையை தீர்த்து வைத்துள்ளார். கடன் அறவீடு, மொத்த செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் உள்ள பிரச்சினைகளை கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவுடன் கலந்தாலோசித்து தீர்த்து வைத்துள்ளார் இவர் மத்திய பொருளியல் மற்றும் ஆலோசனை பணியகத்தின் பணிப்பாளர் பதவியினையும் வகிக்கின்றார்.

இவர் ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் (விசேட) மற்றும் PGDM மற்றும் MBA பட்டதாரியுமாவார். இவர் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வியாபார கணக்காளராவார். மேலும் இலஙகை கணக்காளர் சஙகத்தின் தலைவராவார். இலங்கை AAT நிறுவனத்தின் இணை அங்கத்தவராவார். அத்துடன் சிங்கப்பூர் சிவில் சேவைகள் கல்லூரியின் பிரதான பயிற்சியாளராகவும் காணப்படுகிறார்.

# பணிப்பாளர் சபை





## திரு. நெவில் அபேரத்ன
பணிப்பாளர்

திரு நெவில் அபேனாயக்கா ஒரு சட்டத் தரணியாவார்.1984 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். சட்டமருத்துவம் மற்றும் விஞ்ஞான (கொழும்பு மருத்துவ பீடம்)துறையில் பட்டப் பின்படிப்பு டிப்லோமா சான்றிதலையும் பெற்றுள்ளார். (இலங்கை சட்டக் கல்லூாயில்) புலமை சார் சொத்துக்கள் சட்டத்தில் டிப்லோமா, சர்வதேச வர்த்தக சட்த்தில் பட்டப் பின்படிப்பு டிப்லோமா, வணிக ரீதியிலான மத்தியஸ்தம் சம்பந்தமான (வணிக சட்டம் மற்றும் நடைமுறைகள் அபிவிருத்திக்கான நிறுவனம்) டிப்லோமா சான்றிதழையும் பெற்றுள்ளார். இவர் 30 வருடங்கள் வழக்கறிஞராக செயலாற்றி வருகிறார்.அத்துடன் இலங்கை சட்டக்கல்லூரி மற்றும் கண்டி தேசிய கல்வி கலாசாலை என்பவற்றில் பகுதிநேர விரிவுரை யாளராகவும் கடமையாற்றுகிறார். இவர் கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நிதிமன்றத்தின் சட்டத்தரணிகள் சஙகத்தின் தலைவராகவும் சேவையாற்றியுள்ளதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிரைவேற்று குழுவின் அங்கத்தவராகவும் மற்றும் களனி பல்கலைக்கழக சஙகத்திலும் அங்கத்தவராக காணப்படுகிறார்.

## திரு. தம்மிக்க தஹனாயக்க யாப்பா
பணிப்பாளர்

திரு. தம்மிக்க தஹநாயக்க யாப்பா ஒரு சட்டத்தரணியாவார் இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை பட்டதாரியாவார். இவர் கொழும்பு சட்ட சங்கத்தின அங்கத்தவராவார். இவர் 31 வருடங்களாக சிறந்ததொரு சட்டத்தரணியாக சேவைபுரிந்து வருகிறார். அரச அகழ்வு மற்றும் கனிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தில் உள்ளக கணக்காய்வாளராகவும் நிதி முகாமையா ளராகவும் கடைமை புரிந்துள்ளார்.





## திரு. ஏ.எல்.ஏ. அசோக்கா சிரிவர்தன

பணிப்பாளர்

திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிரிவர்தன அவர்களுக்கு இலங்கை நிர்வாக சேவையில் 23 வருடகால அனுபவம் காணப்படுகிறது. இவர் களணி பல்கலைக்கழகத்தில் சமூகவியல் மற்றும் கலைத்துறையில் பட்டம் (MA) பெற்றுள்ளார். மற்றும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பொறுப்பு மாற்றல் மற்றும் உள்ளுராட்சி கற்கை நெறியில் பட்டப்பின்படிப்பு டிப்லோமா சான்றிதழ் பெற்றுள்ளார்.

இவர் நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் பிராந்திய பணிப்பாளராக பணியாற்றியுள்ளார். பொது நிர்வாக அமைச்சின் பிராந்திய செயலாளராகவும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் பொது முகாமையாளராகவும் விவசாய அபிவிருத்தி அமைச்சின் (திட்டமிடல்/காணி) பணிப்பாளராவும் ருஹுனூ உள்ளாச பயண பணியக முகாமை பணிப்பாளர் காலி மாநகரசபை ஆணையாளர், தென்மாகாண தகுதிகாண் திணைக்களத்தின் தகுதிகான் ஆணையாளர், தென் மாகான சபையின் வீடமைப்பு திணைக்களத்தின் வீடமைப்பு ஆணையாளர்., தென்மாகாண தபால் திணைக்களத்தின் பிரதி தபால் மா அதிபர், தென் மாகணசபையின் மீன்பிடி,கலாச்சாரம், உணவு வழங்கல் மற்றும் வினியோகம். வியாபாரம் மற்றும் கூட்டுரவு அமைச்சின் செயலாளர், ஹரித்தி, SLSCA, EDB ஹெல்போ நிறுவனத்தின் பணிப்பாளர்சபை அங்கத்தவர் மற்றும் இலங்கை நெதர்லாந்து அனுமின் அசோசியேசன், CEA யின் சூழல் ரீதியிலான கவுன்சில் என்பவற்றின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார் தற்பொழுது திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிரிவர்தன விவசாயத்துறை அமைச்சின மேலதிக செயலாளராகவும் சேவையாற்றுகிறார்.

## திரு.எஸ்.பீ. மொரவக்க

கம்பனி செயலாளர்

திரு. எஸ்.பி. மொரவக்க ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் முன்னைய நாள் கம்பனி பதிவாளர் ஆவார். இவர் புலமைசார் சொத்துக்கள் பற்றிய சட்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் பயிற்சி பெற்றுள்ளார். கடந்த 10 வருங்களாக இவர் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் செயலாளராக செயலாற்றி வருகிறார்.

# முகாமைக் குழு






## திரு. பிரதீப் யசரத்ன

இக்கம்பனியின் பொது முகாமையாளர் இவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைத்துறையில் (விசேட கௌரவ பட்டம்), களனிப் பல்கலைக் கழகத்தில் கலைமானிப் பட்டமும் பெற்றுள்ளார். அத்துடன் ஜயவர்தன பல்கலைக் கழகத்தின் பட்டப் பின்படிப்பு டிப்லோமா கற்று தேர்ந்துள்ளார். (தாய்லாந்து ALT) நிறுவனத்தின் தொழில்சார் அபிவிருத்தி துறையில் சான்றிதலையும், (இந்தோனிசியாவில்) பொது முகாமை சம்பந்தமான உயர்தர சான்றிதழையும். மனிதனை மையமாகக் கொணட உறபத்தி திறன் சான்றிதழையும் பெற்றுள்ளார். தலைமைத்துவம் மற்றும் நிறுவன முகாமை (INTAN மலேசியா) மற்றும் மாறும் முகாமை (ஒக்ஸ்பாட் பல்கலைக்கழகம் இங்கிலாந்து), ஆகிய கற்கைகளுக்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர். இவர் முன்னைய நாள் (இரத்மலான மற்றும் ஹோமாகம) பிரதேச செயலாளராகவும் சேவையாற்றியுள்ளார். (சமுர்த்தி அதிகாரசபையின்) ஊடக பணிப்பாளர் மற்றும் (பெருந்தோட்ட அமைச்சின் உதவிச் செயலாளர்) பதவிகளிலும் சேவை புரிந்துள்ளார்.

## திரு. லால் குமாரசிரி

கம்பனியின் பிரதான உளளக கணக்காய்வாளராக கடமை புரிகிறார்.களனி பல்கலைக்கழக வணிகமானி (விசேட) பட்டதாரியாவர். இவர் இலங்கை அரச நிதிக் கணக்காளர் அமைப்பு மற்றும் அரச நிதி அபிவிருத்தி கணக்கியல் நிறுவனம் என்பவற்றின் உறுப்பினராவார். அரச கணக்குகள் மற்றும் நிதி நிறுவனம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்கள் நிறுவனத்திடமிருந்தும் சான்றிதழ் பெற்றுள்ளார். தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின முன்னைய நாள் கணக்காளரும் பிரதான உள்ளக கணக்காய்வாளரும் ஆவார்.

## திரு. பிரியந்த சமரவீர

கம்பனியின் நிதி முகாமையாளர் ஆவார். ஜயவர்தன பல்கலைக் கழகத்தின் வணிகமானி (விசேட) பட்டதாரியாவார். அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்கியல் நிறுவனம் மற்றும் பட்டய வியாபார நிருவாகிகள் நிறுவனம்,இலங்கை அரச நிதி கணக்காளர்கள் அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினராகவும் இலங்கை தொழில்நுட்ப வியலாளர்களின் அமைப்பின் இணை உறுப்பினராகவும் உள்ளார்.இவர் 1987 ஆம் ஆண்டில் இந்த கம்பனியில் இணைந்தார். கம்பனியின் மூத்த சிரேஷ்ட முகாமையாளராகவும் காணப்படுகிறார்.

## திருமதி. தரங்க ஹேரத்

கம்பனியின் மனிதவள முகாமையாளர்.இவர் களனி பல்கலைக் கழகத்தில் கலைமானி பட்டதாரியாவார். மற்றும் (களனி பல்கலைக்கழகம்) மனிதவள முகாமைத்துறையில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார். (களனி பல்கலைக் கழகத்தின் மனிதவள முகாமைத்துறையில் பட்டப்பின்படிப்பு டிப்லோமா சான்றிதழையும் பெற்றுள்ளார்.அத்துடன் ஒக்ஸ்பார்ட் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தின் மாற்றல் முகாமைத் துறையில் சான்றிதழையும் பெற்றுள்ளார்.இவர் முன்னர் இரத்மலான பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். வனசீவராசிகள் அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.



## பொறியியலாளர் குமார ஜயகொடி

கம்பனியின் பெறுகைகள் மற்றும் இறக்குமதி முகாமையாளராகவும் கடமையாற்றுகிறார். இவர் பேராதனை பல்கலைக் கழகத்தின் பி.எஸ். சீ. பொறியியல் துறை பட்டதாரியாவார். அத்துடன் அரசாங்க பெறுகைகள் மற்றும ஒப்பந்த நிருவாகத்துறையில் பட்டப்பின்படிப்பு டிப்லோமா சான்றிதழையும் பெற்றுள்ளார். இவருக்கு தொலைத் தொடர்பு மற்றும் பாதை நிர்மாணத் துறையில் அனுபவம் காணப்படுகிறது.

## திருமதி சுராங்கனி போதிபால

கம்பனியின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர். சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞானம் (பெருந்தோட்ட முகாமை விசேட) துறையில் பட்டம் பெற்றுள்ளார். மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தின் வியாபார நிர்வாகத் துறையில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.பெருந்தோட்ட முகாமையில் விசேடமாக தேயிலைத் துறையில் அதிக அனுபவம் காணப்படுகிறது.

## திரு. பிரியந்த பெரேரா

கம்பனியின் வினியோக முகாமையாளர். கொழும்பு பல்கலைக் கழகத்தின் கலைத்துறையில் (சமுகவியல் துறையில் விசேட பட்டம் பெற்றுள்ளார். தொழிற்பயிற்சி அதிகார சபையின் டிப்லோமா சான்றிதழையும் ஆளணி முகாமை நிறுவனத்தின் மனிதவள முகாமை கற்கை நெறியிலும் டிப்லோமா சான்றிதலையும் பெற்றுள்ளார். இவர் தொழில் ரீதியில் தீ. மற்றும் மீட்பு நடவடிக்கைகள், கைத்தொழில் சம்பந்தமான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு .இயந்திரம் மற்றும் உபகரணங்களில் பராமரிப்பு துறையில் விசேட மாக பயிற்சி பெற்றுள்ளார்.

## பொறியிலாளர் அனுரசிரி திசானாயக்கா

கம்பனியின் தொழில்நுட்ப முகாமையாளர் இவர் பேராதனை பல்கலைக் கழகத்தில் பி.எஸ். சீ.பொறியியல் துறையில் பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் வியாபார நிருவாகம் (நிதி) சம்பந்தமாக களனி பல்கலைக் கழகத்தில் முதுமானிப் பட்டத்தினை பெற்றுள்ளார். இவர் இலங்கை பொறியியல் நிறுவனம் மற்றும் கட்டிட சேவைகள் பொறியியலாளர் பிரிவு என்பவற்றில் அங்கத்தவராகவும் காணப்படுகின்றார்.



# முகாமைக் கலந்துரையாடல்
## மற்றும் பகுப்பாய்வு

### கைத் தொழில் பற்றிய மீளாய்வு

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.3% வீதமாக துரித வளர்ச்சியினை காட்டி இலங்கையின் பொருளாதாரம் உயர்ந்த வளர்ச்சியை 2013 ஆம் ஆண்டில் பதிவுசெய்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு விவசாயத்துறையின் வளர்ச்சி 4.7% வீதமான வளர்ச்சியினை வருடத்தினுள் அடைந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு 10.8% வீதமாகவும் காணப்பட்ட அதே வேளை 30% வீத தொழில் வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது. இந்த வளர்ச்சிக்கு உபதுறைகளான அதாவது இறப்பர் மற்றும் தென்னை தவிர்ந்தவை  இந்த வளர்ச்சிக்கு சாதகமான பங்களிப்பை செய்துள்ளதுடன் நெல் மற்றும் தேயிலைத்துறைகள் உயர்ந்த பங்களிப்பை வழங்கியுள்ளன.

நாட்டின் நெல்உற்பத்தி 4.62 மில்லியன் டொன்களாக வளர்ச்சி கண்டுள்ளது இதன்படி 20% வீத வளர்ச்சியினை பதிவு செய்துள்ளது.2013 ஆம் ஆண்டின் தேயிலை உற்பத்தியும் உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. ஏனைய துறை பயிர்களின் உற்பத்தியும் 3.4% வீத அதிகரிப்பு 2013 ஆம் வருடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 968,246 மெற்றிக் டொன்கள உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இதேவேளை சிறு ஏற்றுமதி பயிர்களான அதாவது கருவா, மிளகாய்,ஏலம்,கொக்கோ,சாதிக்காய், வெற்றிலை மரமுந்திரிகை போன்றன வளர்ச்சியினை பதிவு செய்துள்ளன. மரக்கறி வகைகள் 15% வீதத்தினால வளர்ச்சி கண்டுள்ளது. இதனபடி 1,091,491 மெ.டொன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு  தேசிய உரமானியத்திட்டம் பெரிதும் பங்களிப்பு செய்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் மானிய உரமாக 759,512 மெ.டொன் உரம் வழங்கப்பட்டுள்ளது இதற்கான செலவு 40 பில்லியன் ரூபாவாகும். இறக்குமதி செய்யப்பட்ட உர வகையின் 50% வீதத்திற்கு அதிகமானது நெல் உற்பத்திக்காக பாவிக்கப்பட்டுள்ளது. இரண்டு அரசாங்க உரக் கம்பனிகளான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியும் மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமஷல் உரக்கம்பனியும் முழு நெல் உற்பத்தி துறைக்கும் தேவையான உரத்தினை வழங்குகின்றன.

இந்தவகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி நெல் உற்பத்தி துறைக்கு 65% வீதமான உரத்தினை வழங்குகின்றது. 2012 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானத்தின்படி இரசாயன உரப்பாவனையை உயர்ந்த அளவில் உபயோகிப்பதனை பராமரிப்பதற்கும் சேதன உரப்பாவனையை ஊக்கிவிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த ஐந்து வருட கால கட்டத்தினுள் ஏனைய பிரிவு பயிர்கள் உற்பத்தி குறிப்பிடத்தக்கதாக வளர்ச்சி கண்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் மானிய உரம் வழங்கும் திட்டம் ஏனைய பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டதனை தொடர்ந்து அரச கம்பனிகள் ஏனைய பயிர் உற்பத்திகளுக்கும் தமது சந்தையினை விரிவுபடுத்தியுள்ளது. 2011-2013 வரை அரச கம்பனிகள் ஏனைய பயிர்களுக்கான உர வினியோகத்தினை 10% வீதத்தினால் மேற்கொண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் அரசினால் எடுக்கப்பட்ட ஒரு கொள்கைத்தீர்மானத்தின்படி நாடுபூராகவும் உர வினியோகத்தில்  தனியார் துறையிடம் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரச உரக்கம்பனிகளின் சந்தையின் பஙகினை 40மூ வீதமாக அதிகரிப்பதற்கான ஒரு தந்திரோபாய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெல் உற்பத்தி துறையின் சந்தையின் பங்கு




ஏனைய பயிர்கள் துறையின் சந்தையின் பங்கு



## நிறுவன ரீதியிலான மீளாய்வு

**நாட்டின் நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உர வகைகளை இறக்குமதி செய்யும், கலவை செய்யும் மற்றும் மொத்த விற்பனையை மேற்கொள்ளும் அரச துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனம் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியாகும்.**

முற்றும் முழுதாக இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு கம்பனி என்ற வகையில் எமது பிரதான நோக்கம் நாட்டின் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு உதவி புரிவதாகும். நாம் விவசாயிகளுக்கு உரங்களை மாத்திரம் வழங்கவில்லை அத்துடன் பெற்றுக் கொள்ளக்கூடிய விலைகளில் தரமான உரத்தினையும் வழங்குகிறோம்.

எமது உரப் பொதிகளில் புதிதாக ஒரு நீல நிறத்திலான ஒரு கோடு இடப்படுகிறது. இது எமது பொருட்களின் தரத்தினை குறித்து நிற்கிறது.

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியினால் உரம் இறக்குமதி செய்யும் பொழுது கப்பல்களிலுள்ள ஒவ்வொரு சரக்குகளின் மாதிரிகளும் எடுக்கப்பட்டு அவற்றின் தரத்தினை பரிசோதிப்பதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எமது களஞ்சியங்களில் இருந்து எமது விற்பனையாளர்களுக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு பொதியும் எமது ஆய்வு கூடத்தில் பரிசோதிக்கப்படுகிறது.எமது ஆய்வு கூடத்திற்கு இலங்கை தர நிர்ணய சபையினால் (SLAB) தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதுடன் ISO/ICE/17025:2005 சான்றிதழும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஹுனுப்பிட்டியவில் அமைந்துள்ள எமது மத்திய களஞ்சியத் தொகுதியில் பாரிய களஞ்சிய வசதிகள் காணப்படுகின்றன. இதில் 75,000 மெ. டொன். உரங்களை வைப்பதற்கான இடவசதி காணப்படுகிறது. அத்துடன் பலவித பயிர்களுக்காகவும் பொருத்தமான விதத்தில் உரத்தினை கலவை செய்வதற்கான கலவை இயந்திரங்களும் காணப்படுகின்றன் எமது பிரதானமான பிராந்திய களஞ்சியமான பொலன்னருவை களஞ்சிய சாலையில் 22,000 மெ.டொன் உரத்தினை களஞ்சியப்படுத்தும் இட வசதியும் காணப்படுகிறது. நாடுபூராகவும் உள்ள எமது பிராந்திய உரக்களஞ்சியங்களில் 148,000 மெ.டொன் உரத்தினை களஞ்சியப்படுத்தும் வசதியும் காணப்படுகிறது.

தலைமைக் காரியாலயத்தில் 5-S திட்டத்தினை அறிமுகம் செய்ததன் பின்னர் கம்பனியின் ஊழியர்களது உற்பத்தி திறன் அதிகரித்துள்ளது. இந்த அலுவலகத்திற்கு சிறந்த முகாமைத்திட்டத்திற்காக ISO :9001:2008 தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது. நெல் விவசாயத் துறைக்கு மாத்திரம் உரம் வழஙகுவதில் மாத்திரம் வரையறுக்கப்படாது நாம் விவசாயிகளுக்கு தொடர்ந்தும் புதிய பொருட்கள், பெறுமதி சேர்க்கப்பட்டவை, மற்றும் தரமான உற்பத்திகளையும் வழங்கி வருகிறோம். விவசாயிகளின் அறுவடையினை உச்சப்படுத்தும் வகையில் விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்பவும் பல்வேறு பயிர்களுக்கு ஏற்பவும் மற்றும் மண்ணின் தன்மைக்கு ஏற்பவும் பொருத்தமான விதத்தில் உரக்கலவையினை மேற்கொள்வதுடன் எமது அய்வு கூடத்திலுள்ள நவீன உபகரணங்களுடன் தொடர்ச்சியான ஆய்வுகூட பரிசோதணைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

தற்பொழுது பல்வேறுபட்ட பயிர் வகைகளுக்கும் அதாவது தேயிலை,தென்னை,இறப்பர், மரக்கறி வகைகள். பழ வகைகள் அடங்கலாக மற்றும் ஏனைய துறைப் பயிர்களுக்கும் விசேட தரம் வாய்ந்த உர வகைகளை வழங்குகிறோம்.

**2014 பயிர்கள் அடிப்படையிலான விற்பனை (ஏனைய பயிர்)**




இந்த நாட்டில் சமுக மற்றும் சூழல் ரீதியில் ஆழமாக காணப்படும் பிரச்சினைகளை புரிந்து கொண்ட நாம் புதிய சேதனப் பசளை கலவைகளை லக்பொஹொர வியாபார நாமத்தின் கீழ் அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த புதிய உற்பத்திகள் செப்டம்பர் நடுப்பகுதியில் வெளியிடப்படும்.

எமது உர உற்பத்திகள் பல்வேறு அளவுகளில் வணிக ரீதியிலான பயிர்ச் செய்கையில் ஈடுபடும் மற்றும் சிறிய வீடு தோட்டம் செயபவர்களின் தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில் சந்தையில் காணப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக விடுவிக்கப்பட்டிருக்கும் காணிகளில் பயிர்ச் செய்கைக்காக உரவகைகளின் அதிகரித்த பாவனைச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கு, உரவகைகள் கிடைக்கக்கூடிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு கம்பனி உரப்பக்கட்டுகளில் தமிழ் மொழியிலான விளக்கத்துடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.




எமது பயிற்சிப் பாசறைகள் மற்றும் சிறு ஒன்றுகூடல்களின் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் உதவிகளை தொடர்ந்து நாம் வழங்கி வருகிறோம். எமது தனிப்பட்ட வியாபார அடையாளம் மற்றும் நாடுதழுவிய விற்பனை மற்றும் வினியோக வலையமைப்பின் ஊடாக பல்வகை பயிர்களுக்கும் தேவையான உரங்களை வழங்கியதன் மூலம் சந்தையின் முன்னணி நிறுவனம் என்ற நிலையினை வருடத்தினுள் தக்கவைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

# நிதி சம்பந்தமான மீளாய்வு

## வருமானம்

நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உரவகைகளை விற்பனை செய்வதன் மூலம் 2013/14 ஆம் ஆண்டினுள் 2.6 பில்லியன் ரூபா வருமானமாக கம்பனி பதிவு செய்துள்ளது. ஒப்பீட்டு ரீதியில் கடந்த வருடத்தினுள் ஒப்பிடுகையில் இது 5% அதிகரிப்பினை குறிக்கிறது.

வருமானம்




ஏனைய பயிர்களுக்கான பிரிவில் ஏற்பட்ட மிகமுக்கியமான வளர்ச்சியே கம்பனியின் வருமான வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்பு செய்துள்ளது.

2013/14 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் நெல் உற்பத்தி பிரிவின் பங்களிப்பு 48% வீதமாகும். இந்த உற்பத்தி பிரிவில் இலக்கு 2012/13 ஆண்டில் 23% வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத்தீர் மானத்தின்படி சேதனப் பசளை பாவனையை ஊக்கிவித்தாகும்.

2012/13 ஆண்டிலிருந்து முக்கியமாக அதிகரித்துவந்த ஏனைய பயிர்களுக்கான பிரிவின் வளர்ச்சி 62% வீதமாக அதிகரித்ததுடன் மொத்த வருமான அதிகரிப்பில் 52% வீத பங்களிப்பினை வழங்கியுள்ளது. அத்துடன் ஆண்டுக்கான இலக்கிற்கு அப்பால் தொடர்ந்து சென்றுள்ளது.

## மொத்த இலாபம்

கம்பனி 575,467,461 ரூபாவை மொத்த லாபமாக பதிவுசெய்துள்ளது. இத்தொகை முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 7% வீத வீழ்ச்சியை காட்டுகிறது இதற்கு நெல் உற்பத்திக்கான உர வினியோகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும்.

மொத்த இலாபம்




## நிர்வாக செலவுகள்

கம்பனியின் நிர்வாக செலவுகள் இந்த நிதியாண்டில் 448 மி. ரூபாவாக காணப்படுகிறது. கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் இது 5% வீத வீழ்ச்சியை காட்டுகிறது.

நிர்வாக செலவுகள்




## வினியோக செலவுகள்

பயனளிக்கக்கூடிய மற்றும் திறமையான முகாமை காரணமாக கம்பனியின் வினியோக வலையமைப்பில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் காணப்பட்ட அதே வேளை, கம்பனியின் இந்த நிதியாண்டுக்கான வினியோக செலவுகள் 57 மி ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது.

வினியோக செலவுகள்




## நிதி வருமானம் மற்றும் செலவுகள்

இந்த வருடத்தில் கம்பனியின் நிதிவருமானம் 97 மி.ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த நிதி வருமானத்தில், நிலையான வைப்புகள் மீதான சம்பந்தப்பட்ட வட்டி வருமானம் மற்றும் REPO முதலீடுகள் என்பனவும் உள்ளடக்கப்படுகிறது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் கம்பனியின் நிதிச் செலவுகள் 53% வீதத்தினால் குறைவடைந்துள்ளது. மேலதிக பற்றுக்களுக்கான வட்டி இந்த நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படுகிறது.

நிதி வருமானம் மற்றும் செலவுகள்




## வரிக்கு முன் உள்ள இலாபம்

இந்த நிதியாண்டில் முன் ஒருபோதும் இல்லாத வகையில் வரிக்கு முன் உள்ள இலாபமாக 241,328,764 ரூபா இலாபமாக பதிவு செய்துள்ளது. கடந்த வருடத்தடன ஒப்பிடுகையில் இது 21% வீத அதிகரிப்பாகும்.

வரிக்கு முன் இலாபம்




## வரிவிதிப்பு

இந்த நிதியாண்டிற்கான வருமான வரியாக 62.869.313 ரூபா கணக்கிடப்பட்டுள்ளது.கடந்த 2012/13 ல் 73,037,738 ரூபாவாக காணப்பட்டது. இந்த வருமான வரிச் செலவில், பிற்போடப்பட்ட வரிச் செலவுகள் ரூபா 5,561,375 தொகையும் உள்ளடங்குகிறது. 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின்படியும் மற்றும் அதனை தொடர்ந்த திருத்தங்களுக்கு ஏற்பவும் கம்பனி 28% வீதம் வருமானவாயாக செலுத்த வேண்டிய பொறுப்பு காணப்படுகிறது.

## ஒருபங்கிற்கான சம்பாத்தியம (EPS)

இந்த நிதியாண்டினுள் கம்பனி முன் ஒருபோதும் இடம்பெறாத விதத்தில் ஒரு பஙகிற்கான சம்பாத்தியமாக 3.55 ரூபா கணக்கிட்டுள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 41% வீத அதிகரிப்பாகும்.

ஒருபங்கிற்கான சம்பாத்தியம்




## ஒரு பங்கிற்கான பங்கிலாபம் (DPS)

பணிப்பாளர்கள் சபை இந்த நிதியாண்டில் 1.05 ரூபாவை ஒரு பங்கிற்கான அதிகூடிய பங்கிலாபமாக வழங்குவதற்கு சிபாரிசு செய்துள்ளது. இது வருடாந்த பொது கூடத்தின் போது இத் தொகை பங்குதாரர்களினால் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஒரு பங்கிற்கான பங்கிலாபம்




## சொத்துக்கள் மீதான வருமானம் (ROA)

இந்த வருடத்தில் சொத்துக்கள் மீதான வருமானமாக, மொத்தச் சொத்துக்களின் 0.49% வீதத்தினை வருமானமாக பெற முடிந்துள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2% வீத அதிகரிப்பை காட்டுகிறது.

சொத்துக்கள் மீதான வருமானம்



## உரிமையாண்மை மீதான வருமானம் (ROE)

இந்த நிதியாண்டுக்காக கம்பனி உரிமையாணமை மீதான வருமானமாக 4.6% வீதத்தினை பெற்றுள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 36% வீத அதிகரிப்பை காட்டுகிறது.

**உரிமையாண்மை மீதான வருமானம்**




## சொத்துக்களின் அடிப்படை

2014 நிதியாண்டு முடிவில் கம்பனியின் சொத்துக்களின் அடிப்படையாக 36,266,731,183 ரூபா காணப்படுகிறது. இதில் நடைமுறையற்ற சொத்துக்களின் அடிப்படையாக 95% வீதமும் நடைமுறைச் சொத்துக்களின் அடிப்படையாக 5% வீதமும் காணப்படுகிறது.

நடைமுறை நிதியாண்டில் நடைமுறையற்ற சொத்துக்களின் அடிப்படையாக 1,879,519,023 ரூபாவாக காணப்படுகிறது. இது பிரதானமாக ஆதனம், பொறி உபகரணங்களாக கருதப்படுகிறது.

நடைமுறைச் சொத்துக்கள் 9,818,939,610 ரூபாவினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

**சொத்துக்கள்**




## காசுப் பாயச்சல் மற்றும் திரவத்தன்மை

கம்பனியின் நிதி மூலங்கலாக பிரதானமாக செயறபாடுகள், மற்றும் முதலீடுகளிலிருந்து பெறப்படும் காசாகும் நடைமுறை நிதியாண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் 5.1 பில்லியன் ரூபாவாகும். இதேபோல் முதலீடு நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல் 0.5 பில்லியன் ரூபாவாகும் இதன்படி கம்பனி இந்த நிதியாண்டில் 5.6 பில்லியன் ரூபா நிதிநடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சலை உருவாக்கியுள்ளது.

கம்பனி கடன்களுக்காகவும் மற்றும் தொழிற்பாட்டு மூலதனத் தேவைகள், மூலதன செலவுகள் மற்றும் பங்கிலாபம் வழங்கல் என்பவற்றுக்காக போதுமான திரவத்தன்மையை உறுதி செய்கிறது.

## பங்குதாரரின் நிதிகள்

கம்பனியின் பங்குதாரர்களின் நிதி 3.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. முன்னைய வருடம் 3.7 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது வருடத்தினுள் ஈட்டிய இலாபம் காரணமாக வைத்துக் கொணட சம்பாத்தியத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் பிரதிபலனாக இது ஏற்பட்டுள்ளது.





**வீட்டுத் தோட்ட பயிர் செய்கைக்காக**

சிறு பக்கட்டுகளில் (Mini packet) பழங்கள்,காய்கறிகள் மற்றும் பூக்களுக்கான உர வகைகளை நாம் வழங்குகிறோம்



# லக்பொஹொர குடும்பம்

## மனிதவள முகாமை

எமது மக்கள் எமது பலமாகும் அவர்களது பிரச்சினைகள் அற்ற பங்களிப்பு கம்பனியினதும் நாட்டினதும் தொடர்ச்சியான வெற்றிக்கு இன்றியமையாததாகும்.



### சிறந்த செயற்பாடுகள் மற்றும் ஊழியர் சம்பந்தமான கொள்கை

எமது ஆளணி முகாமை தந்திரோபாயமானது கடை மற்றும் அலுவலக சட்டத்திற்கு ஏற்பவும் கூலிச்சபைச் சட்டம், பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள். சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் பிரயோகிக்கக்கூடிய இலங்கையில உள்ள தொழிலாளர் சட்டங்களுக்கு ஏற்பவும் உருவாக்கப்பட்டுள்ளது. தேவையான ஊழியர் குழுவிற்கு (Cader) ஏற்ப ஆட்சேர்ப்பு நடைமுறைகளை நாம் ஒழுங்கமைத்துள்ளோம் மற்றும் ஆளணி முகாமையை தெளிவாக அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு முகாமை சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி பெற்றுக் கொள்ளப்படுகிறது.

### ஊழியர் நன்மைத்திட்டம்

இலங்கை உரக்கம்பனி மொத்த சம்பளத்தில் 15% வீதத்தினை ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்கிறது. மேலும் மொத்த சம்பளத்தின் 3% வீதத்தினை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்கிறது.

### நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டம் நிதி நிலைமைக்கூற்றில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாடு வருடந்தோரும் ஒரு சிறந்த கணக்காளரினால் LKAS 19 நியமத்திற்கு ஏற்ப கணக்கிடப்படுகிறது. ஓய்வுகால நன்மை கடப்பாட்டு ஏற்பாடுகள் சகல ஊழியர்களினதும் முதல் வருட சேவையிலிருந்து கணக்கிடப்படுகிறது. ஆனால் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை வழங்கள் சட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக 5 வருடங்கள் சேவையினை பூர்த்தி செய்ததன் பின்னரே இந்தப் பொறுப்பு ஒரு ஊழியருக்கு ஏற்படுகிறது.

### ஊழியர்களின் ஊக்கிவிப்பு

அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் என்பதனால் தொழில் பாதுகாப்பு மற்றும் அரச பொறுப்புகளை நோக்கியதான வேலை என்ற மனோநிலையை எமது ஊழியர்களுக்கு மத்தியில் ஏற்படுகிறது. அத்துடன் நாம் எமது ஊழியர்களுக்கு நிதி மற்றும் நிதி சாராத நன்மைகளையும் வழங்கி வருகிறோம். ஏனெனில் உயர்தரமான ஊழியர் ஊக்கிவிப்புகள் நிறுவனத்தின் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

### நிதி ரீதியிலான நன்மைகள்

- ஒவ்வொரு ஊழியர்களினதும் தனிப்பட்ட செயற்பாடுகளை மதிப்பீடு செய்து கம்பனியின் வருடாந்த ஊக்கிவிப்பு திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.
- தேயிலைத்தூள், சாப்பாடு, உடை போன்ற கொடுப்பனவுகள் பொருத்தமான ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது.
- வைத்திய விடுமுறைகளை காசாக மாற்றிக் கொள்ளல்
- தகுதியான ஊழியர்களுக்கு கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி பட்டியல்களுக்கான செலுத்தல்களை மீள வழங்கல்.
- தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கல்வி,கலாச்சார அல்லது விளையாட்டு போட்டிகளில் சாதணை புரியும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் நிதி ரீதியிலான பரிசுகளை வழங்கல்.

### ஏனைய நன்மைகள்

- செயறபாடுகளை அடையாளம் கண்டு பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- மாவட்ட சந்தைப் படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ஊழியர்களினதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களினதும் நன்மை கருதி வைத்திய காப்புறுதி திட்டம் ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது.
- அதிஉயர் விற்பனைகளை மேற்கொண்ட சந்தைப்படுத்தல் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையிலான ஊழியர்களுக்கு இடையே ஒளிவு மறைவு இன்றி சுதந்திரமாக உரையாடலை ஆர்வமூட்டுவதற்காக ஒரு சிறந்த உரையாடல் கொள்கை அமுல் செய்யப்படுகிறது.
- ஆன்மீக வளர்ச்சி, திறமை விருத்தி மற்றும் கூட்டு வேலையினை பல்வேறுபட்ட பயிற்சி திட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளன. அதாவது நேரான சிந்தனை மற்றும் குழுக்களை ஏற்படுத்தல் மற்றும் ஊழியர்களின் தகவல தொழில் நுட்பம் ITC மற்றும் ஆங்கில மொழி அறிவினை விருத்தி செய்வதற்காக சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன.
- பொதுவான தொடர்பாடல்களுக்கு மேலதிகமாக அறிவினை பகிந்துகொள்ளல், மற்றும் கருத்துகளை பரிமாறிக் கொள்ளவும் மாதாந்த சந்திப்புக்களை நாத்துவது பொன்று ஒரு அமைப்பு ரீதியிலான ஊழியர் தொடர்பாடல் திட்டம் ஒன்றும் அமுல் செய்யப்படுகிறது.



- செயற்பாடுளை உறுதி செய்யும் நோக்கில் மனிதவள திட்ட கொள்கைத் திட்ட வரைபுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் ஊழியர்களின் துயரங்களை கையாழும் ஒரு செயற்பாடும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.
- அலுவலக மற்றும் தனிப்பட்ட விடயங்கள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு சிறந்த ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வசதியாக ஊழியர்களுக்கான ஆலோசனை வாங்கும் திட்டம் ஒன்றும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.
- 25 வருடத்திற்கு மேல் சேவையாற்றிய ஊழியர்களை பாராட்டி தங்க நாணயங்கள் வழங்கும் திட்டம்.

## எமது மக்களின் ஒன்றிணைப்பு

நிறுவனத்தின் மொத்த வெற்றியும் லக்பொஹொர அங்கத்தவர்களின் கடின உழைப்பின் பிரதிபலனாகவே காணப்படுகிறது. அர்ப்பணிப்புடன் செயற்படும் 428 ஊழியர்கள் எமது குழுவில் காணப்படுகினறனர். இவர்கள் கம்பனியின் தந்திரோபாயங்களை அமுல் செய்து தமது இலக்கிற்கு மேலாகவும் மற்றும் அதற்கு அப்பாலும் தனது செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். ஒப்பந்தம், பிரிவு, பிராந்திய மற்றும் பால் என்ற வகையிலான ஊழியர்களுக்கு இடையிலான வகைப்படுத்தல் பின்வருமாறு காணப்படுகிறது. ஒரு ஊியர் நியமனத்தின் போது வயது மற்றும் பால் ரீதியிலான சமநிலை பேணப்படுவதனை உறுதி செய்கிறது.

ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள்




பிராந்திய ரீதியிலான நிரந்தர ஊழியர்கள்




வகைப்படுத்தல் அடிப்படையிலான நிரந்தர ஊழியர்கள்




பால்நிலை அடிப்படையிலான நிரந்தர ஊழியர்கள்






**ஊழியர்களின் சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் உற்பத்தி திறன் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் நாம் கம்பனியின் மனிதவள நிகழ்ச்சி நிரலில் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம்.**

## ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

கம்பனியின் சீரான செயற்பாட்டுக்காக எமது ஊழியர்களின் சுகாதாரம் இன்றியமையாததாகும். ஊழியர்களின் சுகாதாரம், நல்வாழ்வு மற்றும் உற்பத்தி திறன் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் நாம் கம்பனியின மனிதவள நிகழ்ச்சி நிரலில் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம்.

ஏதேனும் சிறிய அல்லது பெரிய தொழில் ரீதியில் காயங்கள் அல்லது நோய்கள் ஏற்பட்டு மூன்று நாளைக்கு வேளைக்கு சமூகமளிக்கவில்லையானால் இது பதிவு செய்யப்பட்டு இதனை தடுப்பதற்காக துரித நடவடிக்கைகள் எடுப்பதற்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகிறது.

நிறுவனத்தினுள் ஒரு வைத்திய காப்புறுதி திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது. கம்பனியின் மொத்த காப்புறுதி கிரயத்தின் 75% வீதத்தினை செய்கிறது. இதற்கு மேலதிகமாக திடீர் ஆபத்துகளின் போது. ஊழியர்களுககான நட்ட ஈடு வழங்கும் திட்டம் ஒன்று காணப்படுகிறது.மேலும் கம்பனி இயற்கை அனர்த்தங்களினால் அதாவது வெள்ளப் பெருக்கு, மண்சரிவுகள், மற்றும் சூறாவளி போன்றவற்றினால் பாதிப்படைந்த ஊழியர்களுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக பாதிக்கப்பட்டவர்களுக்கு கம்பனி உபகரணங்கள் மற்றும் நிதி உதவிகளையும் வழங்கி வருகிறது.

மேலும் ஊழியர்களின் உற்பத்தி திறனை விருத்தி செய்வதற்காக மாதம் தோரும் மதம் சம்பந்தமான அல்லது அறிவுத்துறை சார்ந்த விரிவுரைகளும் ஒழுங்கு செய்யப்படுகிறது. ஊழியர்களுக்கு உடல் ஆரோக்கியத்தினை ஏற்படுத்தும் நோக்கில் கம்பனி, ஒரு தேகப்பயிற்சி நிலையம். பெட்மின்டன் மற்றும் கைப்பந்து திடல் ஒன்றினையும் ஸ்தாபித்துள்ளது.







## மனிதவளங்களின் முன்னேற்றம்

சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய விதத்தில் ஊக்கமளிக்ககூடிய ஒரு வேலை செய்யும் சூழலை வளர்ப்பதன் முக்கியத்துவத்தினை நாம் அறிவோம். இதன் மூலம் எமது ஊழியர்களுக்கு சாதனைகளை மேற்கொள்ளவும், அபிவிருத்திமற்றும் அறிவினைப் பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. இந்த கொள்கை மீதான எமது அக்கரை மற்றும் எமது ஊழியர்களுக்காக முதலீடு செய்வதற்கான எமது விருப்பம் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்தும் செயல் படுத்தப்படுகிறது.



மேலும் மனித வளங்கள் மீதான தொடரும் முன்னேற்றம் பிரதானமாக, தொழில்நுட்பம் மற்றும் திறமை அபிவிருத்தி, தலைமைத்துவ அபிவிருத்தி, மற்றும் தொழில் பற்றிய உணர்வு, அனுபவரீதியிலான கற்கை மற்றும் ஆலோசனை வழங்கல் என்பவற்றுடன் இது தொடர்புபட்டுள்ளது. குறிப்பிட்ட துறைசார்ந்த உள்ளக மற்றும் வெளியக வள்ளுனர்களின் மூலம் சகல பயிற்சித் திடடங்களையும் வழங்குவதற்கு கம்பனி ஒழுங்கு செய்யுதுள்ளது.




- கம்பனி 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ICT பயிற்சித் திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது. மற்றும் கம்பனியின் ஆதரவுடன் நடாத்தப்படும் பயிற்சி திட்டத்தினை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற ICDL சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- ஊழியர்களுக்கான ஆங்கில அறிவினை விருத்தி செய்வதற்காக ஆங்கில மொழி பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.
- பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு தடைகள் அற்ற பயிற்சிகளும் மற்றும் பயிற்சி அமர்வுகளும் நடாத்தப்பட்டன. இது அவர்களது குழு முகாமைத் திறமை, சாதகமான மனோநிலை, மற்றும் தீர்மானம் எடுத்தல் என்பவற்றை விருத்தி செய்யக்கூடியனவாகும்.
- நிறுவனத்தின் சகல பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு கனணி துறையில் மென் பொருள் மற்றும் வன்பொருள் பிரிவில் பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவுள்ளவர்கள் வழங்கப்படுகின்றனர்.
- தலைமைக் காரியாலய மற்றும் பொலன்னருவை பிராந்திய களஞ்சிய சாலைகளில் உள்ள இரசாயன உரம் பற்றி சந்தைப்படுத்தும் பிரில் உள்ள ஊழியர்களுக்கு மேலும் அறிவினை வழங்குவதற்கான விஷேட பயிற்சி திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் ஊழியர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக வாசிகசாலையை பராமரித்தல்.

குறிப்பிட்ட துறைசார்ந்த உள்ளக மற்றும் வெளியக வள்ளுனர்களின் மூலம் சகல பயிற்சித் திட்டங்களையும் வழங்குவதற்கு கம்பனி ஒழுங்கு செய்துள்ளது.

## திரும்பல்கள்

வருடத்தினுள் குறிப்பாக குறைந்த ஊழியர் புறள்வு வீதத்தினை பராமரித்ததில் நாம் பெருமிதம் அடைகிறோம். இது பிரதானமாக பல கரணங்களினால் ஏற்பட்டுள்ளது. அதாவது ஊழியர்களின் திருப்தியினை அதிகரித்தல் இதில், சிறந்த செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களின் கொள்கைகள் அதாவது அபிவிருத்தி, பல்லினத்தன்மை, அடையாளம் காணல், சினேகமான மற்றும் கற்கும் சூழல், உயர்ந்த தரம் வாய்ந்த தெழில்சார்ந்த மனப்பான்மை, விருதுகள் மற்றும் நன்மைகள் என்பன உள்ளடக்கப்படுகிறது. இவற்றில் பல மேலே கலந்துரையாடப்பட்டுள்ளன.



## வயது அடிப்படையில் ஊழியர்களின் புரள்வு

| | ஊழியர்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| 30 வயதுக்கு கீழ | 1 | 2.7 |
| 30-49 வயது | 8 | 3.1 |
| 50 வயதுக்கு மேல் | 1 | 1 |



## பால் அடிப்படையில் ஊழியர்களின் புரள்வு

| | ஊழியர்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| ஆண் | 9 | 2.28 |
| பெண் | 1 | 0.25 |
| மொத்தப் புரள்வு (%) | | 2.53 |

## ஊழியர் அபிவிருத்தி

ஹுனுப்பிட்டிய அலுவலக தொகுதிக்கும் பிரதான களஞ்சிய சாலைக்கும் முன்பாக வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையின் பராமரிப்பு பௌத்த சங்கத்தின் தலைமையின் கீழ் இடம்பெறுகிறது.



ஹுனுப்பிட்டிய அலுவலக தொகுதி மற்றும் பிரதான களஞ்சியப் பகுதியிலுள்ள பழைய அரச மரத்தினை சூழவுள்ள அசுத்தமான சூழல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் மத நல்லிணக்கத்தினை ஊக்கிவிக்கும் முகமாக கணபதி கடவுளின் சிலையொன்றும் வளவினுள் வைக்கப்பட்டுள்ளது.

கம்பனி தொடர்ச்சியாக ஊழியர்களுக்காக ஆன்மீக அபிவிருத்தி திட்டத்தினை ஒழுங்கு செய்துள்ளதுடன் இதற்கு மேலதிகமாக லக்பொஹொர குடும்ப தினம் மற்றும் நத்தார் ஆராதணைப்பாடல்கள் என்பனவற்றை வருந்தோரும் ஒழுங்கு செய்து ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஒன்றுகூடும் நிகழ்வுகளையும் கம்பனி நடாத்தி வருகிறது.







# எமது சமூகம்

## எமது கூட்டிணைந்த சமூக பொறுப்புகள்

நியாயமான எமது கூடிணைந்த சமூகப் பொறுப்புகள் நாட்டின் நிலையான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கிறது. இந்த செயற்பாட்டில் ஈடுபடும் எமது கம்பனி சமுகத்தினராலும் பங்குதாரர்களினாலும் உயர்வாக மதிக்கப்படுவதுடன் அவாகளது நம்பிக்கைக்கு உரிய நிறுவனம் என்ற வகையிலும் வளர்ச்சி பெற்று வருகிறது.

## எமது கூட்டு சமுகப் பொறுப்பு கொள்கை மீதான ஓர் கண்ணோட்டம்.




### எமது சமூகம்

தரமான பொருகளை அறிமுகம் செய்து அதன் மீது ஒழுங்கான ஆய்வுகூட பரிசோதனை

அனுசரனை திடடங்கள்

பல்லினத் தன்மைக்கு மதிப்பளித்தல்.
வரையறுக்கப்பட்டஇலங்கை உரக்கம்பனிக்கு உட்பட்ட திட்டங்கள்.

சமூக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அனுசரனை வழங்கல்.

உரப்பாவனை சம்பந்தமாக வாடிக்கையாளருக்கு ஒழுங்கான முறையில் அறிவு வழங்கும் திட்டம்.

### எமது பொருளாதாரம்

விவசாயத்துறையின் வளர்ச்சிக்காக பங்களிப்பு செய்தல்.

நேரடி மற்றும் நேரடியற்ற தொழில் வாய்ப்புகள்.

வரிகள் செலுத்தல்.

பங்குதாரர்களுக்கான இலாபம்.

கூட்டிணைநத ஆட்சி

### எமது சூழல்

சக்திப் பாவனையை குறைத்தல்.

சூழலுக்கு உகந்த உற்பத்திகளை அறிமுகம் செய்யும் பொழுது ஒழுங்கு முறையிலான ஆய்வுகூட பரிசோதனையை மேற்கொள்ளல்.

தேசிய சேதனப் பசளை திட்டத்திற்கு உதவுதல்.

அலுவலக சூழலை துப்புரவு செய்து பசுமையாக்கல்.

கழிவு முகாமை முறைமை சூழல் முகாமை முறைமை.

## எமது சூழல்

ஒரு பொறுப்புவாய்ந்த கம்பனி என்றவகையில் எதிர்கால சந்ததியினருக்காக எமது சூழலை பாதுகாத்து அதனை பராமரிப்பது எமது கடமை என நாம் நம்புகிறோம்.

நாட்டில் ஆழமாக வேரூண்டி காணப்படும் சூழல் ரீதியிலான சவால்களை புரிந்து கொண்ட நாம் நீண்டகாலத்தில் சேதன உரப்பாவனையின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு விவசாய சமூகத்தினருக்கு மத்தியில் சேதன உரப்பாவனயை ஊக்கிவிப்பதற்காக தேசிய மட்டத்திலும் நிறுவன ரீதியிலும் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் கம்பனி ஈடுபட்டுள்ளது. “எப்பாவல ரொக் பொஸ்பேட்” உரத்தின் ஏக வினியோகத்தர் என்றவகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி, தேசிய சேதன உரத்திடடத்திற்கு அனுசரனை வழங்கியுள்ளது. வருடத்தினுள் கம்பனி 1,925 மெற்றிக் டொன் எப்பாவெல ரொக் பொஸ்பேட் உரத்தினை தேசிய சேதன உரத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது.

சேதன உரப்பாவணையை விருத்தி செய்யும் நோக்கில் கம்பனி லக்பொஹொர வியாபார நாமத்தின் கீழ் சேதன உரக்கலவை உபகரணத்தினை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்வதற்காக நிறுவன ரீதியிலான நடவடிக்கையினை கம்பனி எடுத்துள்ளது. கம்பனியின் முகாமை செப்டம்பர் மாத நடுவில் இந்த உரக்களவை உபகரணத்தினை சந்தைக்கு விடுவதற்கு எதிர்பார்த்துள்ளது. இதே வேளை கம்பனி தமது அலுவலக வளவினுள் ஒரு மாதிரி பண்ணையினை “கொவியா பாய” என்ற பெயரில் நடாத்தி வருகிறது.










சூழலை பாதுகாப்பதில் உள்ள எமது அர்ப்பணிப்பினை பிரதிபலிக்கும் விதத்தில் கம்பனி தனது அலுவலக பகுதியின் சூழலை துப்புரவாகவும் பசுமையாகவும் பராமரித்து வருகிறது. தற்பொழுது கம்பனி ISO 1400:2004 சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக செயல்பட்டு வருகிறது. சூழல் ரீதியிலான முரண்பாடுகளை தீர்ப்பதற்காக திறமையான சூழல் சார்ந்த முகாமை முறைமை ஒன்றினை விருத்தி செய்வதற்காக கம்பனி ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அத்துடன் அவ்வப்பொழுது சூழல் ரீதியிலான செயற்பாட்டினை கம்பனி விருத்தி செய்கிறது. ஆரம்பமாக கம்பனியின் தினந்தோரும் சேரும் கழிவுகளை முகாமை செய்வதற்காக ஒரு எளிய முறை அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. சூழல் ரீதியிலான ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய கம்பனியின் உள்ளக எரிபொருள் நிலையம் புனரமைக் கப்பட்டுள்ளது. ஆபத்தை ஏற்படுத்தும் சூழல் ரீதியிலான முரண்பாடுகளை குறைத்துக் கொள்ளும் நோக்கில் அடுத்த கட்ட நடவடிக்கையாக கழிவு முகாமைக்கான சூழலுக்கு இசைவான முறையில் கைத்தொழில் கழிவுகளை உயர் தொழில் நுட்பத்துடன் முகாமை செய்யும் ஒருவருடன் கம்பனி கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறது.



சூழல் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்திய கம்பனி அதன் வளவிற்குள் சக்திப் பாவனையை குறைப்பதற்காக உயர் தொழில் நுட்பங்களுடன் சக்திப் பாவணை தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் முதல் நடவடிக்கையாக 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து புலோரசன்ட் மின் விளக்குகள் (Tube light) பொருத்தப்பட்டிருந்த அலுவலக கட்டிடங்களில் அதற்கு பதிலாக சீ.எப். எல. மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன. இது மின்சாரத்தினை ஐந்தில் ஒன்று முதல் மூன்றில் ஒன்றாக சேமிக்கிறது. அத்துடன் எட்டில் இருந்து பதினைந்து மடங்கு வரை நீடித்து உழைக்கக் கூடியதாகும் . இதன்படி கம்பனியின் மாதாந்த மின்சார கட்டண செலவில் 20% வீதமாக குறிப்பிடத்தக்க கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டள்ளது. இதற்கு மேலதிகமாக கம்பனி சீ.எப்.எல. (CFL) மின் குமிழ்களுக்கு பதிலாக எல்.ஈ.டி (LED) மின்குமிழ்களை உபயோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இவை சக்தி பாவணை குறைவாகவும். நீடித்து உழைக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றன . மூன்றாவது கட்ட நடவடிக்கையாக கம்பனி மீள புதுப்பிக்கக்கூடிய சக்தி கட்டமைப்பு முறை ஒன்றினை பொறுத்துவதற்கு முகாமை எதிர்பாக்கிறது. இதன் மூலம் கம்பனியின் சக்தி தேவை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

இதற்கு சமாந்திரமாக வெளியேற்றப்பட்ட புலோரசன்ட மின் குமிழ்களை சூழலுக்கு குறைந்தபட்ச சேதத்தினை ஏற்படுத்தும் விதத்தில் அழிப்பதற்கான உடன்படிக்கை ஒன்றும் வழங்குனருடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இது உற்பத்தியாளர்கள் தமது வெளியேற்றப்பட்ட பொருட்களை பொறுப்பேற்று அவற்றை சூழற்சி முறையில் ஈடுபடுத்துவதற்கான ஒரு தூண்டுதலாகவும் அமைந்து காணப்படுகிறது.

நாட்டிலுள்ள தனிப்பட்டவர்களின் ஜீவனோபாயத்திற்கு வலுவூட்டும் செயற்பாடாக சமூக அபிவிருத்தி காணப்படுவதாக நாம் நம்புகிறோம். சமூகத்தினரின் ஜீவனோபாயத்தினை பல வழிகளிலும் விருத்தி செய்து நல்வாழ்வினை ஏற்படுத்துவதில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

கூட்டிணைந்த சமூகப் பொறுப்பின் ஊடாக அடுத்த சந்ததியிரை அறிவாற்றல் உள்ள சந்ததியினராக உருவாக்குவதற்கான நடவடிக்கையில் எமது கவனத்தினை செலுத்தியுள்ளோம். இந்த நோக்கில் நாடுபூராகவும் உள்ள ஐந்தாம்தர புலமைப் பரிசு பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் அடங்கிய சிறு புத்தகங்களையும் வழங்கும் ஒரு திட்டத்தினையும் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இந்த திட்டம் மிகவும் வெற்றி பெற்றுள்ளதுடன் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் பாராட்டுதலை பெற்றுள்ளது.





இளைஞர்கள் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளில் கலந்து கொள்வதனை ஆர்வமூட்டும் விதத்தில் தேசிய விவசாய வாரத்திற்கு சமாந்திரமாக லக்பொஹொர "பாபதிசவாரிய" என்ற பெயரில் ஒரு துவிச்சக்கர வண்டி போட்டி ஒன்றும் வருடந்தோரும் ஒழுங்கு செய்யப்படுகிறது.





பொசன் போயா தினத்தினை முன்னிட்டு கம்பனி ஒரு அன்னதான சாலையினை வருடந்தோரும் ஹுனுப்பிட்டிய களஞ்சிய தொகுதியில் நடாத்தி வருகிறது. இதில் ஒரே முறையில் 500 பேர்களுக்கு உணவருந்தக்கூடிய எல்லா வசதிகளும் காணப்படுகின்றன. 2013/14 ஆம் ஆண்டில் சுமார் 15,000 பேர்களுக்கு ஒரே நாளில் அன்னதான சேவை வழங்கப்பட்டுள்ளது.






பொசன் தானசாலையுடன் இணைந்ததாக பொசன்தின ஆராதணை பாடல்கள் "பொசன் பெத்தி கீ சாரண்ய" என்ற பெயரில் நடாத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் வத்தளை மற்றும் களனிப் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பாடும் திறமையும் ஊக்கிவிக்கப்படுகிறது.



வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் உள்ளக பயிற்சித் திட்டத்தின் மூலம் பட்டப்படிப்பில் ஈடுபட்டிருக்கும் வேளையில் தமக்கு சேவை அனுபவத்தினை பெற்றுக் கொள்ளவும் மற்றும் நிதிஉதவிகளை பெற்றுக் கொள்ளவும் பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. அத்துடன் இந்த சேவை அனுபவத்தின் மூலம் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கை உரக்கம்பனியில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட தொழில் வழங்குனர் ஒருவரிடமிருந்து தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பாக அமைகிறது.

இதற்கு அப்பால் கம்பனி நிதி வருடத்தினுள் மத ஸ்தளங்கள். பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் தேசிய நிகழ்ச்சிகள் அதாவது தயட்ட கிருள மற்றும் தேசிய விவசாய வாரம் போன்றவற்றுக்கு அணுசரனை வழங்குவதற்காக 2 மில்லியன் ரூபா செலவு செய்துள்ளது. இந்த அணுசரனையின் பிரதான நோக்கம் சமூக மற்றும் மத பல்லின தன்மைக்கு மரியாதை செய்யும் நிமிர்ததமாகும்.

## எமது பொருளாதாரம்

தேசிய மானிய உரத்திட்டத்திற்கு வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி பங்களிப்புச் செய்தது மிக முக்கியமானதாகும். 2007 ஆம் ஆண்டின் நெல் உற்பத்தி அளவு 3,131.000 மெற்றிக் டொன்களாக காணப்பட்ட நிலையிலிருந்து இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் நெல் உற்பத்தி 48% வீதத்தில் வளர்ச்சியடைவதற்கு கம்பனி தோல் கொடுத்துள்ளது.

கம்பனி நாடுபூராகவும் ஆயிரக்கணக்கான நேரடியற்ற வேளை வாய்ப்புகளை வழங்கியுள்ள அதேவேளை 428 நேரடி தொழில் வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது.

ஒரு பொறுப்புவாய்ந்த கூட்டிணைந்த பிரஜை என்றவகையில் வரி செலுத்துவதன் முக்கியத்தவத்தினை உணர்ந்த கம்பனி சரியான வேளையில் நேரடி மற்றும் நேரில் வரிகளை செலுத்துவதிலும் ஆர்வமாக உள்ளது.



## இறப்பர் பயிர்ச் செய்கைக்காக

இறப்பர் உற்பத்திக்காக நாம் விசேட களவை உரங்களான அதாவது RA - 465, RU - 462, RU – 465, R/YB, R/SA. போன்றவற்றை வழங்கிவருகிறோம்.






# கூட்டிணைந்த ஆட்சி

கூட்டிணைந்த அட்சி தத்துவம் உறுதியான ஒரு கூட்டிணைந்த கோவை, எழுதப்பட்ட நன்நடத்தை கோவை, முன் உதாரணமாக விளங்கும் பணிப்பாளர் சபை என்பவற்றின் ஊடாக லக்பொஹர நிறுவனத்தில் எல்லா மட்டங்களிலும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு உயர்தரமான கூட்டிணைந்த ஆட்சியினை பேணுவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கிறது. கம்பனி அது வாக்குறுதி அளித்தது போன்று பெறுமானங்களை அதன் பங்குதாரர்களுக்கு வழங்குவதனை கம்பனியின் கூட்டிணைந்த ஆட்சி நுட்பம் உறுதி செய்கிறது. பின்வருவனவற்றுக்கு உடன்படும் விதத்தில் கம்பனியின் கூட்டிணைந்த ஆட்சித் தத்துவம் செயற்படுகிறது.

1. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டம்.
2. அரச வியாபார திணைக்களத்தின், சிறந்த ஆட்சிக்கான அரச வியாபார வழிகாட்டி
3. அரச வியாபார திணைக்களத்தின் கூட்டாட்சி மீதான சிறந்த நடைமுறைக் கோவை

### இயக்குனர் சபை

அரசாங்கம் மற்றும் அதன் பங்குதாரர்கள் சார்பாக நிர்வாக விடயங்களை கவனிப்பதற்காக பொறுப்பாக ஒரு பயனளிக்கக்கூடிய ஒரு சபையினால் கம்பனி நிர்வகிக்கப்படுகிறது. பணிப்பாளர்களது சுருக்கமான விளக்கம் பக்கம் 24 முதல் 27 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

### சபை உள்ளடக்கம்

சபை ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. அவர்களுள் பின்வருபவர்களும் உள்ளடங்குவர்.

- முகாமை, நிதி, சட்டம் மற்றும் விசாயம் ஆகிய துறைகளில் விசேட திறமை கொண்டவர்கள்.
- விவசாய அமைச்சு மற்றும் பொதுத்திறைசேரியின் பிரதிநிதிகள்.
- இரண்டு பதவிநிலையில் உள்ள பணிப்பாளர்கள்.

| | |
|---|---|
| திரு புத்திக்க மடிஹஹேவா | தலைவர் |
| திரு. சுதர்ஷ கனேகொட | செயற்பாட்டு பணிப்பாளர் |
| திரு. பிரேமசிரி அபேனாயக்க | செயற்பாட்டு பணிப்பாளர் |
| திரு. எச்.எம். அஜித் சந்திர | பொதுத்திறைசேரியின் பிரதிநிதி (NED) |
| திரு. ஏ.எல்.ஏ. அசோக்க சிரிவர்தன | விவசாயத்துறை அமைச்சின் பிரதிநிதி (NED) |
| திரு. நெவில் அபேரத்ன | பதவிநிலையற்ற பணிப்பாளர் |
| திரு. தம்மிக்க டி யாப்பா | பதவிநிலையற்ற பணிப்பாளர் |

**நல்லாட்சிதான் எமது 50 ஆண்டுகால வெற்றிகரமான பயணத்தின் இரகசியமாகும்...**

### பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் வகிபாகம்

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப அரச விவசாய முயற்சிகள் திறமையாகவும் பயனளிக்கக் கூடிய விதத்திலும் முகாமை செய்ய வேண்டிய பொறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்படுகிறது. வளங்களை பாதுகாத்தல், சரியாக கணக்குகளை பராமரித்தல், முகாமை சம்பந்தமான சகல சட்டரீதியான மற்றும் ஏனைய ஒழுங்கமைத்தல் தேவைகளுடன் ஏற்புடையதாகவும் உள்ளபடி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே இதனை அடைந்து கொள்ள முடிகிறது.

கம்பனியின் தந்திரோபாய நோக்கங்களை முன்வைப்பதனையும் மற்றும் அந்த தந்திரோபாய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக கம்பனியினை வழிநடாத்துவதனையும் பணிப்பாளர் சபை உறுதி செய்கிறது. பணிப்பாளர் சபை வழக்கமாக, முன்வைக்கப்பட்டுள்ள சிறந்த உள்ளக கட்டப்பாட்டு முறைகள், மற்றும் ஆபத்து முகாமை மற்றும் கம்பனியின் முகாமை நடவடிக்கைகள் பயனளிக்கக்கூடிய விதத்தில் காணப்படுகின்றதா மற்றும் வளங்களும் சொத்துக்களும் பயனுள்ளவிதத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என மேற்பார்வை செய்து வருகிறது. பணிப்பாளர் சபை பொதுமுகாமையாளரினதும் மற்றும் சிரேஷ்ட முகாமை குழுவினதும் செயல்பாடுகள் பற்றிய வருடாந்த மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் நிதி சம்பந்தமான தோற்றத்தின் மீதும் மற்றும் தேவையான வெளிப்படுகள் பற்றியும் வழமையான விதத்தில் போதுமான அறிக்கைகளை பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. கணக்காய்வு மற்றும் ஆபத்து முகாமை குழுக்களை நியமிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்படுகிறது. பணிப்பாளர் சபை ஒரு சிறந்த ஒழுக்காற்று கோவை ஒன்றினையும், ஒழுக்க சம்பந்தமான நியமங்களையும் மற்றும் கூட்டிணைந்த ஆட்சி தந்திரோபாயம் ஒன்றினையும் கம்பனிக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது. மேலும் பணிப்பாளர் சபை கம்பனியின் சகல செயற்பாடுகளும் அரசாங்கத்தின் விதிகள், வழிகாட்டல்கள், சுற்றுநிருபங்கள் போன்றவற்றுக்கு ஏற்ப இடம் பெறுவதனை உறுதி செய்கிறது. இதேவேளை வட்டி சம்பந்தமான எந்தவித பிரச்சினைகளும் ஏற்படாது தவிர்ந்து கொள்வதனையும் உறுதி செய்கிறது.

### பணிப்பாளர் சபைக்கான நியமனம்

பணிப்பாளர் சபைக்கான அங்கத்தவர்களின் நியமனம் சம்பிரதாய முறையிலான போட்டி மற்றும் வெளிப்படை தன்மையுள்ள நடவடிக்கைகளின் ஊடாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பகிறது. பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் கடமைகள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டு நியமனம் வழங்கும் அதிகாரியினால் கையொப்பம் இடப்பட்டிருக்கும். இதனை பணிப்பாளர்சபை அங்கத்தவர்கள் பெற்றுக் கொள்வர்.

புதிதாக நியமிக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அவர்களின் குறிப்பான பொறுப்புகள், கம்பனியின் தந்திரோபாய நோக்கங்கள், கூட்டிணைந்த நோக்கங்கள் மற்றும் கம்பனியின் கூட்டிணைந்த முகாமை மற்றும் கட்டுப்பாட்டு முறைகள், நடைமுறைகள் பற்றிய தேவையான அனுமானங்களை பெற்றுக் கொள்கின்றனர்.

### பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

2014 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை 10 தடவைகள் கூட்டப்பட்டிருக்கிறது. பணிப்பாளர் சபை பத்திரங்கள் மூலம் முகாமை சரியான நேரத்தில் பொருத்தமான தகவல்களை பணிப்பாளர் சபைகளுக்கு வழங்கியிருக்கிறது.

### பணிப்பாளர்களின் ஊதியம்

ஊதியக் கொள்கை மற்றும் தனிப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கான ஊதியம் என்பன அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஊதியக் கொள்கை மற்றும் அளவுத்திட்டத்திற்கு ஏற்ப வழங்கப்படும். பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு தமது சொந்த ஊதியம் பற்றி தீர்மானிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை.

### தலைவர்

வியாபாரத்தினை சரியான திசையில் இட்டுச் செல்வதற்கும் தலைவரின் வகிபாகம் நிறுவன ஆட்சி கட்டமைப்பில் முக்கியமான தொடர்பினை ஏற்படுத்துவதாக காணப்படுகிறது. கூட்டிணைந்த ஆட்சி வியாபித்து காணப்படுவதற்கும், எல்லா பணிப்பாளர்களுக்கும் ஒரேவிதமான கவனிப்பு, ஒரு தெளிவான அமைப்பில் பொறுப்புகளையும் மற்றும் வசதிகளை பங்கிடுதல், பலம் மற்றும் அதிகாரத்தில் சமநிலை பேணல் போன்ற விடயங்களை தலைவர் உறுதிப்படுத்துகிறார். தலைவர் சகல பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கும் தலைமை தாங்கி கூட்டத்தின் போது முறையான விதத்தில் செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றதா என்பது உறுதி செய்யப்படும். தலைவர் செயற்பாட்டு நடவடிக்கைகளில ஈடுபடுவதில் இருந்து தவிர்ந்து தமது விஷேட அறிவினை நிறுவனத்திற்காக உயந்தவிதத்தில் ஈடுபடுத்தி மேற்பார்வை செய்யும் வகிபாகத்தினைக் கொண்டுள்ளார். அத்துடன் சகல பணிப்பாளர்களையும் ஊக்கத்துடன் செயல்படுவதற்கான ஆர்வமும் வழங்கப்படுகிறது.

### பணிப்பாளர் சபை செயலாளர்

பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களும் தமக்கு தேயைான ஆலோசனகள் மற்றும் சேவகளுக்காக சபையின் செயலாளரை அணுகலாம். தொழில்ரீதியில் தேர்ச்சி பெற்ற பணிப்பாளர் சபைச் செயலாளரே பணிப்பாளர்சபை மற்றும் வருடாந்த பொதுக்கூட்ட செயற்பாடுகளுக்கு ஏற்பவும் மற்றும் சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு ஏற்பவும்

சபைக்கு நம்பகரமான மற்றும் பொருத்தமான தகவல்கள் வழங்கப்படுவதாகவும் மற்றும் வருடாந்த பொதுக்கூட்டம் சரியான நேரத்தில் கூட்டப்படுவதாவும் அவதானித்து அதற்கு ஏற்ப பணிப்பாளர் சபைக்கு அறிவுரை வழங்குவதற்கான பொறுப்பும் செயலாளரிடமே காணப்படுகிறது. மேலும் பணிப்பாளர்சபை கூட்ட செயற்பாடுகள் சபையின் தொழிற்பாட்டுக்கு பயனளிக்கக் கூடிய விதத்தில் பின்பற்றப்படுகின்றதா என்பதனையும் உரியவேளையில் பணிப்பாளர்சபை பத்திரங்களை வெளியிடுவதனையும் கம்பனி செயலாளரினால் உறுதி செய்யப்படுகிறது. பணிப்பாளர் சபை நடவடிக்கைகள் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பொறுப்புகள் ,சட்டதிட்டங்கள் பற்றிய வழிகாட்டுதலை வழங்குவதுடன் சகல சபை அங்கத்தவர்களுக்கும் ஆலோசனை மற்றும் உதவிகள் செயலாளரினால் வழங்கப்படுகின்றது.

## பொது முகாமையாளரும் சிரேஷ்ட முகாமையும்

கம்பனியின் வியாபாரத்தினை முகாமை செய்யும் பொறுப்பு பொதுமுகாமையாரிடமும் சிரேஷ்ட முகாமையிடமும் காணப்படுகிறது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தப்படும் பொறுப்பு இவர்களிடமே காணப்படுகிறது. பணிப்பாளர் சபைக்கு சிறந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு தேவையான தகவல்களையும் விளக்கங்களையும் பொதுமுகாமையாளரினாலும் மற்றும் முகாமைக்குழுவினாலும் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படுகிறது. கம்பனியின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பயனளிக்கக்கூடிய முகாமைக்காக தேவையான செயற்பாட்டு திட்டங்கள்,பங்கீடு மற்றும் பராமரிப்பு முறைகள், செயல் முறைகள் மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றை முகாமைக்குழு உருவாக்குகின்றது.

பொது முகாமையாளரினதும் சிரேஷ்ட முகாமைக் குழுவினதும் ஊதியம் பற்றி தீர்மானிக்கப்படும் பொழுது ஊதியம் வழங்கல் திட்டத்தின் வழிகாட்டல்களை கம்பனி பின்பற்றுகிறது.

## நிதி சம்பந்தமான அறிக்கை சமர்ப்பித்தல்

வருந்தோரும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது அதன் தன்மையில் மற்றும் செயற்பாட்டில் உண்மை மற்றும் நியாயமான தன்மை கொண்டதாக தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும். இலங்கையின் நிதி சம்பந்தமான அறிக்கை சமர்ப்பித்தல் நியமங்களுக்கும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரமும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன.பணிப்பாளர் சபை, பொதுமுகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமை ஆகியோருக்கு அவர்களது பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அவசியமான தேவையான நம்பகரமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதற்காக நிறுவனத்தின் வெளிப்படுத்தல்கள் மற்றும் எளிதில் காணக்கூடிய விதத்தில் நடவடிக்கைகள் பேணப்பட்டு வருகின்றன.

## வருடாந்த கணக்காய்வு

கம்பனியின் வருடாந்த கணக்காய்வு ஒரு வெளிவாரி கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்படுகிறது. இக்கணக்காய்வாளர் பொதுத்திறைசேரி, கணக்காய்வாளர் நாயகம் ஆகியோரினால் அனுமதியளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் பட்டியலில் இருந்து வருடாந்த பொதுக்கூட்டத்தின் போது பணிப்பாளர் சபையின் கணக்காய்வு குழுவின் சிபாரிசுடன் நியமிக்கப்பட்டுள்ளார். வருடாந்த கணக்காய்வு அறிக்கை பணிப்பாளர் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெளிவாரியான கணக்காய்வாளர்களிடமிருந்து எமது நிறுவனம் சம்பந்தமாக எந்தவித ஆலோசனைகளையோ வேறு எந்தவிதமான சேவைகளையோ பெற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் நிறுவனத்தின் கணக்காய்வு தீர்ப்புகளில் அவர்களது பக்கச்சார்பின்மை மற்றும் சுதந்திரம் என்பவற்றை பாதிக்கும் என்பதினாலாகும். வெளிவாரிக் கணக்காய்வாளர்கள் ஒவ்வொரு ஐந்து வருடத்திலும் மாற்றம் செய்யப்படுகின்றனர்.

## கம்பனியின் நிறுவன கட்டமைப்பு




| | | |
|---|---|---|
| பி.மு | - | பிரதி முகாமையாளர் |
| உ.மு. | - | உதவி முகாமையாளர் |
| இ.மு. | - | இளைய முயாமையாளர் |
| மு.உ. | - | முகாமைத்துவ உதவியாளர் |
| மு.நி.தி.உ. | - | முதன்மை நிலை திறமைமிக்க ஊழியர் |
| மு.நி.அ.தி.உ. | - | முதன்மை நிலை அறை திறமைமிக்க ஊழியர் |
| மு.நி.தி.உ. | - | முதன்மை நிலை திறமையற்ற ஊழியர் |



## தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான உரங்கள்

நாம் தேயிலை பயிர் செய்கைக்காக விஷேட உற்பத்திகளை அதாவது T-65, T-200, T-750, UT-1625, UT-397, UT-752, VPLC -880, VPLC -945, VPUM-910, U-625, ST/UM-400, STUVA-435, U-709 போன்றவற்றை வழங்குகின்றோம்.



# எமது புவியியல் ரீதியிலான விரிவாக்கம்

**53** நாடு தழுவிய உரவினியோக வலையமைப்பு....

## வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

நாடு தழுவிய உரவினியோக வலையமைப்பு

**வடமாநிலம்**
கொண்டவில்
களிநொச்சி
வாரணி
முரங்கண்

**வடத்திய மாநிலம்**
பதவிய
மதவச்சி
ஹொரொவ்பத்தன
நொச்சியாகம
கிரலோகம
ஹிங்குரக்கொட
வெலிகந்த
பொலன்னருவ

**வடமேல் மாநிலம்**
ஆனமடுவ
மாஹோ
குளியபிட்டிய
குருனாகலை
நாத்தண்டிய
பொல்கஹவலை

**மத்திய மாநிலம்**
தம்புளை
நாகொல்ல
மாத்தளை
கம்பளை
ரிகில்லகஸ்கட
நுவரெலியா

**கிழக்கு மாநிலம்**
திருகோணமலை
கந்தலை
மட்டக்களப்பு
தெஹியத்தகண்டிய
சம்மாந்துரை
அம்பாரை
பொத்துவில்

**மேற்கு மாநிலம்**
ஹுனுபிட்டிய
தொடங்கொட
மத்துகம
பெலவத்தை

**சபரகமுவ மாநிலம்**
கேகாலை
குருவிட்ட
எம்பிலிபிட்டிய

**ஊவா மாநிலம்**
மஹியங்கனை
பிபிலை
பதுளை
வெலிமடை
மொனராகலை
வெள்ளவாய

**தெற்கு மாநிலம்**
சூரியவெவ
வீரவில
தெஹிகஹலந்த
வீரகெட்டிய
பட்ட -அத்த
மெதவியங்கொட
அக்குரஸ்ஸை
கொக்கலை



# ஆபத்து முகாமை




## ஆபத்து முகாமை நடவடிக்கைகள்

ஒரு நிறுவனத்தில், அடையாளம் காணல் மற்றும் விளங்கிக் கொள்வதன் மூலம் ஆபத்து எதில் வெளிக்காட்டுகிறது என்பதனை ஆபத்து முகாமை மூலம் உறுதி செய்யப்படுகிறது. நட்டங்கள் ஏற்படுவதை தவிர்க்கவும் மற்றும் ஏற்பட்ட தாக்கத்தினை குறைப்பதற்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்களையும் நிறுவனம் உருவாக்கி நடைமுறைப்படுத்துகிறது என்பதற்கு ஆபத்து முகாமை உத்தரவாதம் அளிக்கிறது. ஆபத்துக்களை அடையாளம் காண்பற்கு ஆபத்து முகாமை ஒரு தெளிவான அமைப்பு ரீதியிலான அணுகுமுறையினை வழங்குகிறது. ஒரு நிறுவனத்தின் சகல ஆபத்துக்களையும் தெளிவாக புரிந்து கொண்டு அவற்றை அளவீடு செய்து முன்னுரிமை வழங்கி அந்த ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த ஆபத்து முகாமை வழிசெய்கிறது.

இந்த ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும், தவிர்ந்து கொள்வதற்கும், குறைத்துக் கொள்வதற்கும் மற்றும் மாற்றுவதற்கும் தேவையான நன்கு ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்டங்களை கம்பனி சேர்த்துக் கொண்டுள்ளது. எமது ஆபத்து முகாமையின் பிரதான இலக்கு ஆபத்துகளுக்கு முன்னெச்சரிக்கைகளாக செயல்பட்டு வியாபார நடவடிக்கைகளை செவ்வனே நடாத்தி செல்வதற்கு உதவுவதாகும்.

சகல நடவடிக்கைகளுக்கும் முன்னதாக ஆபத்து அடையாளம் காணப்பட்டு அதற்கேற்ப அறவிடப்படுகிறது. இதன் பிறகு இந்த அடையாளம் காணப்பட்ட ஆபத்தினை தவிர்த்துக் கொள்வதற்கு , குறைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு எந்த தந்திரோபாயங்களை பின்பற்றலாம் என திட்டமிடப்படுகிறது. கம்பனியின் அடிப்படையான செயற்பாட்டு நடவடிக்கைகளில் காணப்படும் ஆபத்துகளை முகாமை செய்வதற்கு கம்பனியில் பயனளிக்கக்கூடிய ஆபத்து முகாமை முறைமை ஒன்று செயற்படுத்தப்படுகிறது என்பதனை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்கிறது.

## பிரதான ஆபத்து காரணிகள்

நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபார சூழலில் பல ஆபத்து காரணிகளுக்கும் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளுக்கும் எமது வியாபாரம் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. பிரிவு வரையறைகளுக்கு உட்பட்டதாக அந்த ஆபத்துகளுக்கு கம்பனி முகம் கொடுப்பதுடன் மற்றும் அதனை குறைப்பதற்கான நடவடிக்கைகளும் கம்பனியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஆபத்து காரணிகள் இந்தப்பட்டியலினுள் அடக்கப்படவில்லை. ஆனால் கம்பனிக்கு தெரியாத ஏனைய காரணிகளும் கம்பனியின் வியாபார நடவடிக்கைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

## தந்திரோபாய ஆபத்து

எமது தந்திரோபாய நோக்கங்களில் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாகவே இந்த தந்திரோபாய ஆபத்துக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த ஆபத்து நிறுவனத்தின் நோக்கங்கள் சம்பந்தமாக பணிப்பாளர்களினால் எடுக்கப்படும் அடிப்படை தீர்மானங்களின் அடிப்படையிலேயே இந்த தந்திரோபாய அபாயம் ஏற்படுகிறது. இந்த தந்திரோபாய ஆபத்தின் பின்னணியில் உள்ள அடிப்படை கருத்து என்னவென்றால் நிறுவனத்தில் திட்டமிடப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ள முடியவில்லை என்பதற்கும். இதுசம்பந்தமாக பணிப்பாளர்கள் மற்றும் முகாமைக் குழுவினாலும் ஐந்து வருடத்திற்கான கூட்டிணைந்த திட்டம், மூன்று வருடத்திற்கான நடவடிக்கைத் திட்டம், மற்றும் வருடாந்த திட்டங்கள் தொடர்பாக முறையாக தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தந்திரோபாய ஆபத்துக்களின் உப பிரிவுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

## வியாபார ஆபத்துக்கள்

இந்த ஆபத்துகள், உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் பொருள் விற்பனை, உற்பத்தி கிரயத்தினை பாதிக்கும் பொருளாதார ஆபத்து, தொழில்நுட்ப சூழலில் ஏற்படும் ஆபத்து மற்றும் வாடிக்கையாளர்களின் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம் போன்றவற்றுடன். சம்பந்தப்பட்ட ஆபத்துகளை உள்ளடக்குகின்றன. எமது வியாபாரம் தொடர்பான பிரதான உள்ளக ஆபத்துகள், தற்பொழுது காணப்படும் பொருட்களின் தோல்வி நிலைமை மற்றும் புதிய பொருட்களின் அபிவிருத்தி தொடர்பான ஆபத்தினையும் குறிப்பிடலாம்.

வாடிக்கையாளர்களின் தேவைகள், தொழில்நுட்பம், கைத்தொழில் மற்றும் பொருளாதார நிலைமை மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக தற்பொழுது காணப்படும் பொருட்களின் தோல்வி நான்கு மடங்குகள் ஆகலாம். கம்பனி வழமையாக வாடிக்கையாளர்களின் திருப்தி பற்றிய ஆய்வினை மேற்கொள்வதுடன் அவர்களது தேவையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் மதிப்பீடு செய்கிறது. கம்பனி அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புடன் செயற்படுவதுடன் மற்றும் பிரதான ஒழுங்குபடுத்தும் சபைகள் மற்றும் நிறுவனங்களுடனும் அதாவது தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றுடன் நெருக்கமாக செயல்பட்டு பிரமாணங்கள் மற்றும் சிபாரிசுகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான மாற்றங்களை முன்கூட்டியே அடையாளம் காண்பதற்காக நடவடிக்கை எடுக்கிறது.

சந்தை மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகள் பற்றி நன்கு ஆய்வு செய்யப்பட்டதன் பின்னரே சந்தைக்கு புதிய பொருட்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது.

## வியாபாரம் அல்லாத ஆபத்துகள்

இந்த ஆபத்து கம்பனியின் பிரதான வியாபாரத்துடன் நேரடியாக தொடர்பு கொள்வதில்லை. ஆனால் இது நீண்டகால நிதியுடன் தொடர்புபடுகிறது. கூட்டிணைந்த திட்டம் ஐந்து வருடங்களுக்காக தயாரிக்கப்படுகிறது. மற்றும் நடவடிக்கைத்திட்டம் மூன்று வருடங்களுக்காக தயாரிக்கப்படுகிறது. கம்பனியின் நீண்டகால நிதித் தேவைகள் முன்கூட்டியே அடையாளம் காணப்படுகிறது. மற்றும் இந்த நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நிதிமூலங்கள் பற்றி அடையாளம் காணப்படுகிறது. கம்பனியின் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை சீரமைப்பதற்காகவும் சடுதியாக ஏற்படக்கூடிய நிதித் தேவைகளை இல்லாது செய்யவும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

## செயற்பாட்டு ரீதியிலான ஆபத்து

செயற்பாட்டு ரீதியிலான ஆபத்து, இதன் மூலம் நிறுவனத்தில் என்ன நடைபெறுகின்றது என்ற அறிவினை வழங்குகிறது. அடிப்படையில் செயற்பாட்டு ரீதியிலான ஆபத்து. நிறுவனத்தின் உள்ளகவளங்கள், முறைமைகள், நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களுடன் சம்பந்தப்படுவதாக காணப்படுகிறது. இதில் களஞ்சியங்கள் மற்றும் இயந்திர செயலிழப்பு, ஊழியர் புரள்வு மற்றும் இயற்கையான நிகழ்வுகள் அதாவது காலநிலை போன்றவையும் உள்ளடங்குகின்றன.

- கம்பனி போதுமான அளவு தீ அபாய பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டுள்ளது. இதில் போதுமான அளவு தீயணைப்பு கருவிகள், தீ ஆபாய சமிக்சை, போன்றவையும் இடம் பெறுவதுடன் இந்த வருடத்தினுள் தீயணைப்பு பயிற்சித்திட்டம் ஒன்றினையும் சகல ஊழியர்களுக்காகவும் நடாத்தியுள்ளது.
- தீயினால் ஏற்படக்கூடிய இழப்புகளுக்கு ஒரு காப்புறுதி ஒன்றினை கம்பனி பெற்றுள்ளதுடன், அதிக உணர்வலைகள் கொண்ட ஆய்வுகூட உபகரணங்களுக்காகவும் ஒரு மேலதிக மின்சார காப்பீடு ஒன்றினையும் பெற்றுள்ளது.
- மாற்றலில் உள்ள காசு மற்றும் பாதுகாப்பு பெட்டகங்களில் உள்ள காசு என்பவற்றுக்கான காப்பீட்டு திட்டம் காரணமாக களவு மற்றும் மோசடி போன்ற விளைவுகளை குறைத்துக் கொள்ள கூடியதாகவுள்ளது. ஒவ்வொரு முறையும் இறக்குமதியின் போதும் கப்பலில் ஏற்றப்பட்ட பொருட்களுக்கு போதுமான அளவில் காப்புறுதி செய்யப்படுகிறது. பணம் மற்றும் பணம் சாராத ஊழியர் ஊக்கிவிப்பு திட்டங்கள் காரணமாக கம்பனியின் ஊழியர்களின் புரள்வு குறைவான அளவில் காணப்படுகிறது.

## நிதி சம்பந்தமான ஆபத்து

நிதிப்பத்திரங்களை உபயோகிப்பதன் மூலம் கம்பனி கடன் ஆபத்து, திரவத்தன்மை ஆபத்து மற்றும் சந்தைப்படுத்தும் ஆபத்து உள்ளடங்களாக நிதி ஆபத்துகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## கடன் ஆபத்து

சம்பந்தப்பட்ட தரப்பினர் தனது ஒப்பந்த ரீதியிலான கடமைகளில் இருந்து தவறும் சமயத்தில் கம்பனிக்கு நிதி இழப்புகளை ஏற்படுத்தும் ஆபத்தே கடன் ஆபத்தாகும். கடன் ஆபத்தானது பிரதானமாக கம்பனியினால் கடன் விற்பனை மேற்கொள்ளும் பொழுதும் மற்றும் நிதி நிறுவனங்களில் வைப்புகளை வைத்திருக்கும் பொழுதும் ஏற்படுகிறது. மேலும் கடன் ஆபத்தினை குறைக்கும் நோக்கத்தில்,

- விற்னையாளர்களை நியமிப்பதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட வியாபாரியின் நம்பகத்தன்மை தொடர்பாக விரிவான ஆய்வு ஒன்று ஒரு குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது. இந்தக்குழுவில் பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள், பிரதான உள்ளக கணக்காய்வாளர், நிதி முகாமையாளர் மற்றும் கம்பனியின் சட்ட உத்தியோகத்தர் ஆகியோர் அடங்குகின்றனர்.
- ஏதேனும் கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னர் வியாபாரியிடமிருந்து மற்றும் வியாபார தரப்பினரிடமிருந்தும் வங்கி உத்தரவாதங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.
- ஒவ்வொரு வியாபாரிக்கும் மற்றும் வியாபார தரப்பினர்களுக்கும் அவர்களது கடன்கள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் கடனின் கால எல்லை மற்றும் அதன் பெறுமதி என்பன தீர்மானிக்கப்பட்டுள்ளன.

## திரவத்தன்மை ஆபத்து

திரவத் தன்மை ஆபத்தானது கம்பனிக்கு தனது நிதி ரீதியிலான கடப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையை தோற்றுவிக்கிறது. கம்பனிக்கு சாதாரண வேளைகளிலும் மற்றும் எதிர்பாராத வேளைகளிலும் ஏற்படும் பொறுப்புகளை தீர்ப்பதற்கும் போதுமான அளவில் நிதியினை இப்பொழுதும் வைத்துக் கொள்வதனை உறுதி செய்யும் விதத்தில் கம்பனியின் திரவத் தன்மை முகாமை அணுகுமுறைகள் காணப்படுகின்றன. கூட்டிணைந்த திட்டம் ஐந்து வருடத்திற்காக தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் மூன்று வருடங்களுக்கான செயற் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. கம்பனியின் காசுப் பாய்ச்சல் முன்கூட்டியே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது, வருடத்திற்கான பாதீடு மற்றும் பெறுகைகள் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு கம்பனியின் காசுப் பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களை சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளை இந்த காசு வெளிப் பாய்ச்சல்களுக்கான நிதி மூலங்கள் பற்றியும் அடையாளம் காண்கிறது. அத்துடன் சகல நிதி ரீதியிலான பொறுப்புகளையும் சரியான நேரத்தில் செலுத்தி தீர்ப்பதற்கும் வசதி செய்கிறது.

## சந்தைப்படுத்தல் ஆபத்து

வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களில் (நாணயமாற்று ஆபத்து) ஏற்படும் மாற்றங்கள் காரணமாகவும் வட்டி வீதங்களில் (வட்டி ஆபத்து) ஏற்படும் மாற்றங்கள் காரணமாக சந்தை விலையில் ஏற்படும் மாற்றமே சந்தை ஆபத்தாகும். இது கம்பனியின் வருமானத்தினையும் நிதி பத்திரங்களில் அது கொண்டுள்ள பெறுமதியிலும் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாகும்.

## நாணய மாற்று ஆபத்து

இலங்கை ரூபாவை அமெரிக்க டொலர் நாணயத்தின் பெறுமதியில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் பொழுது இந்த ஆபத்து கம்பனியில் வெளிக்காட்டுகிறது. உரம் இறக்குமதி செய்யும் பொழுது கம்பனியினால் செயல்படுத்தப்படும் பணம் அமெரிக்க டொலர்களாகும். எவ்வாறாயினும் இறக்குமதிகளுக்கான செலுத்தல்கள் இலங்கை நாணய ரூபாய் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

## வட்டி ஆபத்து

கம்பனியின் நிலையான வட்டி வீதங்களுக்கு பெற்றுக் கொண்ட கடன்களின் வட்டி வீதங்கள் மற்றும் வங்கி வைப்புகளின் வட்டி வீதம் தொடர்பில் சந்தை வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக கம்பனிக்கு வட்டி ஆபத்து ஏற்படுகிறது.

## நிபந்தனைகள் சம்பந்தமான ஆபத்து

உர இறக்குமதி, உற்பத்தி, வினியோகம் மற்றும் பாவனை தொடர்பான அரசாங்கத்தின் நிபந்தனைகளில் ஏற்படும் மாற்றம் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் அதாவது தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களினால் பிறப்பிக்கப்படும் சிபாரிசுகள் காரணமாகவும் இந்த ஆபத்து ஏற்படுகிறது. ஒழுங்கமைப்பு சூழலில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அடையாளம் காணும் விதத்தில் கம்பனி இந்த நிறுவனங்களுடன் நெருங்கி செயல்படுகிறது.

# கணக்காய்வு மற்றும் ஆபத்து முகாமைக்குழு அறிக்கை

பயனுள்ள நடவடிக்கைகளுக்கான தீர்மானங்கள் கவனமாக வாதப்பிரதி வாதங்களுக்கு பின்னர் குழுவினால் மேற்கொள்ளப்படுகிறது.

### குழுவில் உள்ளடங்கியுள்ளவர்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைக்குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகிறது. இந்தக் குழுவில் மூன்று பதவிநிலையற்ற பணிப்பாளர்களும் குழுவின் தலைவரும் (இவர் திறைசேரியின் பிரதிநிதி) உள்ளடங்குவர். இந்த குழுவில் உள்ளவர்கள் நிதி சம்பந்தப்பட்ட முகாமை, சட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான விடயங்களில் சிறந்த அறிவு கொண்டவர்கள் என்பதை சபை உறுதி செய்துள்ளது.

### கூட்டம் மற்றும் குழுவினரது கூட்டத்திற்கான பிரசன்னம்

31 மார்ச் 2014 ஆம் ஆண்டில் முடிவடைந்த வருடத்தில் இந்த குழு சம்பிரதாயப்படி 11 முறை கூடியுள்ளது. தேவையான பொழுது பொது முகாமையாளர், சம்பந்தப்பட்ட பகுதித் தலைவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் குழுவின் விசாரணைக்காக அழைக்கப்படுகின்றனர். உள்ளக கணக்காய்வாளர் இந்த கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுவினை கூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்கிறார். இதற்கு ஏற்ப இந்தக்குழுவில் எடுக்கப்படும் சிபாரிசுகள் மற்றும் அறிக்கை என்பன பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. வெளியக கணக்காய்வாளரும் இந்த கூட்டத்தின் போது பார்வையாளராக பங்குபற்றுகிறார்.

### குழுவினது செயற்பாடுகள்

இந்தக்குழு தனக்குள்ள பரந்த அனுபவ அறிவினையும் மற்றும் விசேட அறிவுஞானத்தினையும் பயன்படுத்தி கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் ஆபத்து முகாமை முறைகள் போதுமான அளவு காணப்படுவதை உறுதி செய்வதற்காகவும் மற்றும் வியாபாரத்தின் நடவடிக்கைகள் சிறந்த செயற்பாடுகளுக்கு ஏற்பவும் இடம்பெறுவதனையும் உறுதி செய்வதற்காக பணிப்பாளர் சபைக்கு உதவி செய்கிறது.

- உள்ளக கணக்காய்வு பிரிவின் பொறுப்புகள் பற்றி தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வு திட்டத்தினை மீளாய்வு செய்தல்.
- நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளிலும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்.
- செலவுகளை குறைத்துக் கொள்வதற்காகவும் மற்றும் வீணான செலவுகளை தவிர்ப்பதற்காகவும் வழமையான இடைவெளியில் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன.
- வெளியக கணக்காய்வாளருடன் கலந்துரையாடல் மற்றும் கணக்காய்வாளரின் முகாமைக் கடிதம் மீது பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விதிகள், பிரமாணங்கள், சட்டம் மற்றும் சுற்றுநிருபங்கள் என்பன உடன்பாடு உடையதாக காணப்படுகிறதா என மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்களுடன் நிதிக்கூற்றுகள் இணங்குகிறதா என்பதனை உறுதி செய்வதற்காக நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
- தீர்வு காணல் நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்வு.்.வெளியக கணக்காய்வு அறிக்கைகள். முகாமைக் கடிதங்கள் என்பவறறை மீளாய்வு செயதல்.
- அரச வியாபார நிறுவனங்கள் குழுவின் சிபாரிசுகள்.். பணிப்புரைகளின் அமுலாக்கத்தினை மீளாய்வு செய்தல்.

### குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றல்

### உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகள்

மேற்குறிப்பிட்ட விடயங்களை அமுல் செய்வதற்காக கம்பனியிடம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு கணக்காய்வு பிரிவு காணப்படுகிறது. இந்தப்பிரிவில் நிதிக் கணக்கீடு, கணக்காய்வு மற்றும் வியாபார நிருவாகம் தொடர்பான அனுபவம் வாய்ந்த தொழில்சார் நிபுணர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

கணக்காய்வு பிரிவின் பிரதான நோக்கங்கள்

- கணக்கீட்டு மற்றும் உள்ளக கணக்காய்வு முறைகளை மீளாய்வு செய்தல்.
- நிதி மற்றும் நடவடிக்கை ரீதியிலான தகவல்களை பரிசீலனை செய்தல்.
- செயற்பாடுகளில் பொருளியல் ரீதியிலான தன்மை, திறமை மற்றும் பயனளிக்கக்கூடிய தன்மை பற்றிய மீளாய்வு.
- நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் மீதான கட்டுப்பாடுகள் என்பன அவை திட்டமிட்டபடி செயற்படுத்தப்பட்டு வருகின்றதா என்றும் மற்றும் நடவடிக்கைகளின் பிரதிபலன் ஏற்படுத்தப்பட்ட இலக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்றவிதத்திலே காணப்படுகின்றதா என்றும் தீர்மானிப்பதற்கு, முகாமையாளர்களுக்கு நியாயமான உத்தரவாதம் அளிக்கிறது.
- சட்டங்கள், பிரமாணங்கள், மற்றும் ஏனைய வெளியக தேவைப்பாடுகள் மற்றும் முகாமைக் கொள்கை என்பவற்றுக்கு ஏற்புடையதாக காணப்படுகிறதா என மீளாய்வு செய்தல்.
- விசேட புலணாய்வுகளை நடாத்தல்.

அறிக்கை சமர்ப்பிக்கும் காலகட்டத்தில் கணக்காய்வுகுழு உள்ளக கணக்காய்வு திட்டத்தினை மீளாய்வு செய்வதுடன்

மற்றும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளின் பயனளிக்கும் தன்மை பற்றி வழமையான அடிப்படையில் கண்கானிப்பு செய்கிறது. கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு தேவையான போதுமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்கான பொறுப்பும் இந்தக் குழுவிடமே காணப்படுகிறது. மீளாய்வு ஆண்டினுள் ,உள்ளக கணக்காய்வாளின் அறிக்கைகள், முகாமை பதிலளிப்புகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு சிபாரிசுகளின் பயனளிக்கக்கூடிய தன்மை பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளுக்கு வேண்டிய விடயங்கள் பற்றியும் கவனிப்பதற்காக கணக்காய்வு குழு உள்ளக கணக்காய்வாளர்களை சந்தித்துள்ளது.

உள்ளக கணக்காய்வினை அடிக்கடி மேற்கொள்ள வேண்டிய தேவை ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் ஆபத்து நிலைமையின் தன்மைக்கு ஏற்பவே இடம்பெறுகிறது. மற்றும் இந்த அடிப்படை ஆபத்து முகாமைக்கு உயர்ந்த தீர்வினை வழங்குவதாகவும் குழு கருதுகிறது. மானிய உர வினியோகத்தில் ஏற்படக்கூடிய மோசடிகள் மற்றும் லஞ்ச ஊழல்களை தவிர்க்கும் விதத்தில் நிறுவனத்திற்கு தகவல்களை வழங்குவதற்காக வழங்குபவர்களின் இரகசியம் பேணப்படும் விதத்தில் ஒரு நேரடி தொலைபேசி வலையமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கம்பனியின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் மூன்று மாதகாலத்தினுள் ஏற்பட்ட முக்கியமான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக விவசாய அமைச்சில் இடம்பெறும் கூட்டத்தில் பங்கு பற்றுகிறார். மேலும் கணக்காய்வாளர் நாயக திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் கம்பனியின் சட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்த சகல நடவடிக்கைகளுக்காகவும் வழங்கிய ஆதரவு பெரிதும் பாராட்டப்படுகிறது.

## வெளியக கணக்காய்வு தொழிற்பாடுகள்

கம்பனியின் வெளியக கணக்காய்வாளர் பெர்ணாண்டோ + ஹேவகே கம்பனியாகும். (பட்டயக் கணக்காளர்கள்) இது பட்டயக் கணக்காளர்களின் ஒரு சுயாதீனமான நிறுவனமாகும். 31 மார்ச் 2014 முடிவடைந்த வருடத்திற்கான வெளியக கணக்காய்வினை மேற்கொள்வதற்காக குழு கணக்காளர்களுடன் சந்திப்புகளை நடாத்தியுள்ளது.

## குழுவிற்கான ஆதரவுகள்

தலைவரை உள்ளடக்கிய முகாமைக்குழு தேவையான பொழுது தேவையான தகவல்களையும் மற்றும் உதவிகளையும் வழங்கியுள்ளது. இந்த உதவி குழுவிற்கு தமது சேவைகளை பயனுள்ள விதத்தில் நிதியாண்டினுள் வழங்குவதற்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

## குழுவினை மதிப்பீடு செய்தல்

குழுவின் செயற்பாடுகள் பற்றி பணிப்பாளர் சபை மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளது. அத்துடன் சுயமதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழுவின் செயற்பாடுகள் பயனுள்ள விதத்தில் அமைந்துள்ளதாக பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது.



எச். எம். அஜித் சந்திர
(மேலதிக பணிப்பாளர் நாயகம் திறைசேரி திணைக்களம் செயற்பாடுகள்)
குழுவின் தலைவர்

26 ஆகஸ்ட் 2014





# நிதிக்கூற்றுகள்

31 மார்ச் 2014

முடிவடைந்த ஆண்டுக்கானது

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

# பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(1)மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழ் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுடன் இணங்கக்கூடிய விதத்தில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் கம்பனியின் அலுவல்கள் தொடர்பாக உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் எடுத்துக் காட்டும் விதத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் மற்றும் நிதியாண்டின் இறுதியில் உள்ளபடியான இலாப நட்ட விபரங்களை தயாரிப்பதனை உறுதி செய்வதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

மேலும் சட்டத்தின் 148ஆம் பிரிவின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் அவ்வாறான நிதிக்கூற்றுக்களை சரியாகவும் விரைவாகவும் கணக்காய்வு செய்வதற்கும் நிதிநிலைமையினை நியாயமாகவும் மிகச்சரியாக தீர்மாணிப்பதற்கும் ஏதுவாக உரிய முறையில் கணக்கீட்டு பதிவுகள் பேணப்படுவதனை உறுதி செய்வதும் பணிப்பாளர்களின் பொறுப்பாகும்.

வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் நேர்மை,உண்மை நிலைக்கு பணிப்பாளர் சபை பொறுப்பேற்கிறது. கணக்கீட்டு கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது பொறுத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு அவை ஒழுங்காக பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதனை பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர். அதேவேளை நியாயமான முன்னச்சரிக்கையான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனவே நடவடிக்கைகளில் இவை சரியான விதத்தில் பிரதிபலிக்கின்றன.

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கு ஏற்பவும் இலங்கை கணக்கீட்டு நியமம் ளுடுகுசுளு ற்கு ஏற்பவும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர்.

மேலும் கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப நிதிக்கூற்றுகள் தகவல்களை வழங்குகின்றன. அதேவேளை பணிப்பாளர்கள் கம்பனி தொடர்பாக தமக்குள்ள அறிவு, கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் மற்றும் கம்பனி தொடர்ந்து செயல்படுவது சம்பந்தமான சரியான தகவலின் அடிப்படையில் தனது கருத்துக்களை முன்வைக்கின்றனர். இந்த நிதிக்கூற்றுகள் அதன் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுச் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பாக பணிப்பாளர்கள் நியாயமான நடவடிக்கைகள் எடுத்துள்ளதுடன் வஞ்சனை மற்றும் முறைகேடுகளை தவிர்த்துக்கொள்ளும் நோக்கில் அது சம்பந்தமாக பொருத்தமான உள்ளக கட்டப்பாட்டு அமைப்பு முறையொன்றும் நிறுவப்பட்டுள்ளது. கம்பனி சட்டத்தின் 57ஆம் இலக்க ஷரத்தின்படி அவ்வாறான வினியோகித்தலின் பின்னர் கடன் தீர்க்கும் சக்தி சம்பந்தமாக கவனமாக இருப்பதன் மூலம் வெற்றிபெற முடியும் என்று கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி திருப்தி கொண்டு,கம்பனிச் சட்டத்தின் 56(2)ஆம் ஷ ரத்தின்படி தற்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ள பங்கிலாபங்களை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் உத்தேச பங்கிலாபங்கள் சம்பந்தமாக, கம்பனியின் கடன் தீர்க்கும் சக்தி பற்றிய ஒரு கூற்றினை கம்பனியின் கணக்காய்வாளரிடம் கேட்கப்பட்டுள்ளது.
நிதி கூற்றுகள் சம்பந்தமாக தமது கருத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு பொறுத்தம் என கருதும் பரிசீலிப்புகளை மேற்கொள்வதற்கு கடந்தவருட பொதுக் கூட்டத்தின் போது வெளிவரி கணக்காய்வாளர் என்றவகையில் நியமிக்கப்பட்ட பெருணாந்து மற்றும் ஹேவகே கம்பனிக்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிதிக்கூற்றுகள் சம்பந்தமான கணக்காய்வாளரின் கருத்து 61ஆம் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### ஓத்திசைவு அறிக்கை

கம்பனியின் ஊழியர்களுக்கும் மற்றும் அரசாங்கத்துக்கும், நிதி நிலைமைக்கூற்று தினம் வரை செலுத்த வேண்டியிருக்கும் சகல சட்டரீதியான செலவுகளையும் அறிவுக்கு எட்டிய விதத்தில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது என்று அல்லது அது சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யபட்டிருக்கின்றன என பணிப்பாளர் சபை உறுதி செய்கிறது.



**எஸ்.பீ. மொரவக்க**
பணிப்பாளர் சபையின் அனுமதிப்படி
கம்பனிச் செயலாளர்
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கூட்டுத்தாபனம்

2014 ஜுலை 30ஆம் திகதி

# தலைவரினதும் மற்றும் நிதி முகாமையாளரினதும் பொறுப்புகள் பற்றிய கூற்று

பின்வரும் தேவைகளுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 31மார்ச் 2014 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான நிதி கூற்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

- இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள்.
- 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்.
- திறைசேரியினால் வெளியிடப்பட்ட கூட்டு ஆட்சி சம்பந்தமான சிறந்த நடைமுறைகள்

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் குறிப்பிட்டது போன்று நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளையும் பொருத்தமான விதத்தில் பிரயேகித்துள்ளோம் என்பதனையும் நாம் உறுதிப்படுத்துகிறோம். விபரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு எந்தவித வேறுபாடுகளையும் மேற்கொள்ளாது அதனை சேர்த்துக் கொண்டுள்ளோம். முக்கியமான கணக்கீட்டு கொள்கைள் மதிப்பீடுகள் என்பன உயர்ந்த அளவில் கருத்து பொதிந்தவையாக காணப்படுவதுடன் சிக்கலான விடயங்கள் பற்றி கணக்காய்வு குழுவிடமும் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களிடமும் கலந்துரையாடியுள்ளோம்.

மேலும் நாம் சொத்துக்களை பாதுகாப்பதற்கும்,மோசடிகளை தவிர்ப்பதற்கும் மற்றும் அடையாளம் காண்பதற்கும் மற்றும் ஏனைய முறைகேடுகளை தவிர்ப்பதற்காகவும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டு பதிவுகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் போதுமான கவனம் எடுத்திருக்கிறோம். இவை தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டு அன்றைய தினம் வரை சரிசெய்யப்படுகிறது.

கம்பனியினால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் கம்பனியினால் சரிவர பின்பற்றப்படுகிறது என்பதற்கு நியாயமான உத்தரவாதம் காணப்படுகிறது. அத்துடன் இவை அந்தந்த நேரங்களில் உள்ளக கணக்காய்வாளரின் கணக்காய்வுக்கும் உட்படுகிறது. எவ்வாறாயினும் இயற்கையிலே அமைந்த வரையறைகளும் காணப்படுகின்றன. எனவே உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டில் வழங்கப்படும் உத்தரவாதங்களுடன் இவை அடையாளம் காணப்பட வேண்டும்.

கம்பனியின் கணக்காய்வுக் குழு உள்ளக கணக்காய்வாளர்களுடன் அவ்வப்பொழுது கூடுகிறது. அத்துடன் சுயாதீன கணக்காய்வாளர்களினால் கணக்காய்வின் தாக்கத்தினை மீளாய்வு செய்யப்படுவதுடன் கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாடு, நிதிகூற்றுக்கள் பற்றிய பிரச்சினைகள் கலந்துரையாடப்படுகின்றன. சுயாதீன கணக்காய்வாளர்களுக்கும் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கும் கணக்காய்வு குழு கூட்டத்தின் போது எந்தவொரு விடயத்தினை பற்றி பேசவும் சுதந்திரம் காணப்படுகிறது.
நிதிக்கூற்றுக்கள் வெளிவாரி சுயாதீன கணக்காய்வாளர்களான பெர்ணாந்து + ஹேவகெ கம்பனி பட்டயக் கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

**புத்திக மடிஹஹேவா**
தலைவர்

**பிரியந்த சமரவீர**
முகாமையாளர் (நிதி)

30 ஜுலை 2014

**பெர்ணான்டொ + ஹேவகே கம்பனி**
(பட்டயக் கணக்காளர்கள்)
32, பெர்ணான்டொ பிலேஸ், மொரட்டுவ இலங்கை
தொ.பே.: +94 11 2641589 தொ. நகல்: +94 11 2641589 மின்னஞ்சல்: f_hco@sltnet.lk,
gregory_f@sltnet.lk

**L.S.G. பெர்ணான்டொ**
*MBA, BA, FCA, FIPFASL, DIP In ACC,*

# வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் பங்குதாரர்களுக்கான சுயாதீன கணக்காய்வாளின் அறிக்கை

### நிதிகூற்றுகள் மீதான அறிக்கை

2014 மார்ச் 31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் ("கம்பனி") நிதிநிலைமைக் கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கிட்டு கொள்கைகள், மற்றும் சம்பந்தப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் என்பன உள்ளடக்கப்பட்ட முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்று எங்களினால் கணக்காய்வு செய்யப்பட்டது. இவை பக்கம் 66ல் இருந்து 89 வரை உள்ளடக்கப்பட்டுள்ளது.

### நிதிகூற்றுகள் சம்பந்தமான முகாமையாளர் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது மற்றும் உண்மை மற்றும் நியாயம் என்பன வெளிக்காட்டப்படும் விதத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதும் முகாமையின் பொறுப்பாகும். இந்த பொறுப்பின் கீழ் வஞ்சனை, தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருள் ரீதியான தப்பான கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றினை தயாரிப்பது வெளியிடுவது சம்பந்தமான உள்ளக கட்டுப்பாட்டினை வடிவமைத்தல மற்றும் ,செயற்படுத்தல்,மற்றும் மிகப் பொருத்தமான கணக்கீட்டு கொள்கையினை தெரிவு செய்தல் மற்றும் உபயோகித்தல, சந்தர்ப்பத்துக்கு ஏற்றவிதத்தில் கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களும் உள்ளடங்கும்.

### கணக்காய்வின் எல்லை மற்றும் கருத்தின் அடிப்படையும்

கணக்காய்வாளர்கள் என்ற வகையில் கணக்காய்வின்படி இந்த நிதிக்கூற்றுக்கு எமது கருத்துகளை வெளியிடுவதும் நாம் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப எமது கணக்காய்வினை மேற்கொண்டுள்ளோம். என தெரிவிப்பதும் எமது பொறுப்பாகும். அதன்படி பிழையான கூற்றுக்களில் இருந்தும் குறிப்பிட்ட நிதிக்கூற்றுகள் தவிர்க்கப்பட்டுள்ளது என நியாயமாக உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் எமது கணக்காய்வுகள் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட கணக்கு கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்கு சான்றுகளை ஆராயும் பரீட்சாத்த அடிப்படையில் கணக்காய்வு இடம் பெற்றுள்ளது. ஒரு கணக்காய்வின்போது உபயோகிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளையும் உற்பத்தி மதிப்பீட செய்யப்படுகிறது. மற்றும் முகாமையினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் உள்ளடங்கலாக சமர்ப்பிக்கப்பட்ட மொத்த நிதிக்கூற்றுக்களையும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

கணக்காய்வுகளுக்கு அவசியமாகும் என கருதப்பட்ட சகல விபரங்கள் மற்றும் விளக்கங்கள் எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனவே எமது கருத்துகளுக்கு எம்மால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வானது ஒரு நியாயமான அடிப்படையினை வழங்குகிறது.

### கணக்காய்வு கருத்துக்கள்

எமது அவதானிப்புகளின் மூலம் நிரூபனமாகும் எமது கருத்தானது, 2014மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்கள் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனவும் 2014 மார்ச் 31 ஆம் திகதியில் கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அந்த திகதியில் முடிவடைந்த வருடத்தினுள் அடைந்து கொண்ட பெறுபேறுகள் மற்றும் முடிவடைந்த வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கு ஏற்பவே இடம்பெற்றுள்ளது என்பதாகும்.

### ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவை சம்பந்தமான கூற்று

இந்த நிதிக்கூற்று 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 151 (2) தேவைகளுக்கு ஏற்பவும் காணப்படுகிறது



பெர்ணாந்து + ஹேவகே கம்பனி
(பட்டய கணக்காய்வாளர்கள்)

ஆகஸ்ட் 28, 2014

## வரையறுக்கப்பட்ட இலங்கைஉரக் கம்பனி
### முழுமையான வருமானக்கூற்று
### 31மார்ச் 2014 முடிவடைந்த வருடத்துக்கானது

இலங்கை ரூபாவில்

| | குறிப்பு | 2014 மார்ச் | 2013 |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 2,563,549,727 | 2,450,132,816 |
| விற்பனைக் கிரயம் | 4 | (1,988,082,266) | (1,828,448,719) |
| **மொத்த வருமானம்** | | **575,467,461** | **621,684,097** |
| ஏனைய நடவடிக்கைசார் வருமானம் | 5 | 93,172,755 | 108,809,998 |
| நிர்வாக செலவுகள் | 6 | (447,891,771) | (472,067,026) |
| வினியோக செலவுகள் | 7 | (57,427,928) | (74,037,323) |
| **நடவடிக்கைகளில் இருந்து இலாபம்** | | **163,320,516** | **184,389,745** |
| தேரிய நிதி வருமானம் | 8 | 78,008,248 | 15,504,573 |
| **வரிக்கு முன்னர் இலாபம்** | | **241,328,764** | **199,894,318** |
| வருமானவரி செலவுகள் | 9 | (62,869,312) | (73,037,738) |
| **வருடத்துக்கான இலாபம்** | | **178,459,452** | **126,856,580** |
| **ஒருபங்கிற்கான அடிப்படை சம்பாத்தியம்** | **10** | **3.55** | **2.52** |
| வருடத்துக்கான இலாபம் | | 178,459,452 | 126,856,580 |
| **ஏனைய சகலதும் அடங்கிய வருமானம்** | | **-** | **-** |
| **வருடத்துக்கான மொத்த சகலதும் அடங்கிய வருமானம்** | | **178,459,452** | **126,856,580** |

அடைப்புக்குறியினுள் உள்ளவை கழித்தல்களை குறிக்கும்

பக்கம் 66 முதல் 89 வரை வழங்கப்பட்டிருக்கும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் இன்றியமையாத பகுதிகளாகும்

# வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
## நிதி நிலைக்கூற்று
### 31மார்ச் 2014 முடிவடைந்த வருடத்திற்கானது

இலங்கை ரூபாவில்

| | குறிப்பு | 2014 மார்ச் 31 | 2013 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம்,பொறி,உபகரணங்கள் | 11 | 1,879,174,306 | 1,882,887,059 |
| தொட்டு உணர முடியாத சொத்துக்கள் | 12 | 344,717 | 669,017 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **1,879,519,023** | **1,883,556,076** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் | 13 | 368,758,034 | 309,147,848 |
| வியாபார மற்றும்ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | 14 | 32,677,680,725 | 23,485,322,540 |
| முதிர்வு முதலீட்டுக்காக வைத்தல் (HTM) | 15 | 369,088,140 | 338,620,163 |
| வைப்புகளும் முற்பணங்களும் | | 850,400 | 704,400 |
| முற்பணம்,முன் செலுத்தப்பட்ட செலவுகள் | | 26,488,734 | 2,345,327 |
| சட்டரீதியாக கிடைக்க வேண்டியவைகள் | 16 | - | 34,439,690 |
| ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பனங்கள் | 17 | 33,926,652 | 42,364,042 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 18 | 768,606,041 | 228,474,651 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 19 | 141,813,435 | 126,853,889 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **34,387,212,161** | **24,568,272,551** |
| **மொத்த சொத்துக்கள்** | | **36,266,731,182** | **26,451,828,627** |
| **உரிமையான்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமையான்மை** | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | 20 | 502,456,080 | 502,456,080 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 21 | 1,835,723,580 | 1,835,723,580 |
| வைத்துக் கொள்ளப்பட்ட சம்பாத்தியங்கள் | | 1,500,363,432 | 1,397,891,510 |
| **மொத்த உரிமையான்மை** | | **3,838,543,092** | **3,736,071,170** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணி ஓய்வு நன்மை கடப்பாடு | 22 | 50,189,133 | 44,748,577 |
| அரச உதவிகள் | 23 | 9,981,441 | 17,343,307 |
| பிற்போடப்பட்ட வரி விதிப்பு | 24 | 6,647,539 | 1,086,164 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | **66,818,113** | **63,178,048** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 26 | 11,362,419,612 | 7,399,153,649 |
| வட்டிக் கடன்கள் | 25 | 20,646,483,768 | 14,954,413,210 |
| வைப்புகளும் பெற்றுக்கொண்ட முற்பணங்களும் | 27 | 116,261,797 | 108,096,315 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | | 52,930,556 | 15,000,000 |
| சட்டரீதியான செலுத்த வேண்டியவைகள் | 28 | 4,771,727 | 1,314,401 |
| திரண்ட செலவுகள் மற்றும் ஏற்பாடுகள் | 29 | 172,963,926 | 122,220,294 |
| வங்கி மேலதிக பற்றுக்கள் | 19 | 5,538,591 | 52,381,540 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **32,361,369,977** | **22,652,579,410** |
| **மொத்த உரிமையான்மையும் பொறுப்புகளும்** | | **36,266,731,182** | **26,451,828,627** |

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந்த நிதிக்கூற்று உடன்படுகிறது என நான் இத்தாள் உறுதிப்படுத்துகிறேன் பக்கம் 66 முதல் 89 வரையிலானது இந்த நிதிக்கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்

நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றினை தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையிரின் பொறுப்பாகும்.

தலைவர்

பணிப்பாளர்

திகதி:- 31 ஆகஸ்ட் 2014
கொழும்பு
அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன

## வரையறுக்கப்பட்ட இலங்கைஉரக் கம்பனி
உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய கூற்று
31மார்ச் 2014 முடிவடைந்த வருடத்துக்கானது

இலங்கை ரூபாவில்

| | அனுமதித்த மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | வைத்துக் கொண்ட சம்பாத்தியம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01.ஏப்ரல் 2012ல் உள்ளவாறு மீதி | | | | |
| பங்கிலாபங்கள் | - | - | (15,000,000) | (15,000,000) |
| **01.மார்ச் 2013ல் உள்ளவாறு மீதி** | **502,456,080** | **1,835,723,580** | **1,397,891,510** | **111,856,580** |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 178,459,452 | 178,459,452 |
| சகலதும் உள்ளடங்கிய மொத்த வருமானம் | | | | **178,459,452** |
| பங்கிலாபங்கள் 2012/2013 | - | - | (23,056,974) | (23,056,974) |
| பங்கிலாபத்தக்கான ஏற்பாடு 2013/2014 | - | - | (52,930,556) | (52,930,556) |
| **31மார்ச் 2014ல் உள்ளவாறு மீதி** | **502,456,080** | **1,835,723,580** | **1,500,363,432** | **102,471,922** |

அடைப்புக்குறியினுள் உள்ளவை கழித்தல்களை குறிக்கும்

பக்கம் 66 முதல் 89 வரை வழங்கப்பட்டிருக்கும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் இன்றியமையாத பகுதிகளாகும்

## வரையறுக்கப்பட்ட இலங்கைஉரக் கம்பனி
காசுப்பாய்ச்சல் கூற்று
31மார்ச் 2014 முடிவடைந்த வருடத்துக்கானது

| இலங்கை ரூபாவில் | | 2014 | 2013 |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து காசுப் பாய்ச்சல் | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 241,328,764 | 199,894,318 |
| **செம்மையாக்கல்கள்** | | | |
| பெருமானத்தேய்வு | | 26,339,772 | 35,042,042 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான பழுதடைவுக்கான ஏற்பாடு | | - | 680,000 |
| தொட்டு உணர முடியாத சொத்தக்களை திருப்பி செலுத்தல் | | 324,300 | 208,884 |
| அரச உதவிகளை திருப்பி செலுத்தல் | | (7,361,866) | (2,791,284) |
| ஆதனம்,பொறி மற்றும் இயந்திர விற்பனை மீதான இலாபம்/நட்டம் | | (2,277,722) | (867,702) |
| வியாபார வருமதிகள் பாதிக்கப்படல் | | 40,351,788 | 15,740,931 |
| ஆண்டுக்கான பணிக்கொடை கட்டணம் | | 7,144,846 | 6,679,983 |
| அசையா பொருட்பதிவேடுகள் சேதமடைதல் | | (31,606) | 1,400,455 |
| சட்ட உரிமை கோரல்களுக்கான ஏற்பாடுகள் | | 22,943,253 | 36,080,199 |
| வட்டி வருமானம் | | (97,262,460) | (56,041,160) |
| வட்டி செலவுகள் | | 19,254,213 | 40,536,587 |
| **தெழில்படு மூலதன மாற்றத்துக்கு முன் செயற்பாட்டு இலாபம்** | | **250,753,282** | **276,563,253** |
| **தொழில்படு மூலதனத்தில் மாற்றம்** | | | |
| பொருட்பதிவேடுகள் | | (59,578,579) | 222,175,641 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | | (9,232,709,973) | (2,671,060,458) |
| வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் | | (146,000) | 4,706,651 |
| முன்செலுத்திய செலவுகள் | | (24,143,407) | 8,803,740 |
| ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | 8,437,390 | (8,481,196) |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | | 3,963,265,963 | (7,264,318,480) |
| சட்ட சம்பந்தமான செலுத்த வேண்டியவைகள் | | (5,563,170) | - |
| பெற்றுக் கொண்ட வைப்புகளும் முற்பணங்களும் | | 8,165,482 | 3,781,287 |
| திரண்ட செலவுகள் மற்றும் முற்பணம் | | 27,800,379 | (4,466,431) |
| **செயற்பாடுகளில் இருந்து காசு உருவாக்கம்** | | **(5,063,718,634)** | **(9,432,295,993)** |
| பணிக்கொடை செலுத்தியது | | (1,704,290) | (4,632,856) |
| வட்டி செலுத்தியது | | (19,254,213) | (40,536,587) |
| வரிகள் செலுத்தியது | | (9,428,723) | (39,694,372) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து தேரிய காசுப்பாய்ச்சல்** | | **(5,094,105,859)** | **(9,517,159,808)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்சல்கள்** | | | |
| ஆதனம்,பொறிமற்றும் உபகரணம்.பெறுகை | | (22,628,659) | (10,707,368) |
| தொட்டு உணர முடியாத சொத்துக்கள் பெறுகை | | - | (877,901) |
| ஆதனம்,பொறி மற்றும் இயந்திர விற்பனை மீதான வருமானம் | | 2,279,362 | 1,523,729 |
| திறைசேரி உண்டியல் மீதான (முதலீடு) தேரிய வருமானம் | | (30,467,976) | 132,405,590 |
| ஏனைய நிதிச் சொத்துக்களில் தேரிய முதலீட்டு வருமானம் | | (540,131,390) | (90,712,583) |
| பெற்றுக் கொண்ட வட்டி | | 92,843,432 | 51,601,469 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் உபயோகித்த தேரிய காசு** | | **(498,105,232)** | **83,232,936** |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆண்டினுள் செலுத்திய பங்கிலாபம் | | (38,056,974) | (9,000,000) |
| வருடத்தினுள் பெற்ற கடன் | | 25,113,976,817 | 21,465,432,551 |
| வருடத்தினுள் செலுத்திய கடன்கள் | | (19,421,906,258) | (11,880,949,269) |
| **நிதி நடவடிக்கைகளில் உபயோகித்த தேரிய காசு** | | **5,654,013,585** | **9,575,483,282** |
| **வருடத்தினுள் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேரிய மாற்றங்கள்** | | **61,802,494** | **141,556,410** |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும் | | 74,472,349 | (68,398,461) |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும்** | குறிப்பு 19 | **136,274,843** | **74,472,349** |

அடைப்புக்குறியினுள் உள்ளவை கழித்தல்களை குறிக்கும்

பக்கம் 66 முதல் 89 வரை வழங்கப்பட்டிருக்கும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றின் இன்றியமையாத பகுதிகளாகும்

## 1 கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1 பொதுவானவை

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி உருவாக்கப்பட்டு இலங்கையில் அமைந்திருக்கும் முற்றிலும் அரசாங்கத்துக்கு சொந்தமான ஒரு கம்பனியாகும்.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மைகளும்

நெல்,தேயிலை,தென்னை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களுக்கு தேவையான உரவகைகளை இறக்குமதி செய்து அவற்றை கலந்து சந்தைப்படுத்துவது இந்த கம்பனியின் பிரதான நடவடிக்கையாக காணப்படுகிறது.

### 1.3 நிதிவருடம்

கம்பனியின் நிதி அறிக்கையினை சமா்ப்பிக்கும் திகதி 31 மாா்ச்சில் முடிவடைகிறது.

### 1.4 பதிவுக் காரியாலயம்

கம்பனியின் பதிவுக் காரியாலயம் பிஷொப்ஹில் ஹுனுப்பிட்டியவ வத்தளையில் அமைந்துள்ளது.

### 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

31 மாா்ச் 2014ல் உள்ளவாறு கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 399 ஆகும் (2013ல் 389)

### 1.6 வெளியிடுவதற்காக அனுமதித்த திகதி

31மாா்ச் 2014ல் முடிவடைந்த வருடத்துக்கான கம்பனியின் நிதி கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் 28 ஆகஸ்ட் 2014ஆம் திகதி பணிப்பாளா் சபை தீா்மானத்தின்படி வழங்கப்பட்டது.

## 2 முக்கியமான கணக்கீட்டு கொள்கையின் சாராம்சம்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமம் (LAKS)ற்கு ஏற்ப கம்பனியின் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. காணி கட்டிடங்களின் மீள் மதிப்பீட்டின் மூலம் திருத்தியமைக்கப்பட்டது போன்று நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரய சம்பிரதாயப்படி தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் (SLFRSs) ற்கு ஏற்ப தயாரிக்கப்படும் கணக்கீட்டு கூற்றுக்கல் சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகளின் பாவனையையும் வேண்டி நிற்கிறது. அத்துடன் கம்பனியின் கணக்கீட்டு கொள்கையினை பிரயோகிக்கும் செயல் முறையில் சிறந்த தீா்வினை பெறுவதற்காக முகாமையினையும் வேண்டி நிற்கிறது. உயா்ந்த அளவில் கருத்துக்கள் இல்லாத சிக்கல் நிலைக்கு உள்ளாகும் பகுதிகள் அல்லது நிதிக்கூற்றுகளுக்கு எண்ணங்கள் அல்லது மதிப்பீடுகள் முக்கியமாக தேவைப்படும் பகுதிகள் பற்றிய விபரங்கள், 2.26ல் வழங்கப்பட்டுள்ளன.

#### 2.1.1 2013 ஆம் ஆண்டில் சோ்த்துக் கொள்ளப்பட்ட புதிய கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வெளியிடப்படும் கருத்துகள்.

LKAS 19இ ற்கான திருத்தும், “ஊழியா் நன்மை” கம்பனி டுமுயுளு 19 ற்கான திருத்தத்தினை சோ்த்துக் கொண்டுள்ளது. இதன் அமுலாக்கம் 2013 ஜனவரி 01 அல்லது அதற்கு பிறகு ஆரம்பமாகவும் நிதியாண்டிலிருந்து அமுலாகும்.

#### 2.1.2 இலங்கை கணக்கீட்டு நியமம் (SLFRS/LKAS) வெளியிடப்பட்டது.ஆனால் இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

இந்த நியமம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்படும் திகதிவரையில் செயற்படுத்தப்படவில்லை. அதன் பட்டியல் கீழே வழங்கப்பட்டுள்ளது.

அ. SLFRS -9 நிதிசம்பந்தமான பத்திரங்கள், SLFRS -9 ஆனது LKAS 39 பதிலாக வெளியிடப்பட்டுள்ளது.மற்றும் LKAS 39 ல் வரையறை செய்யப்பட்டது போன்று நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் பற்றி அறிந்து கொள்ளவும், வகைப்படுத்தவும் மற்றும் அளவீடு செய்யவும் இந்த நியமம் பிரயோகிக்கப்படுகிறது. இந்த நியமம் 2015 ஜனவரி 01 அல்லது அதற்கு பின்பு ஆரம்பமாகும் நிதி வருடத்தினுள் செயற்படுத்தப்படும்.

ஆ. SLFRS-12 ஏனைய பொருட்களில் வெளிக்காட்டும் வட்டிகள் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பாக LKAS 27 ல் ஆரம்பத்தில் காணப்பட்ட சகல வெளிப்பாடுகளையும் SLFRS -12 உள்ளக்கப்படுகிறது அத்துடன் LKAS 31 மற்றும் LKAS 28 ல் காணப்பட்ட சகல வெளிப்படுத்தல்களையும் உள்ளடக்குகிறது. மானியங்கள், கூட்டு ஏற்பாடுகள், சேர்க்கப்பட்ட பொருட்களில் ஒரு பொருளினுடைய வட்டி தொடர்பான வெளிக்காட்டல்களை குறிக்கிறது. இந்த நியமம் 2014 ஜனவரி 01 அல்லது அதற்கு பிறகு உள்ள வருட காலகட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

இ. SLFRS -13 நியாயமான பெறுமதி அளவீடு SLFRS -13 நியமமானது சகல நியாயமான பெறுமதி அளவீடுகளுக்கும் மற்றும் வெளிக்காட்டல்களுக்கும் வழிகாட்டியாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நியமத்தின் விளைவுகள் பற்றி தற்பொழுது கம்பனி மதிப்பீடு செய்கிறது. ஏனெனில் இந்த நியமம் நிதிநிலைமை மற்றும் செயற்பாடுகளில் இடம்பெறவுள்ளது. இந்த நியமம் 2014 ஜனவரி 01 ல் அதற்கு பிறகு வரும் நிதியாண்டுகளில் செயற்படுத்தப்படும்.

## 2.2 கணக்கியல் கொள்கையில் மாற்றம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்படும் கால கட்டத்திற்கும் மற்றும் SLFRSs ற்கு மாற்றப்பட்ட திகதியில் நிதி நிலைமையின் ஆரம்ப ஐடுகுசுஐ கூற்றுக்கும் படிப்படியாக பிரயோகிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் விடயங்களுடன் ஒப்பிடத்தக்க வகையில் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றின் முன்னிலைப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல்கள் சிறப்பாக காணப்படும் விதத்தில் பொருத்தமான இடத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன

## 2.3 வெளிநாட்டு நாணய மாற்றல்

### 2.3.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிக்கும் நாணய அலகு

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் நடவடிக்கைகள் ஆரம்ப பொருளாதார சூழலில் காணப்படும் நாணயத்தின் அடிப்படையில் கம்பனியினால் அளக்கப்படுகிறது. இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (LKR) முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவே கம்பனியின் முன்னிலைப்படுத்தும் நாணயமுமாகும்.

### 2.3.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கலும் மீதிகளும்.

அந்நிய நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நிலவிய நாணய மாற்று வீதத்தில் ரூபாவுக்கு நாணயமாற்றம் செய்யப்பட்டது. இந்த கொடுக்கல் வாங்கல் காரணமாக, அந்நிய நாட்டு நாணய பரிமாற்றத்தில் பெற்றவைகள் மற்றும் இழப்புகள் மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் தினத்தில் வெளிநாட்டு நாணய ஆதிக்கத்துக்கு உட்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகளில் பரிமாற்றல் வீதங்கள் என்பன விரிவான வருமானக்கூற்றில் கணக்கு வைக்கப்பட்டது. கிரயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக ஏற்பட்ட மாற்றல் வித்தியாசங்கள் விரிவான வருமானக்கூற்றில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

### 2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கம்பனியின் முகாமையின் தீர்மானத்தின்படி ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்களுக்கான கிரயம் பிரதானமாக குறிப்பிட்ட இடத்திற்கு எடுத்து வருவதற்கான கிரயம் மற்றும் வேலை செய்யும் விதத்தில் அல்லது பாவிக்கக்கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் சொத்துக்களின் கூட்டுத் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்பனி காணி மற்றும் கட்டிடத்தினை மீள்மதிப்பீட்டு பெறுமதியிலும் மற்றும் மாற்றத்தினை முகப் பெறுமதியிலும் மேற்கொண்டது என்பது உரிமையாண்மை கூற்றில் அடையாளம் காணப்பட்டது. காணி கட்டிடத்துக்கான முகப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு கம்பனி விஷேட மதிப்பீட்டாளர்களை 2010 ஈடுபடுத்தியுள்ளது.

பொருட்களின் பொருளாதார நன்மை கம்பனிக்கு எதிர்காலத்தில் கிடைக்கும் சாத்தியம் காணப்பட்டால் அத்துடன் பொருளின் கிரயத்தினை நம்பகரமாக அளவிடக்கூடியதாக காணப்பட்டால் மாத்திரம் பின்தொடரும் கிரயங்கள் சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியில் உள்ளடக்கப்படும். அல்லது ஒரு சொத்தாக அடையாளம் காணப்படும். ஏனைய எல்லா பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகளும் அவை ஏற்பட்ட குறிப்பிட்ட நிதிவருடத்தில் விரிவான வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்படும்.

காணி பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை. ஏனைய சொத்துக்கள் இலகுவான முறைப்படி அதன் கிரயத்துக்கு அல்லது மீள்மதிப்பு பெறுமதியில் சொத்தின் ஆயுள் காலத்தினுள் பின்வரும் வீதங்களில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடம் | 40 வருடங்கள் |
| பொறி இயந்திரம் | 05-10 வருடங்கள் |
| மோட்டார் வாகனம் | 05 வருடங்கள் |
| மோட்டர் சைக்கிள்கள் | 03 வருடங்கள் |
| அலுவலக தளபாடம் | 03 வருடங்கள் |
| அலுவலக உபகரணம் | 03 வருடங்கள் |
| வேலைத்தள உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| ஆய்வுகூட உபகரணம் | 03 வருடங்கள் |
| ஏனைய உபகரணம் | 03 வருடங்க் |
| சிற்றுண்டி சாலை உபகரணம் | 05 வருடங்கள் |
| கனணி உதிரிப்பாகங்கள் | 03 வரடங்கள் |

ஒரு சொத்தின் பெறுமதி. அந்த சொத்தில் இருந்து மீள அறவிட்டுக் கொள்ளக்கூடிய பெறுமதியினை விட அதிகமாக காணப்படும் பொழுது குறிப்பிட்ட சொத்தின் பெறுமதி, மீள அறவிட்டுக் கொள்ளக் கூடிய பெறுமதிவரை பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

### 2.4.2 தொட்டு உணர முடியாத சொத்துக்கல்

பெற்றுக் கொள்ளப்படும் கனணி மென் பொருள்கள் மற்றும் செயற்படுத்தும் முறைகளை செயற்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஏற்படும் செலவும் மூலதனமாக்கப்பட்டுள்ளது. தொட்டு உணர முடியாத சொத்துக்கள், அதன்கிரயத்தில் இருந்து திரண்ட பெறுமானத் தேய்வு அல்லது திரண்ட பெறுமானத்தேய்வினை கழித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கிரயம் பின்வருமாறு பயன் தரும் ஆயுட் காலத்துக்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கனணி மென்பொருள்கள் | வருடம் 03 |

கனணி மென்பொருள்கள் பராமரிப்பதற்காக ஏற்படும் செலவு ஒரு செலவாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 2.4.3 நிதி அல்லா சொத்துக்களின் சேதங்கள்

அறிக்கை சமர்ப்பிக்கும் ஒவ்வொரு காலத்தின் முடிவிலும், சேதமடைதலுக்கான ஒரு சமிக்கை காணப்படுகிறதா என ஆராய வேண்டும்.இதன்படி கம்பனியின் ஆதனம் , பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் தொட்டு உணர முடியாத சொத்துக்களை மீளாய்வு செய்யப்படுகிறது. அவ்வாறு ஏதும் சமிக்கை காணப்படுமாயின் கம்பனி அந்த சொத்தின் அறவிடக் கூடிய தொகையினை மதிப்பீடு செய்யும். (ஏதும் இருந்தல்) ஒவ்வொரு சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகையை கணிப்பிடுவது சிரமமாக காணப்படும் வேளையில் கம்பனி நிதி உருவாக்கம் செய்யும் பிரிவுகளில் மீள அறவிடக்கூடிய தொகையினை மதிப்பீடு செய்யும்.

பாவனைப் பெறுமதி மற்றும் விற்பனைக்கான கிரயங்களை கழித்து வரும் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகையே நியாயமான பெறுமதியின் அதிகூடிய தொகையாகும். பாவனையில் உள்ள பெறுமதியினை மதிப்பிடுகையில், முன்-வரி தள்ளுபடி வீதத்தினை உபயோகித்து மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் தற்போதைய

பெறுமதிக்கு குறைத்து மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்த முன்- வரி தள்ளுபடி விகிதம், பணத்தின் நேர அடிப்படையிலான பெறுமதியின் தற்போதைய சந்தை வரிவிதிப்புகளும், எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் செம்மையாக்கப்படாத குறிப்பான சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆபத்துகளிலும் பிரதிபலிக்கின்றது.

ஒரு சொத்தின் (அல்லது காசு உருவாக்கல் பிரிவின்) மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகைஅந்த சொத்தின் நியாயமான முகப் பெறுமதியினைவிட குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டால் குறிப்பிட்ட சொத்தின் (அல்லது காசு உருவாக்கல் பிரிவின்) மீளப்பெற்றுக் கொள்ளக்கூடிய தொகைக்கு குறைக்கப்படும். அத்துடன் பழுதடைதலுக்கான ஒரு இழப்பு உடனடியாக விரிவான வருமானக்கூற்றில் அடையாளப்படுத்தப்படும்.

## 2.9 நிதிச் சொத்துக்கள்

### 2.9.1 கம்பனி ஆரம்ப அறிமுகத்தின் போது தமது மூலதன சொத்துக்களை பின்வரும் விதத்தில் வகைப்படுத்தப்படுகிறது.

அ) முதிர்வடையும் வரை நடைமுறைப்படுத்தும் நிதி முதலீடுகள்
ஆ) கடனும் மற்றும் கிடைக்க வேண்டியவைகளும்

#### அ) முதிர்வடையும் வரையும் வைத்துக கொள்ளும் முதலீடுகள் ( HTM)

முதிர்வடையும் வரை வைத்துக் கொள்ளும் முதலீடுகள் ஒரு மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளாத நிலையான அல்லது தீர்மானிக்கக் கூடிய செலுத்தல்களுடன் கூடிய நிதிச் சொத்துக்களாகும். கடன்கள் மற்றும் ஏனைய வருமதிகளைவிடவும் நிலையான முதிர்வினைக் கொண்டதாகும் கம்பனிக்கு முதலீடுகளை முதிர்வடையும் வரை வைத்துக் கொள்வதற்கு ஒரு உறுதியான எண்ணம் மற்றும் இயலுமை காணப்பட்டால் முதலீடுகளை முதிர்வடையும் வரை வைத்துக் கொள்ளும் முதலீடுகள் என வகைப்படுத்தப்படுகிறது. முதிர்வடையும் வரை வைத்துக் கொள்ளும் முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகிறன.

#### ஆ) கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகளும்

மூலத்தினில் இருந்து பெற்றுக் கொள்ள முடியாத நிதிச்சொத்துக்களான கடனும் மற்றும் கிடைக்க வேண்டியவைகளும் முதிர்வடையும் பொழுது குறிப்பிட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை சமர்ப்பிக்கும் தினத்தில் இருந்து 12 மாதங்களுக்கு பிறகு முதிர்வடையவுள்ள கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் தவிர ஏனைய கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியின் கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் கிடைக்க வேண்டிய மானியங்கள், வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள், மீள் கொள்வனவு செய்யக்கூடிய அரச முறிகள், நிலையான வைப்புகள் ,முன் செலுத்தல்கள், முற்பணம்,வைப்புகள்,ஊழியர் கடன்கள் மற்றும் அறிக்கையிடும் தினத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும் இந்த நடைமுறை சொத்துக்களில் அடங்கும்.

### 2.9.2 அடையாளம் காணுதலும் அடிப்படை அளவீடுகளும்

கம்பனியின் கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் மற்றும் அவை ஏற்பட்ட திகதியில் ஆரம்பமாக அடையாளம் காணப்படுகின்றது. ஏனைய நிதிச் சொத்துக்கள் ஆரம்பத்தில் அடையாளம் காணப்படும் பொழுது வியாபாரம் இடம் பெற்ற திகதியில், அதாவது கம்பனியின் நிதி உபகரணங்களில் ஒப்பந்தம் செய்து கொண்ட தரப்பினா் என்ற நிலையை அடைந்த திகதியில் அடையாளம் காணப்படுகிறது. ஒரு நிதிச் சொத்து ஆரம்பத்தில் அதன் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகிறது. அத்துடன் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான றுெமதியினை கொண்டதாக காணப்படாத வேளையில் இவை கொடுக்கல் வாங்கல் கிரயத்துக்கு சாட்டப்படுகிறது.

நிதிச்சொத்துக்களின் மூலம் பணம் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை காலாவதியாதல் அல்லது நிதிச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆபத்து மற்றும் பயன்களை வேறு தரப்பினருக்கு மாற்றும் செய்யப்பட்டு இருக்கும் வேளைகளில் கம்பனியின் மூலம் அதன் நிதிச் சொத்துக்கள் பற்றி அடையாளம் காணுவதை நிறுத்திக் கொள்ளும்

**2.9.3** பின்தொடரும் காலத்துக்கான அளவீடுகள்

அ) முதிர்வடையும் வரையும் வைத்துக கொள்ளும் முதலீடுகள் ( HTM)

முறையாக குறைந்து செல்லும் கிரய கணக்கீட்டின் போது சம்பந்தப்பட்ட கையகப்படுத்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல் கிரயம் மீதான தள்ளுபடி மற்றும் மேலதிக கொடுப்பனவு கணக்குகளும் கவனத்தில் கொள்ளப்படுகிறன.

ஆ) கடனும் மற்றும் கிடைக்க வேண்டியவைகளும்

ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டதன் பின்னா் கடனும் மற்றும் ஏனைய கிடைக்க வெண்டியவைகளும் பயனளிக்க கூடிய வட்டி வீதத்தினை உபயோகித்து முறையாக குறைந்து செல்லும் கிரயத்தில் சேதத்துக்கான ஏற்பாடுகளை கழித்ததன் பின்னா் கணக்கிடப்படுகிறது.

**2.9.4** நிதிச் சொத்துக்கள் சேதமடைதல்

முறையாக குறைந்து செல்லும் கிரயத்தில் நடைமுறைப்படுத்தும் சொத்துக்கள்

கம்பனி ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் தமது சொத்துக்கள் சேதத்துக்கு உட்பட்டுள்ளதா என்பதற்கு சான்றுகள் காணப்படுகிறதா இல்லையா என்பது பற்றி ஆராய வேண்டும். நிதிச் சொத்து ஒன்றின் சேதம் விளைவித்தால் அந்த சேதத்தின் நட்டத்தினை ஏற்றுக் கொள்வது, முதல் தடவையாக அடையாளம் காணப்பட்டதன் பின்னா் ஏற்பட்ட ஒரு காரணம் (சம்பவம்) அல்லது பல காரணங்கள் காரணமாகும் என சாட்சிகள் காணப்படுமாயின் மற்றும் அந்த நட்டம் ஏற்பட்டதனால் எதிர்கால நிதிப் பாய்ச்சல்கள் மீது ஏற்படும் தாக்கம் நம்பிக்கையுடன் மதிப்பீடு செய்ய முடியுமாக இருந்தால் மாத்திரமேயாகும்.

கடன்கள், வருமதிகள்,மற்றும் முதிர்வடையும் வரை வைத்துக் கொள்ளும் முதலீடுகள் என்பன முறையாக குறைந்துசெல்லும் கிரயத்தில் முன்னெடுக்கப்படுகிறது. நிதிச் சொத்துக்களின் ஆரம்ப சாத்தியமான வட்டி வீதத்தின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்ட (எதிர்கால கடன் இழப்புகள் இதற்கு உட்படுத்தப்படவில்லை) மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் மற்றும் சொத்துக்கள் அது கொண்டிருக்கும் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமே இழப்பின் தொகையாக அளவிடப்படுகிறது.

## 2.10 இருப்பு

இருப்பு(நேரடி மற்றும் கலவை உரம்) கிரயத்தில் இருந்து மானியம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. கிரயம் கணக்கிடப்படுவது. முன்வந்து முன் செல்லும் முறையிலாகும். மூலப் பொருட்கள் ,நேரடி ஊழியம்,ஏனைய நேரடிச் செலவுகள் மற்றும் இவை தொடர்பான உற்பத்தி மேந்தலைகளையும் உள்ளடக்கியதாக கலவை உரத்தின் கிரயம் காணப்படுகிறது. தேசிய ரீதியில் கொள்வனவு செய்த உரம் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண வியாபார நடவடிக்கைகளில் விற்பனை செய்ய தீர்மானிக்கும் விலையில் இருந்து அதற்கான செலவினை கழித்ததன் பின்னா் தேரிய உணரக்கூடிய சொத்தின் பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது.

பாவணைப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் அதன் கிரயத்தில் வழங்கப்பட்டுள்ளது.

## 2.11 வியாபார வருமதிகள்

சாதாரண வியாபர நடவடிக்கைகளில் பண்டங்களை விற்பனை செய்ததன் பின்னா் கிடைக்க வேண்டிய வியாபார வருமதிகள் எனப்படுகிறது. கடன் அறவீடு சாதாரண செயற்பாட்டு நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படுவதுடன், அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. வருமதிகள் விலைப்பட்டியலில் பெறுமதி குறிப்பிடும் தொகையில் முதலில் அடையாளம் காணப்படுகிறது.அதை தொடர்ந்து சேதத்திற்கான ஏற்பாடுகளை கழித்ததன் பின்னா் ஆரம்ப விலைப்பட்டியலில் பெறுமதி அளவிடப்படுகிறது.

கம்பனி சகல நிதியாண்டு முடிவிலும் தமது வியாபார வருமதிகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதா இல்லையா என்று ஆய்வு செய்கிறது.கம்பனியின் கடன் திரட்டல் தொடர்பான கடந்தகால அனுவம் செலுத்தல் தாமதமாகும் நாட்கள் அதிகூடியது 90நாட்களுக்கு மேற்படுவது போன்றவை சேதங்களை கணிப்பிடும் பொழுது கவனத்தில் கொள்ளப்படும். வியாபார வருமதிகள் சேதமடைதல் மற்றும் சேதத்துக்கான நட்டத்தினை,அந்த சேதத்துக்கான சாட்சிகள் காணப்படுமாயின் மாத்திரம் ஏற்று கொள்ள வேண்டும். சகல வியாபார வருமதிகளும் சேதமடைதலுக்கு தனித்தனியாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

வியாபார வருமதிகள் சேதமடைவதை தீர்மானிப்பது பின்வரும் மாதிரிகள் முறைகளின் அடிப்படையிலாகும்.

தனித்தனியாக மதிப்பிடுதல் முறை பின்வரும் வகையான வியாபார வருமதிகள் தனித்தனியாக சேத இழப்புகள் பற்றிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

i) பலநோக்கு கூட்டுறவு சங்கம்
ii) கமநல சேவைகள் நிலையம்
iii) அனுமதிபெற்ற முகவர்கள்
iv) அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள்

### 2.12 காசும் காசுக்கு சமமானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றில் கையில் உள்ள காசு ,கேள்வி வைப்புகள் ,ஏனைய மூன்று மாதம் அல்லது அதற்கு குறைவாக முதிர்வடையும் உயர்ந்த திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பன காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும் என்ற விதத்தில் வகைப்படுத்தப்படுகிறது.

### 2.13 குறிப்பிடப்பட்ட மூலதனம்

இலங்கை அரசாங்கத்திற்கு வெளியிடப்பட்ட சாதாரண பங்குகள் உரிமையாண்மை என வகைப்படுத்தப்படுகிறது.

### 2.14 நிதிப் பொறுப்புகள்

கம்பனி, நிதிப் பொறுப்புகள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியின் ஏனைய மூலதனப் பொறுப்புகளாக, கடன், வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் வங்கி மேலதிக பற்றுகள் என்பன உள்ளடக்கப்படுகிறன. ஏனைய நிதிப் பொறுப்புகள் ஆரம்பத்தில் நேரடியாக வேறாக்கிக் கொள்ளக்கூடிய ஏனைய நடவடிக்கைகளுக்கான செலவுகளுடன் நியாயமான தொகையில் அடையாளம் காணப்படும். ஆரம்ப அடையாளம் காணப்படடதனை தொடர்ந்து பயனளிக்ககூடிய வட்டி முறையில் முறையாக குறைந்து செல்லும் கிரயத்தில் அளவிடப்படுகிறது. கம்பனி ஒப்பந்தங்களின் கீழான பிணைப்புகளை விலக்கும் பொழுது, இரத்து செய்யும் பொழுது ,அல்லது காலாவதியாகும் பொழுது நிதிப் பொறுப்புகளை அடையாளம் காண்பதனை விட்டுவிடும்.

### 2.15 வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்

சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது பொருட்கள் சேவைகளை வினியோகத்தரிடம் பெற்றுக் கொள்வதனால் அவற்றுக்கு செலுத்த வேண்டியது ஒரு பொறுப்பாகும். வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளும் சாதாரண வியாபார நடவடிக்கைகளின் போது நடைமுறைப் பொறுப்பின் கீழ் வகைப்படுத்தப்படும்.

வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் அதன் கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் நியாயமான பெறுமதியில் அடையாளம் காணப்படுகிறது. பின்னர் பணத்தின் அப்போதைய பெறுமதி முக்கியமல்லாத விடத்து மற்றும் குறுகிய காலத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் பொழுதும் அவை ஆரம்ப விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்படும்.

## 2.16 கடன் பெறுதல்

கடன் பெறுதல்கள் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட தேறிய கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் நியாயமான தொகைக்கு அடையாளம் காணப்படுகிறது.பின்னர் பயன்தரும் வட்டிவீதங்களை உபயோகித்து முறையாக குறைந்து செல்லும் கிரயத்தில் அடையாளம் காணப்படுகிறது.

## 2.17 கடன் பெறும் கிரயம்

கடன்பெறும் கிரயம் அவை குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே விரிவான வருமானக்கூற்றில் அடையாளம் காணப்படும்.

## 2.18 அரசாங்க உதவிகள்

அரசாங்க உதவி கிடைப்பதாக திருப்தியடையக்கூடிய உறுதிப்பாடு கிடைத்தால் கம்பனி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளையும் நிறைவேற்றும் வேளையில் அரசாங்க உதவிகள் அதன் நியாயமான பெறுமதியில் அடையாளம் காணப்படும்.

இறக்குமதி கிரயம் தொடர்பான உர மானியங்கள் தொடர்பான செலவுகள், அவை செலவை ஈடு செய்வதற்காக வழங்கப்படவுள்ள தொகையுடன ஒப்பிடுவதற்காக விரிவான வருமானக்கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி செலவுகளுக்காக வழங்கப்படும் மானியம் கிடைப்பதாக நம்பத்தகுந்த ஆதாரங்கள் காணப்படுமாயின் அவை கிடைக்க வேண்டிய மானியமாக குறிப்பிடப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான அரச உதவிகள் நடைமுறையற்ற பொறுப்பில் பிற்போடப்பட்ட உதவிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவை சொத்தின் எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலத்தினுள் நிரல் வடிவில் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படும்.

## 2.19 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

கால அடிப்படையில் குறிப்பிட்ட காலத்துக்கான வரி நடைமுறை வரியினையும் பிற்போடப்பட்ட வரியையும் உள்ளடக்குகிறது. வரி செலவுகள் விரிவான வருமானக்கூற்றில் அடையாளம் காண்பது அவை ஏனைய விரிவான வருமான கூற்றின் ஒரு விடயமாக கருதப்படும் அளவு வரைக்குமாகும்.இந்த விடயத்தில் வரியானது ஏனைய விரிவான வருமானக்கூற்றிலும் அடையாளம் காணப்படுகிறது.

அறிக்கை சமர்ப்பிக்கும் கால எல்லையில் காணப்படும் வரிச் சட்டத்தின்படி கம்பனியினால் பிரயோகிக்க கூடிய விதத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. வரி அரவிடும் நிறுவனங்களுக்கு செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருத்தமான தொகையின் அடிப்படையில் வரிக்கான ஏற்பாட்டினை முகாமை மேற்கொள்கிறது.

நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வரி அடிப்படைகள் மற்றும் அவை கொண்டிருக்கும் தொகைக்குமிடையில் ஏற்படும் தற்காலிக வித்தியாசத்தின் மீது பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும். இவ்வாறு இடம் பெறாத சமயம் யாதெனில். வியாபார இணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கல் இடம் பெறும் பொழுது கணக்கிடப்படும் இலாபத்துக்கு அல்லது வரிக்கு உட்பட்ட இலாபத்துக்கு அல்லது நட்டத்துக்கு தாக்கத்ததை ஏற்படுத்தாத ஆரம்பச் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றுக்கு பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு ஏற்படுத்தும் சமயமாகும்.சம்பந்தப்பட்ட பிற்போடப்பட்ட வரி சொத்து பணமாக மாற்றப்படாத சமயத்தில் அல்லது பொறுப்பில் இருந்து விடுபட்ட வேளையில் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படும் காலத்தில் மற்றும் திகதியில் வருடத்துக்காக அமுல்படுத்தக்கூடிய வட்டி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு பிற்போடப்பட்ட வருமானவரி அடையாளப்படுத்தப்படும்.

தற்காலிக வித்தியாசங்களை ஈடுபடுத்த முடியும் என்றவகையில் எதிர்காலத்தில் வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கும் சாத்தியத்தின் அளவிற்கு ஏற்ப மாத்திரமே பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அடையாளம் காணப்படுகின்றன.

நடைமுறை வரிப் பொறுப்புகளுக்கு எதிராக நடைமுறை வரிப் சொத்துக்களை பதிலீடாக கொள்வதற்கான சட்டரீதியான உரிமை ஒன்று காணப்படும் வேளையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் மற்றும் பொறுப்புகளும் பதிலீடாக கொள்ளப்படுகிறது.

## 2.20 ஊழியர்களின் நன்மைகள்

கம்பனிக்கு சொந்தமாக நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு என இரு திட்டங்கள் காணப்படுகின்றன.

### அ) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் ஊழியர்களுக்கு பின்னர் உள்ள நன்மைகள் திட்டமாகும். இதற்காக நிலையான பங்களிப்பு ஒன்றினை வேறு ஒரு நிறுவனத்துக்கு வழங்குகிறது. இந்த பங்களிப்பை செய்வதில் கம்பனிக்கு மேலும் சட்டரீதியான அல்லது வேறுவிதமான பொறுப்புகள் காணப்படவில்லை. இவை கொடுக்க வேண்டியுள்ள சமயத்தில் ஊழியர் நன்மைச் செலவாக அடையாளம் காணப்படுகிறது.

கம்பனி ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்காக முறையே 15% மற்றும் 3% த்தினை ஊழியர்களின் மொத்த லாபத்துக்கு ஏற்ப செலுத்துகிறது.

### ஆ) நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டம்

அறிக்கை சமர்ப்பிக்கும் கால முடிவில் நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடப்பாட்டின் நடைமுறைப் பெறுமதியே நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டத்தினது கம்பனியின் பொறுப்பாக காணப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட திட்டத்தின் பொறுப்பு தகுதி வாய்ந்த சுயாதீன கணக்கியல் நிபுணர் ஒருவரின் மூலம் தெளிவுபடுத்தப்பட்ட அலகு வரவு முறைப்படி (Unit credit method) கணக்கிடப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி எதிர்கால நன்மையினை அதாவது ஊழியர்கள் சேவைகளுக்காக தற்போது மற்றும் இதற்கு முன்னர் பெற்றுக் கொண்ட பிரதி பலன்களை தள்ளுபடி செய்தே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனுபவமிக்க செம்மையாக்கல் மற்றும் ஆயுள் அளவு ரீதியிலான மதிப்பீடு காரணமாக ஏற்படக்கூடிய ஆயுள் அளவு ரீதியிலான பெறுகைகள் மற்றும் இழப்புகள் என்பன அவை ஏற்பட்ட கால கட்டத்திலேயே விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. நிதிக்கூற்றுகளில் குறிப்பிட்ட தொகை அடையாளப்படுத்தப்படும் பொழுது கம்பனி அதன் நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடப்பாட்டினை அடையாளம் காண்கிறது.இத்தொகை அறிக்கை சமர்ப்பிக்கும் வருட இறுதியில் நிர்ணயிக்கப்படவுள்ள தொகையில் இருந்து பொருள் ரீதியில் தள்ளிவைக்கப்படும்.

ஓய்வுகால நன்மை கடப்பாடுக்கு வெளியில் இருந்து நிதி வழங்கப்படவில்லை.

### இ) குறுகிய கால ஊழியர் நன்மை

குறுகியகால ஊழியர் நன்மை கடப்பாடுகள் ஊழியர்களினால் வழங்கப்படும் சேவைக்கு வழங்கப்படவுள்ள பெறுமதி தள்ளுபடிகள் இன்றி அளவிடப்படுகிறது.

## 2.21 ஏற்பாடுகளும் தற்செயலான பொறுப்புகளும்

கடந்தகால நிகழ்வுகள் காரணமாக பொருளாதார நன்மைகள் வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் அந்த தொகை சம்பந்தமாக திருப்திப்படக்கூடிய விதத்தில் கணக்கிட முடியுமாயின் அந்த பொறுப்பினை ஈடு செய்வதற்கான சட்டரீதியாக அல்லது வேறு விதமான பொறுப்பு காணப்படுமாயின் அவை தொடர்பாக செயற்பாட்டு செலவாக அடையாளம் காணப்படுகிறது.

அறிக்கை சமர்ப்பிக்கும் தினத்தில் ஏற்பாடு ஒன்றினை செலுத்தி தீர்ப்பதற்கு தற்போதைய பொறுப்பினை சரியான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆபத்தினையும் மற்றும் நிச்சமற்ற தன்மையையும் உள்ளடக்கியதாக இந்த ஏற்பாடுகள் அடையாளம் காணப்படுகின்றன.

வளங்களின் ஒரு வெளிப்பாய்சலுக்கான சாத்தியம் தொலைவில் காணப்படவில்லையாயின் சகல தற்செயலான பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளில் ஒரு குறிப்பாக வெளிக்காட்டப்படுகிறது.

## 2.22 வருமானத்தினை அடையாளம் காணல்

கம்பனி பின்வரும் விதத்தில் பிரதானமாக வழங்கப்பட்ட சேவைகளின் அடிப்படையில் வருமானத்தினை அடையாளம் காணப்படுகிறது. கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய மானிய பெறுமதியில் மற்றும் பொருட்கள் விற்பனையினால் காட்டப்படுவது வருமதிகளாக உள்ள தொகையாகும். பெறுமதிசேர்வரி மற்றும் தேசத்ததை கட்டியெழுப்புவதற்கான வரி (தே.கட்எ.வரி) என்பவற்றை கழித்து வருமானம் அடையாளம் காணப்படுகிறது. எதிர்கால பொருளாதார நன்மைகளின் அளவினை நிச்சயமாகவோ அல்லது நம்பகரமாகவோ அளந்து வெளிக்காட்டப்படுவதன் மூலம் கம்பனியின் வருமானம் அடையாளம் காணப்படுகிறது.

கம்பனி பின்வரும் விதத்தில் அடையாளம் காணக்கூடிய பிரதானமாக வழங்கப்பட்ட சேவைகளின் அடிப்படையில் வருமானத்தினை அடையாளம் காண்கிறது.

### அ) உரவிற்பனை

கம்பனி நேரடி மற்றும் கலந்த உர வகைகளை இறக்குமதி செய்து மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்கிறது. பொருள் சம்பந்தமான பிரதான ஆபத்து மற்றும் நன்மைகள் வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் வேளையில் அதாவது களஞ்சியத்தில் இருந்து பொருட்கள் வெளியிடும் பொழுது வருமானம் அடையாளம் காணப்படுகிறது.

### ஆ) வட்டி வருமானம்

பயனளிக்கக்கூடிய வட்டிவீதத்தினை உபயோகித்து வட்டி வருமானம் அடையாளம் காணப்படுகிறது.

### இ) வாடகை வருமானம்

குத்தகை ஒப்பந்த காலத்தில் இயல்பாக அதிகரித்தல் அடிப்படையில் வாடகை வருமானம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### ஈ) ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனையின் போது இலாபம்,நட்டம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அது கொண்டுள்ள பெறுமதியினை விற்பனை செய்யும் பொழுது காணப்படும் பெறுமதியினையும் ஒப்பீட்டு விரிவான வருமானக் கூற்றில் இலாபம் அல்லது நட்டம் என அடையாளப் படுத்தப்படுகிறது.

### உ) ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் இயல்பாக அதிகரித்தல் அடிப்படையில் அடையாளம் காணப்படும்.

## 2.23 செலவுகள்

அறிக்கை சமர்ப்பிக்கும் கால கட்டத்தினுள் இலாபத்தினை கணக்கிடும் பொழுது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்த சகல செலவுகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

## 2.24 அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் இடம் பெற்ற விடயங்கள்

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகள் கருத்தில் கொள்ளப்பட்டு தேவையான இடங்களில் செம்மையாக்கல் அல்லது வெளிக்காட்டல் இந்த நிதிக்கூற்றுக்கான குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2.25 பொறுப்புகள்

அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதியில் நிதி கூற்றுகளில் அடையாளம் காணப்பட வேண்டிய மற்றும் செம்மையாக்கப்பட வேண்டிய சகல பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.26 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களும்.**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது முகாமையினால் சொத்து ,பொறுப்பு வருமானம் மற்றும் செலவு என்பவற்றை அளவிடுவதற்கு பல முடிவுகள்,மதிப்பீடுகள், மற்றும் தீர்மானங்களையும் எடுக்கிறது.

**2.26.1 பின்வரும் கணக்கீட்டு தீர்மானங்களை பின்பற்றும் பொழுது விஷேட அவதானிப்புகள் செய்யப்படும் அவை நிதிக்கூற்றுகளுக்கு விஷேட தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.**

**(அ) பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை அடையாளம் காணல்**

ஈடுபடுத்தக்கூடிய பிற்போடப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சாத்தியமான வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மதிப்பீட்டுடன் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினை அடையாளம் காணமுடியும்.

**2.26.2 சொத்துக்கல் பொறுப்புகள்,வருமானம்.மற்றும் லெவினை அடையாளம் காணும் போது மற்றும் அளவிடும் பொழுதும் விஷே தாக்கத்தினை ஏற்படுத்தும் மதிப்பீடு மற்றும் எடுகோள்கள் பற்றிய தகவல் வருமாறு**

**(அ) பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய சொத்தின் பாவனைக் காலம்**

சொத்தின் ஆயுட்காலம் எதிர்பார்க்கப்படும் சேதங்களின் மீது முகாமையினால் சகல அறிக்கை சமர்ப்பிக்கும் தினத்திலும் சொத்தின் எதிர்பார்க்கப்படும் பொருளாதார பயன்பாடு அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யத்தக்க சொத்துகளின் பயனளிக்கும் ஆயுட்காலம் சம்பந்தமாக மதிப்பீடு மீள கருத்தில் கொள்ளப்படும் தொழில் நுட்பரீதியில் காலம் கடந்தது சம்பந்தமாக மதிப்பீடுகளில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக மென் பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்ப உபகரணங்களின் ஆயுட்காலம் சம்பந்தமான மாற்றங்கள் ஏற்படலாம்.

**(ஆ)நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டம்**

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்ட கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி பல காரணிகளில் தங்கியுள்ளது. அதாவது பல எண்ணங்களுடன் ஆயுள் அளவு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட பல காரணிகளின் மீது நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்ட கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி தங்கியுள்ளது. கழிவு வீதம் உட்பட நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டத்தின் தேரிய கிரயம் மற்றும் கடப்பாடுகள் என்பவற்றை நிர்ணயிப்பதற்காக இந்த எண்ணங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த எண்ணங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின் நிர்ணயிக்கப்பட்ட நன்மை கடப்பாட்டின் முன்னெடுத்து செல்லும் தொகையில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும்.

(இலங்கை ரூபாவில்)

| 3 | வருமானம் | | 2014 மார்ச் | 2013 |
|---|---|---|---|---|
| | மொத்த வருமானம் | | 2,585,461,395 | 2,472,787,219 |
| | கழி:- தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரி | | (21,911,668) | (22,654,403) |
| | | | **2,563,549,727** | **2,450,132,816** |

| 4 | விற்பனைக் கிரயம் | | | |
|---|---|---|---|---|
| | கொள்வனவு | (குறிப்பு 4.1) | 1,640,562,990 | 998,919,088 |
| | நேரடி செலவுகள் | (குறிப்பு 4.2) | 414,275,191 | 613,400,995 |
| | **உற்பத்தி கிரயம்** | | **2,054,838,180** | **1,612,320,083** |
| | ஏப்ரல் 1ல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் | | 287,058,889 | 503,187,525 |
| | மார்ச் 31ல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் | | (353,814,803) | (287,058,889) |
| | | | **1,988,082,266** | **1,828,448,719** |

| 4.1 | கொள்வனவுகள் | | |
|---|---|---|---|
| | உரக் கொள்வனவு பற்றுச் சீட்டுகள் | 14,332,252,236 | 17,082,884,609 |
| | காப்புறுதி | 15,876,076 | 26,793,573 |
| | சுங்கவரி மற்றும்சுங்க கட்டணங்கள் | 5,438 | - |
| | துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி | 750,198,629 | 856,507,229 |
| | விடுவிப்பதற்கான செலவுகள் | 4,746,029 | 3,545,915 |
| | நிலத்தில் இறக்குவதற்கான கட்டணம் | 23,619,226 | 21,965,965 |
| | கப்பலில் பொருள் ஏற்றவும் இறக்கவும் செலுத்தும் கட்டணம் | 187,222,746 | 149,293,323 |
| | நானாவிதம் (சுங்கம்) | 1,952,532 | 6,570,313 |
| | நானாவிதம் (இலங்கை துறைமுக அதிகார சபை) | 3,313,565 | 5,597,771 |
| | கப்பலில் இறக்குவதற்கான கட்டணம் | - | (3,486,307) |
| | மாதிரி பரிசோதிப்புக் கட்டணம் | 3,387,564 | 8,882,769 |
| | போக்குவரத்து மற்றும் கையாழுகைக் கட்டணம் | 250,874,144 | 234,828,726 |
| | கடன்பத்திர கட்டணங்கள் | 108,180,105 | 81,139,101 |
| | வங்கி கட்டணங்கள் | 795,721 | 717,765 |
| | உள்ளூர் கொள்வனவு | 47,570,780 | 34,872,760 |
| | பொதியிடல் பொருட்கள் | 31,281,046 | 32,849,735 |
| | கப்பலில் அனுப்பல் உத்தரவாத கட்டணங்கள் | 3,146,493 | (841,978) |
| | மாற்றல் அடைந்தவை/இழப்பு | (3,057,911) | 103,521,575 |
| | | 15,761,364,419 | 18,645,642,845 |
